438

GEOGRAPHY

Tinnevelly District

3149

18 JAN 1939
MADRA



E. M. GOPALAKRISHNA KONE

MADURA. MADRAS.

திருநெல்வேலி ஜில்லா பூகோளம்

915.482 [1]

P. R. சாமி பி. ஏ., எல். டி., (Geo.)
M. J. பாண்டியராஜ்,
உதவி ஆசிரியர்கள், ஸெயின்ட் ஸேவியர்ஸ் காலேஜ்,
பாளையங்கோட்டை.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
மதுரை :: :: சென்னை
1938
ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 5.

First Edition:—1938.

பொருள் அடக்கம்.

—(::)—

எண்.		பக்கம்.
1.	பொது விபரம்	1
	படங்களும், பிளான்களும்	2
2.	இயற்கை அமைப்பு	5
3.	திருநெல்வேலி நகரம்	9
4.	ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம்	12
	(1) தரை மார்க்கம்	13
	(2) கடற்பாதை	17
	(3) இருப்புப் பாதை	21
5.	சீதோஷ்ண ஸ்திதி	24
6.	தாதுப்பொருள்கள்	27
7.	நீர்ப்பாசனம்	29
8.	விளைபொருள்கள்	33
9.	கைத்தொழில்	35
10.	வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி	37
11.	மக்கள், சமயம், மொழி, கல்வி	39
12.	அரசாட்சி	40
	(1) அரசாட்சி முறை	41
	(2) அரசாட்சிப் பிரிவு	42
13.	தாலுகாக்களும் முக்கிய ஊர்களும்	43
	(1) திருநெல்வேலித் தாலுகா	,,
	(2) தென்காசித் தாலுகா	46
	(3) சங்கரநயினர் கோவில் தாலுகா	48
	(4) கோவில்பட்டித் தாலுகா	50
	(5) ஸ்ரீவைகுண்டம் தாலுகா	52
	(6) திருச்செந்தூர் தாலுகா	54
	(7) நாங்குநேரித் தாலுகா	56
	(8) அம்பாசமுத்திரம் தாலுகா	57
14.	திருநெல்வேலி ஜில்லா சரித்திரச் சுருக்கம்	60
15.	உலக விஷயங்கள்.	62

படங்கள்.

1.	தென் இந்தியாப் படம்	1
2.	திருநெல்வேலி ஜில்லா மலைகளும், நதிகளும், குளங்களும்	4
3.	திருநெல்வேலி டவுன்	10
4.	சாலை, கடல் மார்க்கம், ஜனங்கள், மதம் பாஷை	14
5.	மண்வகை, இருப்புப்பாதை, விளை பொருள்கள்	22
6.	பிராணிகள், தாதுப்பொருள்கள்	26
7.	கைத்தொழில்	34
8.	வியாபாரம்	38
9.	தாலுகாக்களும், முக்கிய பட்டணங் களும்	44

—()—

சித்திரப்படங்கள்.

எண்.		பக்கம்.
1.	திசைப்படம்	1
2.	திசைகாட்டும் படம்	2
3.	திக்குப்படம்	,,
4.	திசைகாட்டும் கருவிப்படம்	3
5.	காகிதத்தில் வரையப்பட்டிருக்கும் படம்	,,
6.	வாசிக்கும் அறைப்படம்	,,
7.	நெல்லையப்பர் கோவில்	9
8.	பாளையங்கோட்டை ஊசிக்கோபுரம்	12
9.	மோட்டார்கார்	13
10.	பாபநாசம் ஹார்வி மில்	15
11.	பாபநாசம் அணைக்கட்டுத் தேக்கம்	,,
12.	படகு	17
13.	கன்னியாகுமரி முனை	,,
14.	தீபஸ்தம்பம்	18
15.	குலசேகரப்பட்டினம்	,,
16.	ஆலந்தலை கெபி: கோவில்	,,
17.	திருச்செந்தூர் கோவில்	19
18.	தூத்துக்குடி ஹார்பர்	,,
19.	திருநெல்வேலி ஜங்ஷன்	21
20.	காற்றுப்படம்	24
21.	தென்மேற்குப் பருவக்காற்று	25
22.	வடகிழக்குப் பருவக்காற்று	25
23.	மிருகங்கள், பறவைகள்	28
24.	தாம்பிரவர்ணிப்பாலம்	30
25.	விளைபொருள்கள்	32
26.	நெசவு	36
27.	மீன் பிடித்தல்	,,
28.	கைராட்டினம்	,,
29.	ஸெண்டினெரி ஹால், பாளையங்கோட்டை	43
30.	திருக்குற்றாலம்	47
31.	சங்கரநயினார் கோவில்	49
32.	கழுகுமலை	50
33.	எட்டையபுரம் அரண்மனை	,,
34.	ஆதிச்சநல்லூர் பறம்பு	52
35.	காயல்பட்டினம் பள்ளிவாசல்	54
36.	திருக்குறுங்குடி	56
37.	உலகப்படம்	62
38.	ஆகாய விமானம்	63
39.	இமயமலைச் சிகரம்	,,
40.	புல்வெளி மைதானம்	,,
41.	எஸ்கிமோ வீடு	,,
42.	ஆஸ்திரேலியா தங்கச்சுரங்கம்	65

திருநெல்வேலி ஜில்லா பூகோளம்.

முதல் பாடம்.

பொது விபரம்.

பிள்ளைகளே! நாம் வசிப்பது எந்தத் தேசமென்று உங்களுக்குத் தெரியுமா? அதற்கு இந்தியா தேசம் என்று பெயர். நாம் இந்தியாவின் தென் பாகத்தில் வசிக்கிறோம். நாம் வசிக்கும் பாகத்திற்குத் தென் இந்தியா என்று பெயர். அதன் படத்தைப் பாருங்கள். அதன் வடிவம் முக்கோணமாகவும், அடிப்புறம் படத்தின் மேற் பாகத்திலும், நுனிப்புறம் அடிப் பாகத்திலும் இருக்கின்றன.



திசைப் படம்

இப்படத்தின் நான்கு திக்குகளும் எவை? படத்தைச் சுவரில் தொங்கவிட்டுப் பார்த்தால், மேற்பாகம் வடக்குத் திக்கையும், வலப் பாகம் கிழக்குத் திக்கையும், அடிப்பாகம் தெற்குத் திக்கையும், இடப்பாகம் மேற்குத் திக்கையும் காட்டும். படத்தை நன்ருய்ப் பார்த்து, அதன் எல்லைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். வட பாகத்தில் நிஜாம் இராஜ்யம், மத்திய மாகாணங்கள், பீஹார், ஒரிஸாவும் மற்ற பாகங்களில் சற்றேறக்குறைய சமுத்திரமும் சூழ்ந்திருக்கின்றன.

இப்படத்தை நன்ருய்ப் பரிசீலனை செய்து பார்த்தால், இது அரசாட்சிக்



தென் இந்தியா படம்

காகப் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதில் சென்னை இராஜதானி என்று பெயரிட்டிருக்கிற பாகத்தைக் கவனியுங்கள். அது இந்தியாவின் தெற்கிலும், தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இவ்வாறு பல இராஜ

தானிகள் நமது தேசத்தில் இருக்கின்றன.

சென்னை இராஜதானியின் தென் பாகத்தில் நாம் வசிக்கிறோம். அதற்குத் திருநெல்வேலி ஜில்லா என்பது பெயர். இம்மாதிரி பல ஜில்லாக்களைக் கொண்டது நம் சென்னை இராஜதானி. நாம் இப்பொழுது கற்றுக்கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளம். நமது ஜில்லாவானது இராஜதானியின் கடைசியில் அமைந்திருக்கிற தென்பது உங்களுக்குத் தெரியும்.

படங்களும், பிளான்களும்.

நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். வடக்கே இராமநாதபுரம் ஜில்லாவும், தெற்கிலும், கிழக்கிலும் மன்னார் குடாக்கடலும், மேற்கே மேற்குத்தொடர்ச்சி மலையும், திருவாங்கூர் இராஜ்யமும் நமது ஜில்லாவுக்கு எல்லைகளாக உள்ளன.

பூகோளப் பாடங்கள் கற்றுக்கொள்ளுவதற்கு, முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. முன்னே கூறியவாறு படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதன் நான்கு திக்குகளிலும் உள்ள எல்லைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஒரு பூபாகத்தின் படத்தை எப்படி வரைவதென்று தெரிந்துகொள்ளவேண்டும். படங்களில்லாமல் தெரிந்து கொள்ளுவதைக் காட்டிலும், படங்களைப் பார்த்துப் பூகோள விஷயங்கள் கற்றுக்கொள்ளுவது சுலபமாயும், மனத்தில் நன்றாய்ப் பதியக்கூடியதாயுமிருக்கும்.

அதிகாலையில் சூரியன் உதிக்கும் திக்கை நோக்கி நின்றால், நான்கு திக்குகளையும் சுலபமாய் அறியலாம். சூரியன் உதயமாகும்



திசைதான் கிழக்கு. நமது முதுகுப்புறம் இருக்கும் திசை மேற்கு. வலக்கைப்புறம் தெற்கு. இடக்கைப்புறம் வடக்கு. இந்நான்கு திசைகளுக்கும்



திக்குப் படம்

இடையிடையே தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. இத்திசைகளைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ள ஒரு கருவி கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்குத் "திசை காட்டும் கருவி" என்று பெயர். ஆங்கிலத்தில் 'காம்பஸ்' (Compass) என்று சொல்லப்படும்.



திசை காட்டும் கருவிப் படம்

நாமிருக்கும் ஊரோ, நமது ஜில்லாவோ மிகவும் பெரிதாயிருந்த போதிலும், அதை நாம் காகிதத்தில் படமாக வரைந்து காண்பிக்கத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஏனென்றால், பூகோள சாஸ்திரத்தைப் படிக்கப் படங்கள் இன்றியமையாதவை. ஒருவன் ஒரு வீடோ, அல்லது ஒரு சிறு குடிசையோ கட்டவேண்டுமென்று உத்தேசித்தால், முதன் முதலில் அதற்கு நிலப்படம் (Plan) தயாரித்துக் கொள்ளுகிறான். அதாவது, வீட்டின் நான்கெல்லைகளையும், அதனுடைய நீளம், அகலம், உட்புறத்திலுள்ள அறை, கூடம், தாழ்வாரம் முதலியவற்றின் விஸ்தீரணங்களையும், அமைப்பையும் ஒருவன் நிலப்படமாக வரைந்து கொள்ளுகிறான். ஒரு ரப்பர்த்துண்டு, புத்தகம், கண்ணாடி முதலிய சிறு சாமான்களின் தரைப்படத்தைச் சுலபமாக வரைந்து விடலாம். கண்ணாடியை ஒருகாகிதத்தின்மேல் வைத்து, அதன் நான்கு மூலைகளையும் எழுதுகோலின் நுனியால் குறித்துப் பிறகு கண்ணாடியை எடுத்து விட்டுக் குறிப்பிட்ட நான்கு மூலைகளையும் சேர்த்துப் பார்த்தால், அது கண்ணாடியின் அளவாகும். ஒரு பெரிய பலகையின் தரைப்படத்தைக் காகிதத்தில் குறிப்பதென்பது முடியாத காரியம். அதற்காகப் பலகையின் அகல நீளத்தை அளந்து பார்க்கவேண்டும். அப்பலகை இரண்டடி நீளமும், ஒரு அடி அகலமும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். காகிதத்தின்மேல் ஒரு அங்குலத்துக்கு ஒரு அடி வைத்துக் கொண்டு, அகல நீளங்களை வரைந்தால், அது அப்பலகையின் படமாகும்.

படம் வரையப் பட்டிருக்கும் காகிதத்தில் பின் வருமாறு குறித்து வைப்பது அவசியமாகும். இவ்வா



அளவு=1 அடி=1 அங்குலம்

றே நாம் வசிக்கும் அறைகளின் தரைப் படத்தை வரைந்து, அதிலுள்ள ஜன்னல்கள், வாசற்படிகள், தூண்கள் ஆகிய இவைகளைக் குறித்துக் காட்டுங்கள்.



வாசிக்கும் அறைப் படம்

நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். அதன் அடிப்புறத்தில் ஸ்கேல் 1 அங்குலம் = 12 மைல் என்று எழுதப்பட்டிருக்கிற தல்லவா? அதற்கு என்ன அர்த்தம்? அதாவது படத்தில் 1 அங்குல தூரம் நமது ஜில்லாவில் 12 மைல் தூரத்தைக்

திருநெல்வேலி ஜில்லா
மலைகளும், நதிகளும், குளங்களும்.
இராமநாதபுரம் ஜில்லா
வ
சிவகிரிக்குளம்
தென்மலைக்குளம்
வைப்பாறு
சங்கரநயினார்கோவில் தாலுகா
தென்காசி தாலுகா
குருமலை
வைப்பாறு
மலட்டாறு ஓடை
கோவில்பட்டி தாலுகா
ஊற்றுமலை
வீராணம்குளம்
பாவூர்குளம்
சிற்றாறு
மானூர்குளம்
திருநெல்வேலி தாலுகா
குன்னத்தூர்குன்று
கடனாநதி
முள்ளிமலை
தாம்பிரவர்ணி
ஸ்ரீவைகுண்டம் தாலுகா
வல்லநாட்டுப்போற்றை
நயினர்குளம்
தாம்பிரவர்ணி
அம்பாசமுத்திரம் தாலுகா
மணிமுத்தாறு
சிவந்திப்பட்டி
பறம்பு
வெள்ளூர்குளம்
கடம்பன்குளம்
தென்கரைக்குளம்
திருச்செந்தூர் தாலுகா
நட்டாறு
அகஸ்தியர் மலை
மஹேந்திர கிரி
கன்னிமார்குளம்
நாங்குநேரி தாலுகா
விஜயநாராயணம் குளம்
நம்பியாறு
திருவாங்கூர் ராஜ்யம்
மன்னார் வளைகுடா
மலைகள்
நதிகள்
குளங்கள்
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

காட்டும் என்பதாம். இதிலிருந்து நமக்கு அப்படத்தில் ஓரிடத்திலிருந்து, மற்றோரிடத்திற்குள்ள தூரம் எத்தனை அங்குலமோ அத்தனை 12 மைல் என்று தெரிகிறதல்லவா ?

1 அங்குல நீளமும், 1 அங்குல அகலமும் உள்ள ஒரு சதுரத்தின் பரப்பு 1 சதுர அங்குலம் எனப்படும். இந்த ஜில்லாப் படத்தில் ஒரு சதுர அங்குலம் $12 \times 12 = 144$ சதுர மைல் ஆகுமல்லவா? நமது ஜில்லாவின் விஸ்தீரணம், சுமார் 4336 சதுரமைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கேள்விகள்.

1. நாம் வசிப்பது எந்தத் தேசம் ?
2. அதன் உட்பிரிவுகள் என்ன ?
3. திருநெல்வேலி ஜில்லா எந்த உட்பிரிவைச் சேர்ந்தது ?
4. நமது ஜில்லா நம் தேசத்தின் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது ?
5. நான்கு திக்குகளை எப்படிக் கண்டு பிடிப்பாய் ?
6. ஒரு படத்தின் திசைகளை எப்படிக் கண்டு பிடிப்பாய் ?
7. நமது ஜில்லாவின் எல்லைகளைச் சொல்லு.
8. ஒரு புத்தகத்தின் பிளான் வரைகிற தென்றால் என்ன செய்வாய் ?
9. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமிருந்தால், அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய் ?
10. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒருபொதுவான கட்டடத்தின் பிளானை வரைந்துகாட்டு.
11. நமது ஜில்லாவின் விஸ்தீரண மென்ன?

இரண்டாம் பாடம்.

இயற்கை அமைப்பு.

1. எல்லைகள்.

பிள்ளைகளே! நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். நமது ஜில்லாவானது இராஜதானியின் தென் கோடியில் அமைந்திருக்கிற தென்பது தெரியும். மேற்கே மேற்குத் தொடர்ச்சிமலை, திருவாங்கூர் இராஜ்யமும், வடக்கே இராமநாதபுரம் ஜில்லாவும், கிழக்கிலும், தெற்கிலும் மன்னார் குடாக்கடலும் எல்லைகளாக உள்ளன.

2. மலைகள்.

நமது ஜில்லாவின் மேற்கு எல்லையாக அமைந்திருப்பவை மேற்குத் தொடர்ச்சி மலைகள். இவை, தென் கோடியில் இருக்கின்ற கன்னியாகுமரியிலிருந்து தொடர்ச்சியாக மேற்கே அமைந்திருக்கின்றன. இம்மலைத் தொடருக்குத்தான் மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். இதற்கு மேற்கில் திருவாங்கூர் இராஜ்யம் இருக்கிறது. ஆரியன்காவு, ஆரவாய்மொழி என்னும் கணவாய்களின் மூலம், இவ்விரண்டு நாட்டிற்கும் போக்கு வரவு நடந்து வருகிறது. இரண்டு நாடுகளுக்கும் நடுவிலிருக்கும் மலைவழிக்குக் கணவாய் என்று பெயர்.

மலையின் உச்சியைச் சிகரம் எனச் சொல்லுவார்கள். இம்மலைத் தொடரிலுள்ள உயர்ந்த சிகரங்களாவன:— அகத்தியர் மலை. (பொதிகைமலை) பணகுடிக்குப் பக்கத்தில் இருக்கும் மகேந்திரகிரி.

அகஸ்தியர்மலை:—அம்பாசமுத்திரம் தாலூகாவில் இருக்கிறது. இதனுடைய உயரம் 6132 அடி. இதன் வடக்கில் பாபநாசம் இருக்கிறது.

மகேந்திரகிரி:—நாங்குநேரித் தாலூகாவில் இருக்கிறது. இதன் உயரம் 5427 அடி.

மலை இலாகாவில் நமது ஜில்லாவில் உள்ள மலைகளை நான்காகப் பிரித்திருக்கிறார்கள். அவை:— நாங்குநேரி, குடமாடி, கன்னிகட்டி, குற்றாலம் முதலியவைகளாம்.

3. பொற்றைகள்.

குருமலை:— இதற்குக் குருடமலை என்று மற்றொரு பெயரும் உண்டு. இது கோவிற்பட்டிக்குத் தெற்கில் இருக்கிறது. இம்மலையில் சிறந்த மூலிகைகள் இருக்கின்றன. மான், கலை, முயல் முதலியவைகள் மிகுதியாக வசிக்கின்றன.

ஊற்றுமலை:— ஊற்றுமலை ஜமீன் தென்காசித் தாலூகாவில் கிழக்குப் பாகத்தில் இருக்கிறது. இங்குச் சுண்டைக்காய் அதிகமாகக் கிடைக்கும். மான், கலை இவை அதிகம்.

வல்லநாட்டுப் பொற்றை:—இது ஸ்ரீவைகுண்டம் தாலூகாவிலுள்ள ஒரு சிறிய குன்று. இங்கே புல்வாய், முயல் முதலியவைகள் உண்டு.

சிவந்திப்பட்டிப் பறம்பு:— இது பாளையங் கோட்டைக்குக் கிழக்கே இருக்கிறது.

சூட்டுப் பொற்றை:—இது நாங்குநேரித் தாலூகாவின் மேற்குப் பாகத்தில் இருக்கிறது. இங்குக் கள்ளர் குகை இருக்கின்றது.

முள்ளி மலை:—இது அம்பாசமுத்திரம் தாலூகாவில் கடையத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது.

கன்னிமார் பொற்றை:— இது நாங்குநேரிக்குச் சமீபத்தில் உள்ளது.

குன்னத்தூர் குன்று:—இது திருநெல்வேலிக்குத் தென்மேற்கிலிருக்கிறது. இதிலிருந்து ரஸ்தாக்களுக்கு வேண்டிய சரளைக்கற்களும், வீடுகட்டுவதற்கு வேண்டிய கற்களும் எடுக்கப்படுகின்றன.

இக்குன்றுகளில் விசேஷமாக உயர்ந்த ஜாதி மரங்கள் உண்டாவதில்லை. ஆனாலும் விறகுக்கு உபயோகப்படக் கூடிய சிற்சில மரங்கள் இங்கு ஏராளமாக வளர்கின்றன.

4. நதிகள்.

பிள்ளைகளே! படத்தைப் பாருங்கள். நமது ஜில்லாவின் மேற்குப் பிரதேசம் மலைப்பிரதேசம் அல்லவா? ஆகையால் அம்மலைகளில் தோன்றும் நதிகள் சமவெளிப் பிரதேசமாகிய பள்ளத்தில் கிழக்கு நோக்கி ஓடி வருகின்றன. அவைகளைப் பற்றிக் கவனிப்போம்.

தாம்பிரவர்ணி:— இந்நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகை மலையில் உற்பத்தியாகி, அங்கிருந்து சிறிது தூரம் வந்து பாபநாசத்தில் நீர்வீழ்ச்சியாக வீழ்கிறது. பிறகு அம்பாசமுத்திரம் தாலூகாவில் கிழக்கு நோக்கியும், ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் தென்கிழக்கு நோக்கியும் சென்று, ஆத்தூருக்குக் கிழக்கே மன்னார்குடாக்கடலில் கலக்கிறது. இந்நதி ஏறக்குறைய எழுபது மைல் நீளம் உள்

ளது. சிற்ருறு, பச்சையாறு, மணிமுத்தாறு முதலியவைகள் இந்நதியின் உபநதிகள்.

தாம்பிரவர்ணி நதிக் கரையில், அல்லது பக்கத்தில் இருக்கும் முக்கிய பட்டணங்கள்:—விக்கிரம சிங்கபுரம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேர்மாதேவி, கோபாலசமுத்திரம், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, ஸ்ரீ வைகுண்டம், தென்கரை, ஆழ்வார் திருநகரி முதலியனவாம்.

சிற்ருறு:—(சித்திராநதி) தாம்பிரவர்ணியின் உபநதிகளுள் இது பெரியது. இந்நதி தென்காசித் தாலூகாவில் குற்ருலத்துக்குப் பக்கத்தில் உற்பத்தியாகிக் கிழக்காகவும், தென்கிழக்காகவும் ஓடிச் சீவலப்பேரிக்குப் பக்கத்தில் தாம்பிரவர்ணியில் சேருகிறது. அதிலிருந்து ஆறு கால்வாய்கள் பிரிந்து சென்று, நன்செய் நிலங்களின் நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகப்படுகின்றன.

பச்சையாறு:—நாங்குநேரித் தாலூகாவில் உள்ள களக்காடு மலைகளே இதன் உற்பத்திஸ்தானம். இது வடகிழக்காக ஓடித் தருவை என்னும் ஊருக்குப் பக்கத்தில் பாளையங்கால்லைச் சந்தித்துத் தாம்பிரவர்ணியில் சேருகிறது. மிகவும் மேடான இடத்திலிருந்து அதிகப் பள்ளத்தை நோக்கிச் செல்வதால் இதன் நீரோட்டம் அதிக வேகமாக இருக்கிறது.

கருணையாறு:—(கடனுநதி)இது அம்பாசமுத்திரம் தாலூகாவில் வடமேற்குப்பாகத்து மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றது. பிறகு திருப்புடைமருதூர் என்னும் ஊருக்குப் பக்கத்தில் தாம்பிரவர்ணியில் சேருகிறது.

வைப்பாறு:—இது சங்கரநயினுர் கோவில் தாலூகாவின் மேற்கில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றது. அத்தாலூகாவிலும், இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாக்களின் வழியாகவும் ஓடிப் பிறகு, இந்த ஜில்லாவில் உள்ள கோவில்பட்டித் தாலூகாவின் வழியாகச் சென்று வைப்பாறு பட்டணத்திற்குப் பக்கத்தில் மன்னுர்குடாக்கடலில் கலக்கிறது.

நட்டாறு:— இது நாங்குநேரித் தாலூகாவின் கீழ்ப்பாகத்தில் உற்பத்தியாகிறது. பிறகு அத்தாலூகாவிலும், திருச்செந்தூர்த் தாலூகாவிலும் பாய்ந்து மணப்பாடு என்னும் பட்டணத்திற்குப் பக்கத்தில் கடலில் கலக்கிறது.

திருக்குறுங்குடியாறு:—(நம்பியாறு) இது நாங்குநேரித் தாலூகாவில் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றது. பிறகு அத்தாலூகாவில் தென்கிழக்காக ஓடித் தோட்டவெளிக்குப் பக்கத்தில் கடலில் கலக்கிறது.

மணிமுத்தாறு:—(மணிமுத்தாநதி) இது மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றது. பிறகு கன்னடியன்கால் பிரியும் இடத்திற்கு அருகில் தாம்பிரவர்ணியில் கலக்கிறது.

5. சமவெளிகள்.

நமது ஜில்லாவை இயற்கை அமைப்புக்குத் தக்கபடி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை: (1) மலைப் பிரதேசம், (2) நதிப்பிரதேசம், (3) மணற்பிரதேசம், (4) கரிசல்பிரதேசம், (5) செம்மண் பிரதேசம் என்பனவாம். நதிகள் பாயும் பிரதே

சத்தை நதிப்பிரதேசம் எனலாம். இப்பிரதேசம் வண்டல் மண்ணால் ஆனது. மிகவும் செழிப்பாகவும் இருக்கும். ஆதலால் இங்கு நெல் செழிப்பாக வளருகிறது.

நமது ஜில்லாவின் கடற்கரை யோரம் மணல் நிறைந்திருக்கிறது. இதை மணற்பிரதேசம் என்று சொல்லலாம். இதில் தேரிகள் என்று சொல்லப்படும் பல மணற் குவியல்கள் உண்டு. வடபாகம் கறுப்பு மண் உள்ள கரிசல் பிரதேசம். தென்பாகம் சிவப்பு மண் உள்ள செம்மண் பிரதேசம்.

6. காடுகள்.

மேற்கூறிய மலைநாடுகளில் அல்லாமல், சமவெளிகளிலும் சில காடுகள் இருக்கின்றன. அக்காடுகளில் பெரும்பாலும் மரம், செடிகொடிகளும், முட்களும் நிறைந்திருக்கின்றன. பல காடுகள் அரசாங்க மேற்பார்வையிலும், சில பஞ்சாயத்தார் ஆதிக்கத்திலும் இருக்கின்றன. வேறு சில போர்ட் டிரஸ்ட் ஆதிக்கத்திலும், சிற்சில பொதுத்தொண்டு இலாகாவின் (பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட்) அதிகாரத்திலும் அமைந்துள்ளன.

அவற்றுள் அரசாங்க மேற்பார்வையில் உள்ளவை: 1. ஸ்ரீவைகுண்டம் காடுகள். 2. வல்லநாட்டுக் காடுகள். 3. குதிரை மொழித்தேரி.

பஞ்சாயத்தாருக்குக் கீழ்ப்பட்டவை: 1. ஸ்ரீவைகுண்டம் காடுகள். 2. குற்றாலம் காடுகள்.

போர்ட் டிரஸ்ட் ஆதிக்கத்தில் உள்ளவை: முள்ளிக்காடு முதலியன.

பொதுத்தொண்டு இலாகாவுக்குள் அடங்கியவை: கலியாவூர் காடு முதலியன.

கேள்விகள்.

1. நமது ஜில்லாவின் எல்லைகளைக் கூறுக.
2. நமது ஜில்லாவில் உள்ள முக்கிய மலை எது?
3. கணவாய் என்றால் என்ன? அதனால் நமக்கு என்ன அநுகூலம்?
4. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள ஒவ்வொரு சிகரங்களின் உயரமென்ன?
5. நமது ஜில்லாவிலுள்ள மலைகளை எத்தனை வகையாகப் பிரித்திருக்கிறார்கள்? அவை யாவை? அவைகள் எவ்வெத் தாலுகாவில் உள்ளன? படம் வரைந்து காட்டுக.
6. எவ்வெத் தாலுகாவில் பொற்றைகள் இருக்கின்றன?
7. குறிப்பெழுதுக:—குருமலை, ஊற்றுமலை.
8. தாம்பிரவர்ணி நதி எங்கு உற்பத்தியாகிறது? இதன் உபநதிகள் எவை?
9. சிற்றாற்றைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
10. வைப்பாறு, மணிமுத்தாறு இவைகள் எங்கு முடிவடைகின்றன?
11. நிலத்தின் தன்மையை நோக்கி நமது ஜில்லாவை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
12. நமது ஜில்லாவிலுள்ள காடுகள் எவரெவர் மேற்பார்வையில் இருக்கின்றன? அவைகளில் என்னென்ன உண்டாகின்றன?

உலாவுதல்.

பிள்ளைகளை வெளியில் அழைத்துச் சென்று மேடு, பள்ளம் இவற்றைக் காட்டவும்.

பயிற்சி.

களிமண், கல், மணல், புல், கோலம் இவற்றைக் கொண்டு மலை அமைத்து விளையாடலாம்.

மூன்றும் பாடம்.

திருநெல்வேலி நகரம்.

நமது ஜில்லாவின் தலைமைப் பட்டணம் திருநெல்வேலி நகரம் ஆகும். இது தாம்பிரவர்ணி என்ற பொருநை ஆற்றங்கரையில் அமைந்திருக்கிறது. இது ஒரு முனிசிபல் டவுன். திருநெல்வேலியைச் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் வெவ்வேறு பேருண்டு. அவை:— திருநெல்வேலி டவுன், பேட்டை, திருநெல்வேலி ஜங்ஷன், கைலாசபுரம், சிந்துபூந்துறை, மீனுட்சிபுரம் முதலியனவாம். இவற்றைச்சுற்றிப் பார்ப்போம்.

திருநெல்வேலியைச் சுற்றி நீங்கள் காண்பது என்ன? அழகிய நெல் வயல்களைப் பார்க்கிறீர்கள் அல்லவா? நெல் வயல்கள் வேலிபோலச் சுற்றி இருப்பதால் இவ்வூருக்கு இப்பெயர் வந்ததெனச் சொல்லுகிருர்கள்.



நெல்லையப்பர் கோவில்

இதற்கு ஒரு கதையும் உண்டு: முன் காலத்தில் சிவபக்தர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் இவர் கோவிலின் பிரகாரத்தில் நெல்லை உலரப் போட்டுவிட்டு வெளியே சென்றிருந்தார். அப்பொழுது அதிக மழை பெய்தது. ஆயினும் நெல்லின்மீது மழை ஒரு துளிகூட விழவில்லையாம். அதற்கு வேலிபோல் நின்று காப்பாற்றிய அச்சுவாமிக்கு நெல்வேலி நாதர் (நெல்லையப்பர்) என்றும், அவ்வூருக்குத் திருநெல்வேலி என்றும் பெயர்கள் வந்தன. இதன் பெயரே ஜில்லாவுக்கும் வந்துள்ளது.

திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து மேற்காகத் திருவனந்தபுரத்துக்கும், தெற்காகத் திருச்செந்தூருக்கும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன.

ஜங்ஷனில் மதுரைத்திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜும், புத்தகக்கடைகளும், பழக்கடைகளும்,


திருநெல்வேலி டவுன்

ஷாப்புகளும், சந்திரவிலாஸ் முதலிய ஹோட்டல்களும் இருக்கின்றன.

ஜங்ஷனிலிருந்து திருநெல்வேலிடவுன், பேட்டை முதலிய இடங்களுக்கு ஒரு மோட்டாரில் ஏறிச் செல்லுவோம். கார் மேற்கு நோக்கிச் செல்லுகிறது.

நெல்லையப்பர் ரோட்டில், சினிமாக்கொட்டகை, இரும்புக் கடைகள், போலீஸ்ஸ்டேஷன், போஸ்டாபீஸ், மிருக ஆஸ்பத்திரி, இம்பீரியல் பாங்கு, ஸி. எம். ஹைஸ்கூல், முனிசிபல் ஆபீஸ், தாலுகா ஆபீஸ், டிரெயினிங் ஸ்கூல், வெள்ளிவிழா வளைவு, தாமரைக்குளம், தெப்பக்குளம், நயினர்குளம் முதலியவைகளையும், நடுவே வயல்களையும் பார்க்கிறோம். கார், திருநெல்வேலி டவுன் கீழரதவீதியில் உள்ள நெல்லையப்பர் கோவிலுக்குமுன்னால்வந்துவிட்டது.

நகரின் நடுவே நெல்லையப்பர் கோவில் அமைந்திருக்கிறது. காந்திமதி அம்மன் என்பது அம்பாளின் பெயர். இக்கோவில் மிக அழகாகக் கட்டப்பெற்றிருக்கிறது. காந்திமதி அம்மன் கோவிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபம், வசந்த மண்டபம், தெப்பக்குளம் முதலியவைகள் மிகவும் அலங்காரமாக இருக்கின்றன. நெல்லையப்பர் கோவிலில் தாம்பிர சபை, வெள்ளித்தேர் முதலியன அமைந்து இருக்கின்றன. இக்கோவிலின் நான்கு வெளி வாசல்களிலும் நான்கு உயர்ந்த கோபுரங்கள் இருக்கின்றன. இவ்வூருக்குத் தலபுராணமும் இருக்கிறது. கோவிலைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் ரதவீதிகள் அமைந்திருக்கின்றன. அவைகள் கீழ ரதவீதி, தெற்கு ரதவீதி, மேலரதவீதி, வடக்கு ரதவீதி என்பன.

கீழ ரதவீதியில் ஜவுளி, வெள்ளி முதலிய பாத்திரக்கடைகள், பூதத்தான் முக்கு, தென்னிந்தியா, திருவனந்தபுரம் முதலிய பாங்குகள், வாகையடி முக்கு முதலியன இருக்கின்றன. வாகையடிமுக்கு வழியாகத் திருநெல்வேலி டவுன் ஸ்டேஷனுக்குப் போகும் பாதையில் ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல் இருக்கிறது.

தெற்கு ரதவீதியில் சில பாங்குகளும், மருந்துக்கடைகளும், சந்திப்பிள்ளையார்கோவில் முக்கும் இருக்கின்றன.

மேல ரதவீதியில் அச்சுயந்திர சாலைகள், ஷாப்புகள், காசுக்கடைகள் தகரப்பெட்டிகள், பலசரக்கு, எண்ணெய், ஜவுளி, மரம் முதலிய கடைகளும், அழகாக அமைந்திருக்கின்ற மேடைத்தளவாய் முதலியார் அரண்மனையும், அரசாங்க ஆசிரியை மாணவர் பள்ளிக்கூடமும் உள்ளன.

வடக்கு ரதவீதியில் பாத்திரக் கடைகளும், அச்சுயந்திர சாலைகளும், பலசரக்கு, ஷாப்பு முதலிய கடைகளும் இருக்கின்றன.

குற்றாலம் போகும் சாலையில் ஸி. எம். காலேஜ் கட்டிடத்தில் ஒரு பள்ளிக்கூடமும், மருத்துவச்சாலையும், தினசரி காய்கறிச்சந்தை, வாரச்சந்தை கூடுகின்ற இடமும், ஒரு சினிமாக் கொட்டகையும், மேற்கில் புராட்டஸ்டண்டு ஆசிரியை மாணவர் பள்ளிக்கூடமும் அமைந்துள்ளன.

வேளாளர், கார்காத்தார், செங்குந்தர் முதலிய வகுப்பினர் இங்கு மிகுதியாக வசிக்கின்றனர். மகமதியர், கிறிஸ்தவர் முதலிய வகுப்பினரும் இருக்கின்றனர். வாணிபம், சாயங்காய்ச்சுதல், நெசவு, வேளாண்

மை முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன.

இனி, சந்திப் பிள்ளையார் கோவில் முக்கு வழியாகப் பேட்டைக்குச் செல்வோம். இது வியாபாரம் பெருத்த இடம். இங்கு மிளகாய் வற்றல், வெங்காயம், எள்ளு முதலிய மால்கள் நிறைந்திருக்கின்றன. இவ்வூரில் தகரப்பெட்டிகள், வெங்கல, பித்தளைப் பாத்திரங்கள் செய்வதுடன், பாய்களும் நெய்கிறார்கள்.

பிறகு இங்கிருந்து பாளையங் கோட்டைக்குப் புறப்படுவோம். வழியிலுள்ள சுலோசன முதலியார் பாலத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற கொக்கிரகுளத்தில் நீதிஸ்தலங்கள் உள்ளன.



பாளையங்கோட்டை ஊசிக்கோபுரம்

வண்ணார் பேட்டைக்கு அப்புறம் உள்ள பாளையங் கோட்டையில் ஊசிக் கோபுரம், டிரெயினிங் ஸ்கூல், நூற்றாண்டு மண்டபம், ஜில்லா பெரிய ஆஸ்பத்திரி, எக்ஸ்ரே இன்ஸ்டிடியூட், முனிசிபல் ஆபீஸ், 3 காலேஜுகள், 2 ஹைஸ்கூல்கள், பார்ஸ்டல் ஸ்கூல் இவைகளைப் பார்க்கிறோம்.

கேள்விகள்.

1. திருநெல்வேலி நகர் எந்த ஆற்றங்கரையில் இருக்கிறது?
2. இதன் பல பிரிவுகள் எவை?
3. இங்குள்ள கோவிலின் சிறப்பென்ன ?
4. இந்நகரின் நான்கு ரத வீதிகளையும் வருணிக்க.
5. இங்குள்ளவர்களின் குலம், சமயம், தொழில் எவ்வெவை?
6. இந்நகருக்கு இப்பெயர் வரக் காரணம் என்ன?
7. நெல்லையப்பர் கோவிலிலிருந்து, சுலோசனமுதலியார் பாலம்வரை நீ காண்பவை எவை?
8. இங்குள்ள குளங்களைக் குறிப்பிடுக.
9. நீதி ஸ்தலங்கள் எங்கே இருக்கின்றன?
10. பாளையங் கோட்டையைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது.

நான்காம் பாடம்.

ஜில்லாவின் சுற்றுப்பிரயாணம்.

சிறுவர்களே! இந்த ஜில்லாவின் முக்கியமான தோற்றங்களை ஒருவன் அறிய விரும்பினால் அதைச் சுற்றிப் பார்ப்பது அவசியமாகிறது. அப்படிப் பிரயாணம் செய்வதற்குப் பலவித வசதிகள் இருக்கின்றன. அவைகள்: (1) ரோடு அல்லது தரை மார்க்கம், (2) கடற் பாதை, (3) ரயில் பாதை என்பனவாம்.



மோட்டார் கார்

(1) தரை மார்க்கம்.

நாம் பாளையங்கோட்டையிலிருந்து ஓர் மோட்டாரில்ஏறிக்கொண்டு தரை மார்க்கமாகப் புறப்படுவோம். புறப்பட்டுத் தெற்கு நோக்கி மூன்றடைப்பு வழியாக நாங்குநேரி வந்துவிட்டோம். சாலையின் இருபக்கங்களிலும் செவ்வலும், சரலும்கலந்த நிலம் காணப்படுகிறது. அந்த நிலத்தில் பனை, உடை முதலிய மரங்களும் நிற்கின்றன. நிலம் வறண்டிருப்பதால் எள், பயறு முதலிய சில புன்செய்த் தானியங்கள் தான் இங்குப் பயிராகும். இவ்வூரிலிருந்து கீழ்த்திசை நோக்கிப் போகும் சாலை திசையன்விளை வழியாக இடையன்குடிக்குப் போகின்றது. வள்ளியூர்ப் பக்கமாக விஜயாபதிக்குக் குறுக்காகச் சாலை ஒன்று உண்டு. அதன் பக்கமாக மங்கம்மாள் சாலை ஒன்று திருச்செந்தூர் வரையும் சிதைந்து கிடக்கின்றது. இவற்றைச் சுற்றியுள்ள மணற்காடுகளில் பனையும், உடையும் நன்றாக வளருகின்றன. சில இடங்களில் வாழையும் செழிப்பாக உண்டாகின்றது.

நாங்குநேரியிலிருந்துநேர் தெற்கே நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரம், கன்னியாகுமரி முதலிய ஊர்களுக்குப் போகும் சாலை இருக்கிறது. இருபக்கங்களிலும் செவ்வலும், சரலும் கலந்த நிலம் காணப்படுகிறது. அந்நிலத்தில் சில இடங்களில் கேப்பை, சோளம், கம்பு, தினை, எள், பயறு முதலியனவும், பனையும் பயிராகின்றன. பணகுடிக்குத் தெற்கேயுள்ள விலக்கிலிருந்து வடக்கன்குளத்திற்கு ஒரு ரஸ்தா செல்லுகிறது. இவ்வூர் மாதுளம் பழத்திற்குப் பேர்போனது.

மோட்டார் களக்காட்டுக்குச் செல்கின்றது. தெற்கே திருக்குறுங்குடி என்னும் ஊர் இருக்கிறது. மலைக்குள் சென்றால் நம்பிகோயிலுக்குப் பக்கத்தில் நம்பியாறு மேற்கிலிருந்து ஓடிவருகிறது. சேர்மாதேவி வந்துவிட்டோம். கிழக்கில் திருநெல்வேலிக்குப் போகும் சாலை இருக்கிறது. மேற்கில் வீரவநல்லூரைக் கடந்து கல்லிடைக்குறிச்சிக்கு வருகிறோம். வயல்களின் வளப்பத்தைப் பார். இவை தாம்பிரவர்ணி நீர்ப்பாசனத்தால்செழிப்படைந்த இடங்கள்.

இதிலிருந்து தென்மேற்காகப் பிரிந்துபோகும் சாலை சிங்கம்பட்டிக்குப் போகின்றது. அங்குள்ள ஜமீன் அரண்மனை, சிங்காரத் தோப்பு இவைகள் மிகஅழகானவை. காப்பி, தேயிலை முதலியன பயிராகும் மலைகளைக் கடந்து வான தீர்த்தம் வரைக்கும் சாலை இருக்கிறது.இதோ அம்பாசமுத்திரம் வந்துவிட்டோம். பக்கங்களில் உள்ள சிறு சிறு பொற்றைகளையும், சரலும், செவ்வலும் கலந்த வெளிகளையும் பார். கொஞ்ச தூரத்திற்கு அப்புறம் இருதயகுளம் பள்ளிக்கூடமும், மாதா கோவிலும் தெரிகின்றன. விக்கிரமசிங்க புரத்தைக் கடந்தோம்.

பாபநாசத்திற்கு வந்துவிட்டோம். தென் கிழக்குப் பக்கத்தில் தெரிவதுதான் பாபநாசம் நூல்நூற்கும் இயந்திரசாலை. இது தண்ணீரினாலும், நெருப்பினாலும் ஓடுகிறது. இங்கு அநேக ஆயிரம் கூலியாட்கள் வேலை செய்கிறார்கள். மேலே போ


திருநெல்வேலி ஜில்லா
சாலை,கடல்மார்கம்,ஜனங்கள்,மதம்,பாஷை
இராமநாதபுரம் ஜில்லா
ஸ்ரீவில்லி புத்தூர்க்கு
சங்கரநயினர்கோவில்
மதுரைக்கு
அருப்புக்கோட்டைக்கு
பாசாரப்பட்டி
முத்தலாபுரம்
நாகலாபுரம்
தமிழ்
சிவகிரி
சங்கரநயினர்கோவில்
புளியங்குடி
சங்கரநயினர்கோவில் தாலுகா
கோவில்பட்டி
எட்டையபுரம்
கழுகுமலை
தமிழ்
மகமதியர்
கடையநல்லூர்
தமிழ்
கோவில்பட்டி தாலுகா
விளாத்திகுளம்
எப்போதும் வென்றான்
வேம்பார்
கயத்தார்
தெலுங்கு
தென்காசி
தென்காசி தாலுகா
குளத்தூர்
வைப்பாறு
மலட்டாறு ஓடை
பாவூர்சத்திரம்
மானூர்
தமிழ்
கங்கைகொண்டான்
குருக்குச்சாலை
ஒட்டப்பிடாரம்
ஆலங்குளம்
திருநெல்வேலி தாலுகா
திருநெல்வேலி
கடையம்
பொட்டல்புதூர்
மணியாச்சி
தூத்துக்குடி
முக்கூடல்
பாளையங்கோட்டை
தமிழ்
முயல்தீவு
தமிழ்
அம்பாசமுத்திரம்
சேர்மாதேவி
கல்லிடைக்குறிச்சி
மகமதியர் அதிகஜன நெருக்கம்
ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீவை குண்டம் தாலுகா
அம்பாசமுத்திர தாலுகா
பொருநையாறு கழிமுகம்
புன்னைக்காயல்
ஆழ்வார் திருநகரி
காயல் பட்டணம்
களக்காடு
வீரபாண்டியம் பட்டணம்
நாங்குநேரி தாலுகா
நாங்குநேரி
தமிழ்
திருச்செந்தூர் தாலுகா
மகமதியர் கிறிஸ்திவர் அதிகம்
திருச்செந்தூர்
ஆலந்தலை
குலசேகரபட்டணம்
நட்டாறு முகத்துவாரம்
மணப்பாடு
திருக்குறுங்குடி
ஏர்வாடி
வள்ளியூர்
பணகுடி
தமிழ்
திசையன்விளை
குட்டம்
மன்னார் வளைகுடா
வ
திருவாங்கூர்
திருவனந்தபுரத்திற்கு
ராஜ்யம்
ஜனக் குறைவு
உவரி
நம்பியாறு முகத்துவாரம்
கூத்தன்குளி
விஜயாபதி
இடிந்தகரை
அனுமநதி முகத்துவாரம்
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

னுல் அகத்தியர் அருவியும், கலியாணி தீர்த்தமும் இருப்பதைப் பார்க்கலாம். சாலே முண்டந்துறைக்குச் சென்று வானதீர்த்தம், கன்னிகட்டி, குடமாடி முதலிய இடங்களுக்குப் பிரிந்து



பாபநாசம் ஹார்வி மில்

போகின்றது. இங்குள்ள பிரதேசம் நல்ல வண்டல் மண் நிறைந்தது. தேக்கு, நாங்கு, கோங்கு முதலிய மரங்களும், பழமரங்களும் இங்கு மிகுதியாக வளருகின்றன. இப்பொ



பாபநாசம் அணைக்கட்டுத் தேக்கம்

ழுது புதிதாகக் கட்ட ஆரம்பித்திருக்கும் அணைக்கட்டுத் தேக்கமும் அதன் அருகில்தான் இருக்கின்றது.

பாபநாசத்துக்கு வடக்கில் உள்ள ஆம்பூர் இருப்புப் பாதையையும், ஊரையும் கடந்து கருணையாற்றைத் தாண்டினேம். ஆழ்வார் குறிச்சி, பொட்டல்புதூர் வழியாகக் கடையத்தைப் பார்த்துக்கொண்டு தென்காசி வந்து சேர்ந்தோம். கடையத்தில் எலுமிச்சம் பழம் அதிகமாகக் கிடைக்கும். இங்குள்ள செழித்த செவ்வல் நிலங்களில் நெற்பயிரும், தோட்டப் பயிர்களும் வளர்ந்திருப்பதைப் பார். தென்காசியிலிருந்து பாவூர், ஆலங்குளம் வழியாகத் திருநெல்வேலிக்குச் சாலே போகின்றது. இரு பக்கங்களிலும் உள்ள சரலும், செவ்வலும் கலந்த நிலங்களில் உளுந்து, மொச்சை முதலிய பயறுகளும், கத்தரியும், பருத்தியும், பனையும் செழிப்பாக இருப்பதைப் பார்.

நாம் குற்றுலம் போகிறேம். வழியில் வயல்களும், சோலேகளும் வளப்பமாக இருப்பதைக் கவனி. அருவியின் அழகையும், பங்களாக்களேயும், அடர்ந்துள்ள சோலேயின் செழிப்பையும் பார். இலஞ்சி வந்து சேர்ந்தோம். செங்கோட்டைக்குப் போகும் சாலேயும் அதோ இருக்கிறது. நாம் குத்துக்கல் வலசைப் பக்கமாகக் கடையநல்லூரைக் கடக்கிறேம். வழியில் சோளம், பயறு, தினே முதலியவைகள் செழித்து வளருவதைப்பார். சொக்கம்பட்டி, புளியங்குடி, வாசுதேவநல்லூர் இவைகளேப் பார்த்துக்கொண்டு சிவகிரி வந்துவிட்டோம். வயல்களேயும், தோட்டங்களேயும், பனே முதலிய மரங்களேயும் பார். இவ்வழியாக இராஜபாளேயம், ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய ஊர்களுக்குப் போகலாம்.

நாம் புளியங்குடியி லிருந்து, சங்கரன்கோவிலுக்கு வந்து விட்டோம். இங்கிருந்து தேவர்குளம், அழகியபாண்டியபுரம், மானூர் முதலிய ஊர்களைப் பார்த்துக்கொண்டு திருநெல்வேலிக்கு வருகிறோம். வரும் வழியின் இருபக்கங்களிலும் நன்செய்ப் பயிர்களும், புன்செய்ப்பயிர்களும் செழித்திருப்பதைப் பார்.

காரில் கங்கைகொண்டான், கயத்தாறு இவைகளின் வழியாகக் கோவில்பட்டிக்கு வந்து விட்டோம். இங்குள்ள கரிசல் நிலங்களில் பருத்தி, சோளம், கம்பு இவைகள் செழிப்பாக வளர்ந்திருப்பதைப் பார். இதிலிருந்து ஓர் சாலை, கழுகுமலை வழியாகச் சங்கரன்கோவிலுக்குப் போகிறது. அடுத்த சாலை எட்டையபுரம், விளாத்திகுளம், குளத்தூர், ஓட்டப்பிடாரம், மணியாச்சி இவைகளின் வழியாகத் தச்சநல்லூர் வந்து வீரராகவ புரத்தை அடைகிறது. இடையில் உள்ள நிலங்கள் வண்டல் மண் கலந்த கரிசல் பூமி. இதில் பருத்தி, கேழ்வரகு, கம்பு, சோளம், பயறு முதலியவைகள் விளைகின்றன. நாம் எட்டையபுரம், எப்போதுவென்றான், குறுக்குச்சாலை இவைகளின் வழியாகத் தூத்துக்குடிக்கு வந்து விட்டோம். எங்கும் கரிசல் பூமி. இங்குப் பருத்தி, கம்பு முதலியன விளைகின்றன.

தூத்துக்குடியை விட்டுப் புறப்பட்டுப் புதுக்கோட்டை வந்து ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி வழியாகத் திருச்செந்தூருக்கு வந்தோம். இங்குள்ள கரிசல் நிலங்களில் பருத்தியும், மணற் பாங்கான இடங்களில் உடையும், பனையும் செழித்து வளர்ந்திருப்பதைப் பார். பிறகு அவ்வூரைவிட்டு நாசரேத்திற்கு வந்து விட்டோம்.

இங்கேயிருந்து மெஞ்ஞானபுரத்துக்குப் போகிறோம். பிறகு சாத்தாங்குளம் வழியாக இட்டமொழிக்கு வருகிறோம். இங்கிருந்து ஒரு சாலை திசையன்விளைக்குப் போகிறது. சாத்தாங்குளத்திலிருந்து முதலூருக்கு ஒரு சாலை போகிறது. நாம் செய்துங்கநல்லூர், பாளையங்கோட்டை வழியாகத் திருநெல்வேலிக்கு வந்து விட்டோம். இங்குள்ள மணல் பகுதியில் பனை, உடை முதலிய மரங்களும், கத்தரி, புடலை முதலிய புன்செய்ப் பயிர்களும் வளர்ந்திருப்பதைப் பார். மேற்கில் உள்ள காடுகளில் எள்ளு, அவரி, முதலியனவும் பனை, முள்மரங்களும் செழிப்புற்றிருப்பதைப் பார்.

கேள்விகள்.

1. குற்றாலத்திலிருந்து ஆலங்குளம் வழியாகத் திருச்செந்தூருக்குச் சாலைவழியிற் போகும் பொழுது இடையே எந்தெந்தத் தாலூகாக்களைச் சந்திக்கலாம்?
2. அச்சாலையில் உள்ள முக்கிய ஊர்கள் எவை?
3. அங்கே என்னென்ன வகையான நிலங்கள் காணப்படுகின்றன? என்னென்ன விளைபொருள்கள் இருக்கின்றன?
4. பணகுடிக்கும், கோவில்பட்டிக்கும் போகும் சாலையில் எந்தெந்தத் தாலூகாக்களைச் சந்திக்கலாம்?
5. அங்கே என்னென்ன வகையான மண்கள் காணப்படுகின்றன? எந்தெந்த ஊர்களைத் தாண்டவேண்டும்? அங்குள்ள விளைபொருள்கள் என்னென்ன?
6. திருநெல்வேலியி லிருந்து வேறு சாலைகள் வழியாக நீ எந்தெந்த இடங்களுக்குப் போவாய்?

7. அவ்வழியில் நீ எந்தெந்த ஊர்களைப் பார்ப்பாய்? அங்கு என்னென்ன பயிராகின்றன?

8. திருக்குறுங்குடி, சிங்கப்பட்டி, ஆலங்குளம், கழுகுமலை, எட்டையபுரம், திசையன்விளை இவைகள் எவ்வெச் சாலைகளில் இருக்கின்றன? படத்தில் குறிப்பிடுக.

(2) கடற் பாதை.



படகு

நாம் கன்னியாகுமரி முனையிலிருந்து ஒரு படகில் ஏறிக்கொண்டு செல்வோம். கடலில் எங்குப் பார்த்தாலும் கட்டுமரங்கள் மிதக்கின்றன. அதிக தூரம் வரையில் தோணிகள் தெரிகின்றன பார்.

கன்னியாகுமரி முனை

நமது ஜில்லாவின் கடற்கரையில் உள்ள தென்கோடிக்கு வந்துவிட்டோம். சங்கு, சிப்பி, கடல்நுரை, பாசி, பவளக்கொடி முதலியவைகள் அலையினால் ஒதுக்கப்படுகின்றன பார். கடற்கரை யோரங்களில் பரதமக்கள் திரிகின்றதைப் பார்.

அதோ தெரிகின்ற மீன் குவியல்களைப் பார். ஒவ்வொரு மடிக்காரரும் முதன் முதலாகக் கோவிலுக்கு என்று மீனைக் காணிக்கையாக எடுத்துப் போடுகிறார்கள். மற்றைய மீன்களை ஏலம் போடுவதைப் பார். மீதம் உள்ளதை உப்பினால் பக்குவப்படுத்திக் கருவாடாகச்செய்து சிங்கிகுளம், திசையன்விளை முதலிய சந்தைகளில் விலை ஆக்கிவிடுகிறார்கள்.

பக்கத்தில் விஜயாபதி என்னும் ஊர் இருக்கிறது. இப்பொழுது கூத்தங்குழிக்கு வந்துவிட்டோம். சர்வேசன் கோவில் தெரிகின்றது பார். அங்குக் கன்னியர் மடமும், பள்ளிக்கூடமும் இருக்கின்றன. பங்குக்குரு ஒருவர் இருக்கிறார். நம்பி ஆற்றின் முகத்துவாரம் அதோ தெரிகின்றது பார். படகுகளும், பனந்தோப்புகளும் காணப்படுகின்றன.

அதிக தூரத்தில் கோபுரம் தெரிகின்றது பார். அதுதான் புனிதர் அந்தோனிமுனிவர் கோவில். உவரி என்னும் ஊரைப்பார். இந்த இடத்தை எல்லோரும் புண்ணிய ஸ்தலமாகக் கொண்டாடுகிறார்கள். இங்கு எப்பொழுதும் ஒரே கூட்டமாக இருக்கும். இங்கே கண் இல்லாதவர்கள் கண் பெறுகிறார்கள். நோயாளிகள் குணம் அடைகிறார்கள். பேய் பிடித்தவர்களும் நீங்கப் பெறுகிறார்கள். வருடந்தோறும் திருவிழாக் கொண்டாடப் படுகிறது. நமது நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் இங்கே ஜனங்கள் வருகிறார்கள். இங்குப் பங்குக் குருவும் இருக்கின்றார். கன்னியர் மடமும் உண்டு.

பக்கத்தில் பெயர்பெற்ற சுயம்புலிங்க சாத்தான் கோவில் இருக்கிறது.

கரையோரமாகச் சென்று குட்டம் சேர்ந்தோம். ஆதிகாலத்திலிருந்து குட்டத்து நாடார்கள் புகழ் வாய்ந்தவர்கள். தாழை என்னும் ஊர் இதுதான். இங்கு மீன் பிடிக்கும் தொழில் அதிகம். இதைத் திருச்செந்தூர் தாலூகாவின் தெற்கு எல்லை என்று கூறலாம்.



தீபஸ்தம்பம்

அதோ தீபஸ்தம்பம் தெரிகின்றது பார். அந்த ஊருக்கு மணப்பாடு என்று பெயர். இங்கே உள்ள மாதா கோவில் அதிகப் பணச்செலவில் அழகாகக் கட்டப்பட்டு இருக்கிறது. பக்கத்தில் நட்டாறு கடலில் விழுவதைப் பார். இவ்வூரில் அழகான மாளிகைகள் நிறைந்து இருக்கின்றன. இவ்வளவு அழகான ஊர் நமது ஜில்லாவில் எங்குமே இல்லை. இங்குள்ள பரதமக்கள் கல்வி, வாணிபம் இவைகளில் தேர்ந்து நாகரிகமாக இருக்கின்றார்கள். பள்ளிக்கூடமும், கன்னியர் மடமும் இங்கு இருக்கின்றன. பங்குக்குருவும் இருக்கிறார்.



குலசேகரப் பட்டினம்

குலசேகரப் பட்டினத்தைப்பார். இது குலசேகர பாண்டியனால் ஏற்படுத்தப்பட்டது. இங்கு மகமதியர்கள் மிகுதி. வாணிபம் அதிகம். பனை ஓலையாலும், நாராலும் முடையப்பட்ட கூடை, பெட்டி முதலியவைகளும், கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு முதலியனவும் இலங்கை, மலையாளம் முதலிய இடங்களுக்குப் படகுகள் மூலமாக ஏற்றுமதியாகின்றன. தேங்காய், கயிறு, ஓடு முதலியவைகள் இறக்குமதியாகின்றன. ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தனித்தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.



ஆலந்தலை கெபி: கோவில்

இப்பொழுது ஆலந்தலைக்கு வந்து விட்டோம். பரதவர்களையும்,

கட்டு மரங்களையும் பார். புகழ்பெற்ற திருஇருதய அரசர் கெபி ஒன்று இருக்கின்றது. இங்குக் கன்னியர் மடம், ஆண், பெண் பள்ளிக்கூடங்கள், கோவில் முதலியன இருக்கின்றன. பங்குக்குருவும் இருக்கின்றார்.



திருச்செந்தூர் கோவில்

திருச்செந்தூருக்கு வந்துவிட்டோம். சிறந்த முருகன் கோவிலின் அழகையும், குகையையும் பார். பிரயாணிகள் தங்கும் விடுதி. நீதிமன்றம், டானியல் தாமஸ்பங்களா முதலியவற்றைப் பார்.

அதோ வீரபாண்டியன் பட்டினம் இருக்கிறது. நாகரிகத்தில் சிறந்த பரதவர்கள் இங்கு வசிக்கிறார்கள். கோவில், கன்னியர் மடம், ஆண், பெண் பள்ளிக்கூடங்கள் முதலியவைகள் உள்ளன. பங்குக்குருவும் இருக்கிறார். படகு காயல்பட்டினத்தைத் தாண்டுகிறது. இங்கு மகமதிய வியாபாரிகள் அதிகம். பள்ளிவாசல் இருக்கிறது. அது பாக்டாட் நகரில் இருப்பதைப் போன்றது. ஆதிகாலத்தில் கெய்ரோவிலிருந்து வந்த வாணிபர்கள் தங்கிய இடமாக இதைக் கூறுவார்கள். உப்பளமும் இருக்கிறது. புன்னக்காயலைக் கடக்கின்றோம். இதுதான் பொருநையாற்றின் கழிமுகம். ஒரு காலத்தில் முத்துச்சிப்பிகள் விளைந்த இடமென்று இதைச் சொல்வார்கள்.



தூத்துக்குடி ஹார்பர்

ஸ்ரீவைகுண்டம் தாலுகா எல்லையை அடைந்தோம். தூத்துக்குடி அதோ தெரிகின்றது. அதற்குத் திருமந்திர நகர் என்ற பெயரும் உண்டு. அது முன்னாளிலேயே பெருமைவாய்ந்தது. பக்கத்தில் முத்துக்குளிக்கும் துறைமுகம் இருக்கின்றது. ஆகையால் இதற்கு முத்துக்குளித்துறை என்ற பெயரும் உண்டு. சவரியானு மாளிகையைப் பார். இது இயேசு சபைக் குருக்களுக்குச் சொந்தமானது. உப்பளங்களைப் பார். பாத்திகளின் அழகையும், தொழிலாளர்கள் வேலை செய்வதையும் பார். ரோச் விக்டோரியா அவர்களது பங்களாவும், இம்பீரியல் பாங்கு முதலிய மற்றைய கட்டிடங்களும் அழகாக விளங்குவதைப் பார். கத்தோலிக்க மேற்றிராணியார் இவ்வூரில் இருக்கிறார். கத்தோலிக்க ஆண்பிள்ளைகளுக்குப் புனிதர் சவரியார் ஹைஸ்கூலும், பெண்களுக்குப் புனித அலோஷியஸ் ஹோலிக்ராஸ் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இதைத் தவிர கால்டுவெல் ஹைஸ்கூலும்,

எஸ். ஏ. வி. ஹைஸ்கூலும், ஐரோப்பியப் பெண்கள் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவைகளுள் முதலில் கூறிய ஹைஸ்கூலைப் புராட்டஸ்டண்டு மதத்தினர் நடத்திவருகின்றனர். பரதவர்கள் ஆதிகாலத்திலிருந்து பெரிய வியாபாரிகள். இலங்கைக்கு இவர்கள் வாணிபத்தின் பொருட்டுச் செல்வார்கள். இங்கே அநேக நாடார்கள் பெரிய வியாபாரிகளாக இருக்கிறார்கள். இங்குச் சுங்கச்சாவடி இருக்கிறது. டிவிஷனல் ஆபீஸர், ஆப்காரி சர்க்கிள், இன்கம்டாக்ஸ் ஆபீஸர் முதலியவர்கள் இருக்கின்றார்கள்.

முறப்பநாட்டிலிருந்து, குடிதண்ணீர், குழாய் மூலம் இங்கு வருகிறது. மின்சார உற்பத்தி நிலையம் இருக்கிறது. இதிலிருந்துதான் பாளையங்கோட்டை, திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு மின்சாரம் வருகிறது. மின்சார விளக்குகளோடு விளங்கும் தெருக்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. இது பெரிய முனிசிபல் நகரம். இங்கே தினசரிச் சந்தை உண்டு. பலசரக்கு மளிகைகளும், பட்டு, பஞ்சு இவைகளாலாகிய ஜவுளிக் கடைகளும், வெண்கலப் பாத்திரம், நகைக்கடைகளும் அமைந்திருக்கின்றன. இது பெரிய துறைமுகப் பட்டினம். இதைச் சென்னபட்டணத்திற்கு இரண்டாவதாகச் சொல்லலாம். கண்ணடி, நிலக்கரி, இரும்பு, மண்ணெண்ணெய் முதலிய அயல் நாட்டுப் பொருள்கள் இங்கு இறக்குமதியாவதைப் பார். அவுரி, வெங்காயம், மிளகாய்வற்றல், தானியங்கள், தோல், கருப்புக்கட்டி, தென்னம் சவரி, பனைநார் முதலியவைகள் இலங்கை முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதைப் பார்.

பஞ்சாலைகளும், நூல்நூற்கும் சாலைகளும் இங்கு இருக்கின்றன. இவற்றில் ஏராளமான எளியமக்கள் வேலைசெய்து பிழைக்கிறார்கள். பக்கத்தில் முயல்தீவு இருக்கின்றது. இது தான் கப்பல் நிற்கின்ற இடம். தீபஸ்தம்பம் இருப்பதைக் கவனி. தென்னிந்திய புகைவண்டிப் பாதை இங்கே முடிவடைவதைப் பார். இங்கு வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் கப்பல் வரும்.

நாம் கோவில்பட்டித் தாலுகாவின் கடற்கரை யோரமாகப் போகிறோம். அதோ குளத்தூரைப் பார். இதோ மலட்டாற்று ஓடை கடலோடு கலக்கிறது. வைப்பாறு வந்து கடலில் விழும் காட்சியைப் பார்.

வேம்பாறு வந்துவிட்டோம். இங்குப் பரதமக்கள் மிகுதியாக இருக்கிறார்கள். பள்ளிக்கூடமும் இருக்கிறது. இப்படியே சென்றால் இராமநாதபுரம் ஜில்லா எல்லை வழியாக இராமேசுவரம் முதலிய இடங்களுக்குப் போகலாம்.

கேள்விகள்.

1. கடற்கரையில் உள்ள முக்கிய ஊர்கள் எவை?
2. அங்குள்ளவர்களின் குலம், சமயம், தொழில் இவைகள் எவை?
3. மாதா கோவில்கள் எங்கெங்கே இருக்கின்றன?
4. இந்துக் கோவில்கள் உள்ள இடங்களைக் கூறுக.
5. பள்ளிவாசல் எங்கே இருக்கின்றது? அதைப்பற்றி உனக்கு என்னதெரியும்?
6. உப்பளங்கள் எங்கெங்கு இருக்கின்றன?
7. தீபஸ்தம்பம் உள்ள இடங்களைச் சொல்லு.
8. கப்பல் துறைமுகம் உள்ள ஊர் எது? அங்குள்ள பள்ளிக்கூடங்கள், தொழிற்கூடங்கள் எவை?

9. மின்சாரம் உற்பத்தியாகும் இடம் எது? எங்கெங்கு செல்கின்றது?
10. தூத்துக்குடிக்குத் தண்ணீர் எங்கிருந்து எவ்வாறு கொண்டு வரப்படுகிறது?
11. தூத்துக்குடியில் எந்தெந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்?
12. இதன் அருகில் உள்ள தீவு எது? அதைப்பற்றி எழுதுக.

---

(3) இருப்புப் பாதை.

திருநெல்வேலி, இது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து மேற்கே திருவனந்தபுரத்திற்கும், தென்காசி ஜங்ஷன் வழியாக



திருநெல்வேலி ஜங்ஷன்

விருதுநகருக்கும், திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து திருச்செந்தூருக்கும், இங்கிருந்து மணியாச்சி ஜங்ஷன் வழியாகத் தூத்துக்குடிக்கும், கோவில்பட்டிக்கும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன.

ரயில் மார்க்கமாக நமது ஜில்லா முழுவதையும் சுற்றிப் பிரயாணம் செய்வோம். திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து மேற்காகச் செல்லும் இருப்புப்பாதை வழியாகத் தென்காசிக்குப்போகும் ரயிலில் ஏறுவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. இரு புறங்களிலும் அழகிய நெல் வயல்கள் காணப்படுகின்றன. ரயில் திருநெல்வேலி டவுனைத் தாண்டிப் பேட்டை ஸ்டேஷனுக்கு வந்துவிட்டது. இங்கே பலவகைத் தானியங்களும், மிளகாய்வற்றலும் ஏற்றுமதியாகின்றன. இங்கிருந்து புறப்பட்டு மேலக்கல்லூருக்குப் போகும் வழியில் உச்சிப்பறம்பைப் பார்க்கிறோம். மேலக்கல்லூரில் முக்கூடலில் இருந்து வருகின்ற பீடிகள் ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. இங்கிருந்து சேர்மாதேவியைத் தாண்டி வீரவநல்லூர் வந்து சேர்ந்தோம். இங்கு நெல், ஜவுளி இவைகள் ஏற்றுமதியாகின்றன.

பிறகு கல்லிடைக்குறிச்சி வழியாக அம்பாசமுத்திரத்தை அடைகிறோம். இடையில் அழகிய நெல் வயல்களைப் பார்க்கிறோம். இங்கிருந்து நெல், பஞ்சு, நூல், கருங்கல் முதலியன ஏற்றுமதி யாகின்றன. பிறகு கீழாம்பூர், ஆழ்வார் குறிச்சி, ரவணசமுத்திரம் இவைகளைக்கடந்து கடையத்திற்கு வந்து விட்டோம். இங்கிருந்து நெல், எலுமிச்சம்பழம் இவைகள் ஏற்றுமதி யாகின்றன. பிறகு மேட்டூர் வந்து சேர்ந்தோம். இங்கு மிளகாய் வற்றல் ஏற்றுமதி யதிகம். பாவூர் சத்திரத்தை யடைந்தோம். இங்கே வெங்காயம், மிளகாய்வற்றல் முதலியவைகள் ஏற்றுமதியாகின்றன. கீழப்புலியூரைத் தாண்டித் தென்காசி ஸ்டேஷனுக்கு வந்து விட்டோம். இங்கே குற்றாலத்திற்குப் போகின்ற ஜனங்கள் அதிகமாக வருகிறார்கள்.

இப்பொழுது விருதுநகர் போகும் ரயிலில் ஏறுவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. நயினாரகரம், கடையு


திருநெல்வேலி ஜில்லா
மண்வகை, இருப்புப்பாதை, விளைபொருள்கள்.
இராமநாதபுரம் ஜில்லா
வ
பலா
மிளகு
கரிவலம்வந்தநல்லூர்
சங்கரநயினர்கோவில்
சங்கரநயினர்கோவில்
தாலுகா
ஏலம்
தேயிலை
கடையநல்லூர்
கோவில்பட்டி
பருத்தி
கடம்பூர்
கோவில்பட்டி தாலுகா
தென்காசி
காய்கறிகள்
தென்காசி
தாலுகா
வெற்றிலை
மணியாச்சி
தட்டப்பாறை
கடையம்
நெல்.
கங்கைகொண்டான்
திருநெல்வேலி
தாலுகா
தூத்துக்குடி
காப்பி
மூங்கில்
அவுரி
திருநெல்வேலி
வாழை.
ஸ்ரீவைகுண்டம்
தாலுகா
ஸ்ரீவைகுண்டம்
அம்பாசமுத்திரம்
சேர்மாதேவி
கரும்பு.
அம்பாசமுத்திரம்
தாலுகா
ஆறுமுகநேரி
நாசரத்
தேக்கு
பயறு.
கம்பு, சோளம்.
நாங்குநேரி
தாலுகா
திருச்செந்தூர்
தாலுகா
திருச்செந்தூர்
ஸ்கேல் 1 அங்குலம் — 12 மைல்
பனை
குலசேகரபட்டினம்
திருவாங்கூர் ராஜ்யம்
திசையன்விளை
மன்னார் வளைகுடா
மலைப்பிரதேசம்
கரிசல்பிரதேசம்
இருப்புப்பாதை
வண்டல்பிரதேசம்
செம்மண்பிரதேசம்
மணல்பிரதேசம்

நல்லூர் இவைகளைத் தாண்டிப் பாம்புக்கோவில் சந்தையை அணுகினோம். இடையில் காணப்படுகின்ற சரல் நிலங்களில் பயறு, எள், சோளம், வெங்காயம், மிளகாய் வற்றல் முதலியனவும், கரிசல் நிலங்களில் பருத்தி, கேழ்வரகு முதலியனவும் பயிராகின்றன. இங்கே ஓர் பெரிய வாரச் சந்தை கூடுகிறது. ஆடு, மாடுகள் ஏராளமாக வருகின்றன. இங்கிருந்து சங்கரன் கோவிலை அடைந்தோம். இங்குள்ள சங்கரநயினர் கோவில் மிகப் பிரசித்திபெற்றது. இங்குப் பருத்தி, கொட்டைமுத்து, நெல், காய்கறி, வாழை இலை இவைகள் ஏற்றுமதியாகின்றன. இங்கிருந்து மறுபடியும் திருநெல்வேலிக்கு வருவோம்.

இப்பொழுது திருச்செந்தூருக்குப் போகும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. தாம்பிரவர்ணிப் பாலத்தைத் தாண்டிக்குறிச்சியைக் கடந்து பாளையங்கோட்டையை அடைந்தோம். பக்கங்களில் பள்ளிக்கூடங்களும், பங்களாக்களும், நெல் வயல்களும் காணப்படுகின்றன. பிறகு செய்துங்கநல்லூர், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி முதலிய ஸ்டேஷன்கள் வழியாக நாசரேத் அடைந்தோம். இங்கிருந்து கருப்புக்கட்டி ஏற்றுமதியாகிறது. பிறகு குறும்பூர், ஆறுமுகனேரி வழியாகத் திருச்செந்தூரை அடைந்துவிட்டோம். இங்கிருந்து லைட் ரயில்வே குலசேகரப்பட்டினம் வழியாக உடன்குடிக்கும், திசையன்விளைக்கும் போகின்றது.

நாசரேத்திற்கு வட கிழக்கில் கடம்பாக்குளம் (கடம்பன் குளம்) இருக்கிறது. இதுவே நமது ஜில்லாவில் உள்ள பெரிய குளம். குறும்பூர், நல்லூர் முதலிய ஊர்களிலிருந்து கத்தரிக்காய், புடலங்காய், மிளகாய், முதலியன ஏற்றுமதியாகின்றன. ஆறுமுகனேரியில் உப்பு ஏற்றுமதி யாகிறது. திருச்செந்தூரி லிருந்து திருநெல்வேலிக்குத் திரும்புவோம்.

இனி மணியாச்சிக்குப் போகும் ரயிலில் ஏறுவோம். மணியாச்சியில் இறங்கித் தூத்துக்குடிக்குப் போகும் ரயிலில் ஏறித் தட்டப்பாறையை அடைவோம். இங்கே இலங்கைக்குப் போகின்றவர்கள் தங்குவதற்கு இடம் இருக்கின்றது. பிறகு மீளவிட்டான் தாண்டித் தூத்துக்குடிக்கு வந்து விட்டோம். இங்கிருந்து மணியாச்சிக்குத்திரும்பிக் கடம்பூர், நாலாட்டின்புத்தூர் வழியாகக் கோவில்பட்டியை அடைந்தோம். இங்கிருந்து இந்த ரயில் பாதை சாத்தூர், துலுக்கப்பட்டி வழியாக விருதுநகருக்குப் போகிறது.

கேள்விகள்.

1. திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்கு ரயில் மார்க்கமாய்ப் போனால் நீ கடக்க வேண்டிய முக்கிய ஸ்டேஷன்களைச் சொல்லு.
2. மணியாச்சி ஏன் ஒரு ஜங்ஷனாயிருக்கிறது ?
3. திருச்செந்தூருக்கும், சங்கரநயினர் கோவிலுக்கும் ஜனங்கள் ஏன் அதிகமாக வருகிறார்கள்?
4. ஸ்ரீவைகுண்டம், நாசரேத் இவைகள் எந்த இருப்புப்பாதையில் இருக்கின்றன? அங்கு ஏற்றுமதியாகும் முக்கியப் பொருள்கள் எவை?
5. மணியாச்சிக்கும், திருநெல்வேலி ஜங்ஷனுக்கும் இடையில் உள்ள ஸ்டேஷன்கள் எவை? அதன் இருபக்கங்களிலும்

என்னென்ன பொருள்கள் விளைகின்றன?

6. மணியாச்சியிலிருந்து தூத்துக்குடிக்குப் போகும் இருப்புப்பாதை என்னென்ன வகையான மண்ணைக் கடந்து போகிறது?

7. இலங்கைக்குச் செல்கின்றவர்கள் எங்கே தங்கிச் செல்லவேண்டும்?

8. கடையத்திலிருந்து என்னென்ன பொருள்கள் ஏற்றுமதியாகின்றன?

9. பாம்புக்கோவில் சந்தை எதற்குப் பேர்போனது?

10. திருவனந்தபுரத்திற்கு எந்த இருப்புப் பாதைவழியாகப் போகவேண்டும்? ஏன்?

ஐந்தாம் பாடம்.

5. சீதோஷ்ண ஸ்திதி.

திருநெல்வேலி ஜில்லாவில் உஷ்ணம் எப்பொழுதும் ஒன்றுபோலிருப்பதில்லை. சில நாட்களில் சூரிய உஷ்ணம் கடுமையாக இருக்கின்றது. அப்பொழுது காற்று வீசினல் சூரிய உஷ்ணம் அதிகமாகத் தோன்ருது அல்லவா? மேலும் அடர்ந்தகாடுகள் பக்கத்தில் இருந்தாலும் உஷ்ணம் தோன்ருது. மழை காலங்களில் மேகங்கள் மூடிக்கொள்வதால் உஷ்ணம் தோன்றுகிறதில்லை. ஆகவே ஓர் இடத்தின் உஷ்ணநிலை அதன் இயற்கை அமைப்பு, வீசும் காற்று, பெய்யும் மழை முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது.

நமது ஜில்லாவின் மேற்குப் பாகம் மலைப்பிரதேசம். அது மற்ற பாகங்களைவிட உயர்ந்திருக்கிறது. மரங்களும் அடர்ந்திருக்கின்றன. ஆகையால் அங்கு உஷ்ணம் அதிகக் குறைவு. அங்குள்ள குற்ருலத்திற்குக் கோடை காலத்தில் மக்கள் செல்வதற்குக் காரணம் இதுதான்.

கடற்கரைப் பிரதேசத்தில் கடற்காற்று வீசுவதால் அங்கு உஷ்ணம் குறைந்திருக்கிறது. கோடையில் மக்கள் வசிப்பதற்கேற்ற இரண்டாவது இடமாக இதைச் சொல்லலாம்.

இவ்விரு பிரதேசங்களுக்கும் இடையில் உள்ளது உஷ்ணப் பிரதேசம்.

காற்று: மழை.



காற்றுப்படம்

காற்று அடிக்கும் திசையை ஒரு விதக் கருவியினல் அறியலாம். கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசும் காற்று கடற்காற்று. நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசும் காற்று நிலக்காற்று. காற்று எத்திசையிலிருந்து வீசுகிறதோ, அத்திசையின் பெயரால் அக்காற்று அழைக்கப்படும்.

நமது ஜில்லாவில், வருஷத்தில் குறிப்பிட்ட இரு திசைகளிலிருந்து காற்று வீசுகிறது. இவைகள் குறிப்பிட்ட திசைகளிலிருந்து,குறிப்பிட்ட காலங்களில் வீசுவதால் பருவக்காற்றுகள் எனப் பெயர் பெறுகின்றன.

ஒன்று தென்மேற்கிலிருந்து ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில்



தென்மேற்குப் பருவக்காற்று

வீசுகிறது. அதற்குத் தென் மேற்குப் பருவக்காற்று எனப்பெயர். இது மேற்கில் உள்ள அராபிக் கடலிலிருந்து வருவதால் நீர் நிறைந்த மேகத்தைக் கொண்டுவருகிறது. அது மேற்குத் தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டுத் திருவாங்கூர் இராஜ்யத்தில் மழை பெய்கிறது. அதிலிருந்து மேகம் மலையைத் தாண்டிவந்து, மலைக்குக் கிழக்கே சிறிது மழை பெய்கிறது. அம்மழையோடு காற்றும் கலந்து அடிக்கும். அதை நாம் சாரல் மழை என்கிறோம். கிழக்கில் வர வரக் குறைந்து, திருநெல்வேலிக்குக் கிழக்கே அது ஒன்றும் இல்லாமல் போய்விடுகிறது. மலையோரமாக உள்ள தாலூகாக்களில் சுமாராக மழை பெய்கிறது.

மற்றொன்று வடகிழக்கிலிருந்து ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வீசுகிறது. அதற்கு வடகிழக்குப்பருவக் காற்று என்று பெயர். இது வங்காளக் குடாக்கடலிலிருந்து வருவதால் கார்மேகத்தோடு வருகிறது. அது மேற்குத்தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டுக் கிழக்கில் அதிக மழை பெய்கிறது. கிழக்கே போகப்போக மழை குறைந்து போகின்றது. மலையோரமாயுள்ள தாலூகாக்களில் மழை அதிகமாகப் பெய்கிறது.



வடகிழக்குப் பருவக்காற்று

மழை அதிகமாகப் பெய்கின்ற ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கு மழைகாலம் என்றும், உஷ்ணம் மிகுதியாக உள்ள பங்குனி, சித்திரை மாதங்களுக்குக் கோடைகாலம் என்றும் பெயர்.

கேள்விகள்.

1. ஒரு இடத்தின் சீதோஷ்ண நிலை எவைகளைப் பொறுத்து மாறுபடும்?
2. நமது ஜில்லாவில் கோடைகாலத்தில் வசிக்கத் தகும் இடம் எது? ஏன்?
3. நமது ஜில்லாவில் எந்தப் பாகம் அதிக உஷ்ணமானது? அதற்கு என்ன காரணம்?
4. பருவக் காற்று என்றால் என்ன? நமது ஜில்லாவில் வீசும் பருவக்காற்றுகள் எவை? அவை எவ்வெக்காலத்தில் வீசும்?
5. அதிக மழையைத் தரும் பருவக்காற்று எது? ஏன்?
6. நமது ஜில்லாவில் அதிக மழை பெய்யும் பாகம் எது? காரணம் காட்டு.

திருநெல்வேலி ஜில்லா
பிராணிகள். தாதுப்பொருள்கள்.
இராமநாதபுரம் ஜில்லா
வ
சங்கரநயினர்
சங்கரநயினர்கோவில்
மாடு
கோவில்
மாடு
கழுகுமலை
காடடுஎருமை
தாலுகா
கோவில்பட்டி
கரடி
தேன்காசி
புலி
ஆடு
மாடுகள்
தாலுகா
தாலுகா
காட்டுப்பன்றி
சுண்ணும்புக்கல்
கருங்கல்
சரளைக்கல்
மாடு
மான்
சீவலப்பேரி
தூத்துக்குடி
அம்பாசமுத்திரம்
திருநெல்வேலி
உப்பளம்
முத்துச் சிப்பிகள்
தாலுகா
தாலுகா
ஸ்ரீவைகுண்டம்
மாடு
தாலுகா
காரீயம்
மேலப்பாளையம்
சிங்கம்பட்டி
உப்பளம்
காயல்பட்டினம்
யானை
மாடு
திருச்செந்தூர்
திருச்செந்தூர்
ஆடு
மாடுகள்
தாலுகா
நாங்குநேரி
திருவாங்கூர் ராஜ்யம்
தாலுகா
மன்னார் வளைகுடா
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

7. மழைகாலம், கோடைகாலங்களைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது? அவை நமது ஜில்லாவில் எந்தெந்தமாதங்களில் உண்டு?

பயிற்சி.

காற்றுப்படம் போல் செய்தல்.

உலாவுதல்.

திசை அறி கருவி உள்ள இடங்களுக்கு மாணவரை அழைத்துச் செல்லல்.

ஆறும் பாடம்.

(1) தாதுப்பொருள்கள்

பூமிக்குள்ளிருந்து வெட்டி யெடுக்கப்படும் பொருள்க ளுக்குத் தாதுப் பொருள்கள் என்று பெயர். கொஞ்ச காலத்திற்கு முன்பு நமது ஜில்லாவில் இரும்பும், காரீயமும் வெட்டி யெடுக்கப்பட்டன. நம் நாட்டில் வந்து இறங்குகின்ற இரும்பு மிகக் குறைவான விலைக்குக் கிடைக்கின்றது. காரீயத்தை வெட்டி யெடுப்பதனால் லாபம் இல்லை. ஆகையால் தற்காலத்தில் இரண்டும் எடுக்கப்பட வில்லை.

நமது ஜில்லாவில் சிலவிடங்களில் கருங்கல், சரளைக்கல், சுண்ணும்புக்கல் இவைகள் கிடைக்கின்றன. சரளைக்கல் ரஸ்தாக்கள் போடுவதற்கு உபயோகப் படுவதைப் பார்த்திருப்பீர்கள்! கருங்கல் பாலம், கட்டிடம் முதலியவைகள் கட்டுவதற்குப் பயன்படுகின்றன. சுண்ணும்புக்கல்லைக் கரியோடு வேகவைத்துச் சுண்ணும்பு செய்கிறார்கள்.

தூத்துக்குடி, காயல் பட்டினம், ஆறுமுகனேரி, குலசேகரப் பட்டினம் முதலிய இடங்களில் உப்பு எடுக்கப்படுகிறது.

மன்னார் குடாக்கடலில், தூத்துக்குடிக்குப் பக்கத்தில் சுமார் 12 வருஷங்களுக்கு ஒருமுறை முத்துச்சிப்பிகள் எடுக்கிறார்கள்.

கேள்விகள்.

1. தாதுப்பொருள் என்றால் என்ன ?
2. காரீயம், இரும்பு இவைகள் இப்பொழுது ஏன் வெட்டி எடுக்கப்படவில்லை?
3. உப்பளங்கள் உள்ள இடங்களைக் குறிப்பிடுக.
4. முத்துச்சிப்பி எங்கே, எப்பொழுது எடுக்கப்படுகிறது ?

உலாவுதல்.

உப்பளம், சுண்ணும்புக்காளவாய், செங்கற்சூளை முதலியவைகளைப் பிள்ளைகளுக்குக் காட்டவும்.

பயிற்சி.

பல தாதுப் பொருள்களைச் சேர்த்தல்.

---

(2) பிராணிகள், பறவைகள்.

பிள்ளைகளே! ஆடுமாடுகள் மக்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன? நமது ஜில்லாவில் ஆடுமாடுகள் அதிகம். வாரத்திற்கு ஒரு முறை மேலப்பாளையம், பாம்புக்கோவில் சந்தை, மேலக்கல்லூர், சிங்கிகுளம் முதலிய இடங்களில் மாட்டுச் சந்தைகள் கூடுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இருமுறை மேலப்பாளையம், தருவை, சிங்கிகுளம், சீவலப்பேரி, திருச்செந்தூர், கழுகுமலை, சங்கரன்கோவில் முதலிய இடங்களில் மாட்டுத்தாவணிகள் கூடுகின்றன.

மேற்குப் பாகத்தில் உள்ள மலைகளில் கரடி, புலி, சிறுத்தைப்புலி, காட்டுப்பன்றி, யானை முதலிய கொடிய மிருகங்களும், மான், மிளா முதலிய மிருகங்களும் வசிக்கின்றன. சிற்

மிருகங்கள்



மான்



சிறுத்தைப்புலி



புலி



யானை



காட்டுப்பன்றி

பறவைகள்



காட்டுப்புறு



கிளி



மயில்



காட்டுக்கோழி

சில சமயங்களில் குற்றாலத்துக்கு அருகில் புலிகளும், ஐந்தருவிக்குப் பக்கத்தில் யானைகளும் வருவதுண்டு.

இங்குக் கிளி, மைனு முதலிய பேசும் பறவைகளும், மயில், குயில், காட்டுப்புறு, காட்டுக்கோழி முதலிய அழகிய பறவைகளும் இருக்கின்றன.

கேள்விகள்.

1. இந்த ஜில்லாவில் உள்ள மிருகங்கள் எவை?
2. எங்கெங்கே, என்னென்ன கொடிய மிருகங்கள் இருக்கின்றன?
3. மாட்டுச்சந்தை கூடும் இடங்கள் எவை?
4. தாவணி எப்பொழுதெல்லாம் எங்கெங்கே கூடும்?

ஏழாம் பாடம்.

நீர்ப்பாசனம்.

(1) ஆறுகள், அணைக்கட்டுகள், கால்வாய்கள்.

நமது ஜில்லாவில் அநேக ஆறுகள் ஓடுகின்றன. சில ஆறுகளில் தான் ஆண்டு முழுதும் தண்ணீர் ஓடும். பல சிறுநதிகள் கோடை காலத்தில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போகின்றன. நதிகள் பாயும் சமவெளிகள் செழிப்பாக இருக்கின்றன.

தாம்பிரவர்ணி:—நமது ஜில்லாவில் உள்ள ஆறுகளில் எல்லாம் இது பெரியது. இந்த ஆற்றின் நீரில் தாமிரம் (செம்பு) கலந்து இருப்பதால் இது இப்பெயர் பெற்றது என்பார்கள். பொருநையாறு என்றும் இதற்கு ஓர் பெயர் உண்டு. இது மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகைமலையில் உற்பத்தியாகி, சிறிது தூரம் ஓடிப் பெரிய அருவியாக விழுகிறது. அதன் பெயர் வான தீர்த்தம். வாணன் தீர்த்தம் என்றும் சொல்லுவார்கள். பின்னர் வெகுதூரம் சென்று கலியாணிதீர்த்தம் என்ற இடத்தில் விழுகிறது. பிறகு இரண்டு, மூன்று பிரிவுகளாகி அருவிகளாகப் பாய்கிறது. அவற்றுள் சிறந்தது அகத்தியர் தீர்த்தம். இதற்குக் கீழேதான் பாபநாசம் இருக்கிறது. இது கிழக்கு நோக்கி அம்பாசமுத்திரம் தாலூகாவில் ஓடுகிறது. பிறகு வடக்கு நோக்கித் திரும்பித் தென் கிழக்காக ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் பாய்கிறது. ஆத்தூருக்குப் பக்கத்தில் மன்னார் குடாக்கடலில் கலக்கிறது. இதில் பெரிய வெள்ளங்கள் வருவதுண்டு. 1923ம் வருஷம் ஸ்ரீவைகுண்டம் அணையில் 30 அடித் தண்ணீர் வந்ததாம். இதன் நீளம் 70 மைலுக்கு மேலிருக்கும். இதற்குத் துணைநதிகள் சிற்றாறு (சித்திராநதி), மணிமுத்தாறு, கருணையாறு, பச்சையாறு முதலியன.

தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருவதைத் தடுத்துப் பயன்படுத்த இதில் 12 அணைகள் கட்டப்பெற்றிருக்கின்றன. அவைகளிலிருந்து புறப்படும் கால்களும், ஏற்படும் குளங்களும் தாம்பிரவர்ணிக் கரையைச் செழிக்கச் செய்கின்றன. இப்பொழுது புதிதாக முண்டன் துறைக்கு மேலே ஒரு பெரிய தேக்கம் கட்டுவதற்கு அரசாங்கத்தார் ஆரம்பித்து இருப்பது மெச்சத்தக்கது. இது பயிர்த்தொழிலுக்கும், மின்சார உற்பத்திக்கும், வேறு கைத்தொழில்களுக்கும் பெரிய துணையாக இருக்கும். இதில் ஏற்பட்டிருக்கும் முக்கிய அணைகள்:—

கோடைமங்கலம் அணை:— இதுவே பாபநாசத்துக்கு அருகில் உள்ள இந்நதியின் முதல் அணை.

நதி உண்ணி அணை:—அம்பாசமுத்திரத்திற்குச் சிறிது மேற்கில் இருக்கிறது.

கன்னடியன் அணை:— அம்பாசமுத்திரத்திற்கு வெகு சமீபத்தில் உள்ளது.

அரியநாயகபுரம் அணை:—இது இப்பேருடைய ஊருக்கு அருகில் இருக்கிறது.

பழவூர் அணை:—இவ்வணையிலிருந்து பிரிந்து போகும் பாளையங்கால் மேலப்பாளையம், பாளையங்கோட்டை வழியாகச் செல்கின்றது.

சுத்தமல்லி அணை:--இங்கிருந்து பிரிந்து போகும் கால்தான் திருநெல் வேலிநகருக்கு நடுவே செல்கிறது.

ஸ்ரீவைகுண்டம் அணை:—இந்த ஊருக்கு அருகில் கட்டப் பெற்றுள்ள பெரிய அணையாகும். இங்கிருந்து வடகால், தென்கால் என இரண்டு கால்கள் புறப்படுகின்றன. தென்கால் தான் கடம்பாக் குளத்தை நிரப்புவ தாகும்.



தாம்பிரவர்ணிப் பாலம்

பாலங்கள்:— மழைகால வெள் ளத்தில் போக்குவரவு தடைப்படா வண்ணம் நதியின்மேல் ஐந்துக்கு அதிகமான பாலங்கள் அமைந்திருக் கின்றன. அவற்றுள் கல்லிடைக் குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள பாலமும், திருநெல்வேலிக்கும், பாளையங்கோட் டைக்கும் இடையில் உள்ள சுலோ சன முதலியார் பாலமும், ஸ்ரீவைகுண் டத்துக்கு அருகில் உள்ள பெரிய பாலமும் முக்கியமானவையாகும்.

கல்லிடைக்குறிச்சி, சேர்மாதேவி, சிக்க நரசையன் கிராமம் முதலிய இடங்களில்இருப்புப்பாதைப் பாலங் கள் வெகு அழகாயும், உறுதியாயும் கட்டப்பெற் றிருக்கின்றன.

சிற்றுறு:— (சித்திராநதி) இது தாம்பிரவர்ணியின் முக்கிய துணை நதியாகும். இது குற்றால மலையில் உற்பத்தியாகிறது. தேன் அருவி, செண்பகாதேவிஅருவி முதலிய பல அருவிகளாய் விழுகின்றது. தென் காசி வழியாகக் கிழக்காயும், தென் கிழக்காயும் ஓடிச் சீவலப்பேரிக்குப் பக்கத்தில் தாம்பிரவர்ணியுடன் கலக் கிறது. இதில் தண்ணீர் வெகு வேக மாய் ஓடும். அதில் ஆறு அணைகள் ஏற்பட்டிருக்கின்றன. பிரிந்துபோகும் கால்கள், பாட்டா குறிச்சி, பாலூர், மாராந்தை, மானூர், கங்கைகொண் டான் முதலிய குளங்களை நிரப்பு கின்றன.

(2) குளங்கள்.

பயிர்த் தொழிலுக்கு நீர்ப்பா சன வசதி வேண்டும். அதற்கு ஆறு, ஏரி, குளம் இவைகள் முக்கியம். தானாக ஊற்றால் நிரம்பும் இயற்கை நீர் நிலைகளை ஏரி என்று கூறலாம். அதைப்போல் அல்லாமல், மழைத் தண்ணீரால் ஏற்படக் கூடியதை வானமாரிக் குளம் என்பார்கள். இப்ப டிப்பட்ட சிறிய குளங்கள் நமது ஜில் லாவில் சிற்சில இருக்கின்றன. பெரும்பாலும் மலையை அடுத்த இடங்களில் இவை அதிகம்.

இதைத்தவிர நிலையாகத் தண் ணீர் தங்கக்கூடிய குளங்களும் பல இருக்கின்றன. இவற்றிற்குக் கால் வாத்துக் குளங்கள் என்று பெயர். ஏனெனில் இவற்றை நிரப்புவன சிறு ஆறுகளும், கால்வாய்களும் ஆகும். ஆற்றில் இருந்து குளத்திற் குத் தண்ணீர் பாயக் கல், செங்கல், முதலியவற்றால் கட்டப்படும் தடுப்பு களுக்கு அணைகள் என்று பெயர். அத்தகைய அணைகள் பலவற்றைப்

பற்றி முன்னுல் படித்தோம். இப்பொழுது இப்படி ஏற்படக்கூடிய முக்கிய கால்வரத்துக் குளங்கள் எவை என்று பார்ப்போம்.

தாலூகா	குளங்கள்
திருநெல்வேலி	நயினுர்குளம், மானூர்.
ஸ்ரீவைகுண்டம்	வெள்ளூர்க்குளம்.
திருச்செந்தூர்	கடம்பன் குளம், தென்கரைக்குளம்.
நாங்குநேரி	நாங்குநேரி, விஜயநாராயணம்.
தென்காசி	பாவூர், வீராணம்.
சங்கரன்கோவில்	சிவகிரி, தென்மலை.

பாடத்தையும், படத்தையும் வைத்துப் பதில் எழுதுக.

நதியின் பெயர்	உற்பத்தி இடம்	உபநதிகள்	பாயும்பூமி	நீர்வீழ்ச்சி	அணைகள்	கலக்கும் இடம்	பொதுக் குறிப்பு

உலாவுதல்:—பிள்ளைகளை அழைத்துச் சென்று ஆறுகளைக் காட்டவும்.

கேள்விகள்.

1. ஏரி என்றுலென்ன? குளம் என்றுலென்ன? குளம் எத்தனை வகைப்படும்? எவை எவைகள்?

2. குளத்திற்குத் தண்ணீர் எப்படி எல்லாம் வந்து சேருகின்றது?

உலாவுதல்.

மாணவர்களைக் கூட்டிச்சென்று அணை, கால்வாய், குளங்களைக் காட்டவும்.

பயிற்சி.

மாணவர் மண்ணினுல் அணைக்கட்டு, மதகு, கால்வாய், குளங்கள் அமைத்து விளையாடவும்.

விளைபொருள்கள்.

எட்டாம் பாடம்.

விளைபொருள்கள்.

பயிர் வகைகள் நன்றாக வளர்வதற்குப் பூமியின் மண் செழுமையும், தண்ணீர் வசதியும், உஷ்ணமும் வேண்டும். ஆகவே நமது ஜில்லாவில் இவை வெவ்வேறு விதமாக மாறுபட்டிருப்பதால், வெவ்வேறு விதமான விளைபொருள்கள் இருக்கின்றன.

நெல்:— இது நன்செய்ப்பயிர். இது விளையும் நிலம் நன்செய் நிலம். வண்டல் மண்ணும், நல்லமழையும், போதுமான வெப்பமும் சேர்ந்த இடங்களில் நெல் நன்றாய்ப் பயிராகின்றது. இதனடியில் தண்ணீர் தேங்கி நிற்றல் அவசியம். ஆகையால் அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், தென்காசி, திருநெல்வேலித் தாலூகாக்களில் தாம்பிரவர்ணியும், அதன் உபநதிகளும் நெல்லை அதிகம் விளைவிக்கின்றன. நாங்குநேரித் தாலூகாவில் நம்பியாறு முதலியன பாய்கின்றன.

நெல் விளையும் இடங்கள் சிலவற்றில் கரும்பு, வாழை, வெற்றிலை, சேம்பு, மஞ்சள், கருணை முதலியவையும் பயிராகின்றன.

சோளம், கம்பு, வரகு, சாமை, கடலை, பயறு இவற்றிற்குச் செம்மண் நிலமும், கால மழையும், வெப்பமும் போதும். ஆகவே அந்த வளப்பங்கள் அமைந்துள்ள சங்கரன் கோவில், நாங்குநேரி, கோவில்பட்டி, தென்காசித் தாலூகாக்களில் இவை விளைகின்றன. இவை பயிராகும் நிலங்களுக்குப் புன்செய் நிலம் என்றும், இவைகளுக்குப் புன்செய்ப் பயிர் என்றும் பெயர். மிளகாய் வற்றல், வெங்காயம் முதலியன கோவில்பட்டி, சங்கரன் கோவில் தாலூகாக்களில் அதிகம்.

பழம், தேங்காய் இவைகள் தென்காசித் தாலூகாவில் அதிகமாகக் கிடைக்கின்றன.

காப்பி, திருக்குறுங்குடி, தென்காசி மலைகளிலும், தேயிலை திருக்குறுங்குடி, அம்பாசமுத்திரம் மலைகளிலும் சிறிது கிடைக்கின்றன.

எள், கொட்டைமுத்து முதலியன தென்காசி, சங்கரன் கோவில் தாலூகாக்களில் அதிகம்.

பருத்தி:—பருத்திக்குக் காலமழையும், கரிசல் மண்ணும், வெப்பமும் வேண்டும். இவை அமைந்த இடங்களில் நமது ஜில்லாவில் நான்கு விதப் பருத்திகள் உண்டாகின்றன. அவை (1) கம்போடியா, (2) கருங்கண்ணி, (3) உப்பம், (4) கலப்பு நாட்டுப் பருத்தி என்பன.

கலப்பு நாட்டுப் பருத்தியே இங்கு அதிகமாய்ப் பயிராகின்றது. கம்போடியாப் பருத்தி சங்கரன்கோவில், தென்காசித் தாலூகாக்களிலும், உப்பம் பருத்தி நாங்குநேரி, சங்கரன் கோவில் தாலூகாக்களிலும், கருங்கண்ணி கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம் தாலூகாக்களிலும் மிகுதியாய்ப் பயிராகின்றன.

புகையிலை:--இது பெரும்பாலும் கோவில் பட்டித் தாலூகாவிலும், கால்பாகம், சங்கரன் கோவில் தாலூகாவிலும், ஒரு சிறு பகுதி அம்பாசமுத்திரம் முதலிய மற்ற தாலூகாவிலும் பயிராகிறது.

பொன்னவரை:—இது திருநெல்வேலி தாலூகாவில் மிகுதி.


திருநெல்வேலி ஜில்லா
கைத்தொழில்
இராமநாதபுரம் ஜில்லா
வ
விவசாயம்
கோவில்பட்டி
விவசாயப்பண்ணை
மீன்பிடித்தல்
கடையநல்லூர்
கடம்பூர்
கயத்தாறு
தென்காசி
முக்கூடல்
பொட்டல்புதூர்
மன்னார்கோவில்
வாகைக்குளம்
அம்பாசமுத்திரம்
வீரவநல்லூர்
பாபநாசம்
கல்லிடைக்குறிச்சி
பத்தமடை
தச்சநல்லூர்
திருநெல்வேலி
பாளையங்கோட்டை
மேலப்பாளையம்
செய்துங்கநல்லூர்
தூத்துக்குடி
ஏரல்
ஆழ்வார்திருநகிரி
காயல்பட்டணம்
நாசரத்
களக்காடு
ஏர்வாடி
மீன்பிடித்தல்
திருவாங்கூர் ராஜ்யம்
மன்னார் வளைகுடா
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

நம் ஜில்லாவின் தென்கிழக்குப் பாகமாகிய கடற்கரை யோரங்கள் மணற் பிரதேசமல்லவா? இங்குப் பனைகள் அதிகம். ஆனால் பனைகள் அநேகமாய் எல்லாத் தாலூகாக்களி லும் இருக்கின்றன. அதனால் நம் முடைய ஜில்லாவுக்குப் பனைமர ஜில்லா வெனப் பெயருண்டு.

மேற்குப்பாகம் மலைப் பிரதே சம்:—மலையில் தேக்கு, கருங்காலி, வேங்கை, மூங்கில் முதலிய மரங்க ளும், மருந்துப் பூண்டுகளும் உண்டா கின்றன. மலைச் சாரலில் தேயிலை, காப்பி, ஏலம், ஜாதிக்காய், மிளகு, இஞ்சி, பலா, பாக்கு, வாழை முத லியவைகள் பயிரிடப்படுகின்றன.

கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

பிரதேசம்.	மண்.	விளையும் பயிர்கள்.	விளையும் தாலூகா.
1. மத்தியபாகம்.			
2. தெற்குப்பாகம்.			
3. வடபாகம்.			
4 தென்கிழக்குப்பாகம்.			
5. மலைப்பிரதேசம்.			

உலாவுதல்.

பிள்ளைகளைப் பல பயிர்கள் விளையும் நிலங்களுக்கு அழைத்துச்சென்று காட்டவும்.

ஒன்பதாம் பாடம்.

கைத்தொழில்.

நமது ஜில்லாவில் நூற்றுக்கு 58 பேர்கள் பயிர்த்தொழில் செய்துவரு கிறார்கள். இங்குப் பனைமரங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன என்று படித்தீர்கள். பனைகளால் பலர் வாழ்கிறார்கள். பனையிலிருந்து பதநீர் இறக்குகிறார்கள். பதநீரி லிருந்து பனை வெல்லம், சில்லுக் கருப்பட்டி, பனங்கற்கண்டு முதலி யன தயாரிக்கப்படுகின்றன. இத்தொ ழில் நாங்குநேரி, திருச்செந்தூர் தாலூகாக்களில் அதிகமாய் நடை பெறுகின்றன. ஓலைப் பாய்களும், ஓலைப் பெட்டிகளும், பனைமட்டையின் தும்பினால் கயிறுகளும் செய்யப்படு கின்றன. தச்சநல்லூர், ஆழ்வார் திருநகரி என்ற இடங்களில் கருப்புக் கட்டியிலிருந்து இயந்திரங்களின் உதவியால் சீனி செய்யப்படுகின்றது.

இங்கு நெல் விளைவுக்குப் பின், பருத்தி விளைவை இரண்டாவதாகச் சொல்லலாம். பருத்தி அயல் நாடு களுக்கு அனுப்பப் படுகிறது. பஞ்சி லிருந்து கொட்டை நீக்கல்,பஞ்சைச் சுத்தப்படுத்தல், நூல் நூற்றல் முத லிய தொழில்கள் தூத்துக்குடி, கடம் பூர், கோவில்பட்டி, பாபநாசம், நாலாட்டின்புத்தூர் முதலிய இடங் களில் நடைபெறுகின்றன. பாபநா சத்திலுள்ள இயந்திரசாலை நீர் வீழ்ச் சியின் சக்தியால் நடைபெறுகின்றது.

மேலப்பாளையம், அம்பாசமுத்ரம், வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி, பொட்டல்புதூர், தென்காசி, கடையநல்லூர், ஏர்வாடி, காயல் பட்டினம், சங்கரன்கோவில், முதலிய



நெசவு

இடங்களில் நெசவுத்தொழில் நடைபெறுகின்றது. மகமதியர்களும், கைக்கோளர்களும், சௌராஷ்டிரர்களும், பணிக்கர்களும், அடவியார் என்ற வகுப்பினர்களும் இத்தொழிலைச் செய்கிறார்கள். பொட்டல்புதூர் துண்டுகளுக்கும், வீரவநல்லூர் சேலைகளுக்கும், மேலப்பாளையம் ஜமுக்காளங்களுக்கும் பேர்போனவை.

பத்தமடை, களக்காடு, கயத்தாறு என்ற இடங்களில் கோரம் பாய்கள் செய்யப்படுகின்றன. பாளையங்கோட்டை செருப்புக்குப் பெயர் போனது. முக்கூடலில் பீடித்தொழில் வெகு மும்மரமாக நடைபெற்று வருகின்றது. இங்கே புதிதாக ஓர் வாரச்சந்தை கூடுகிறது. மேலப்பாளையத்திலும், தென்காசியிலும் பீடித்தொழில் நடைபெறுகிறது. இவைகளினால் மக்கள் பலர் பிழைக்கிறார்கள்.

திருநெல்வேலியில் தகரப்பெட்டிகள் செய்யப்படுகின்றன. தச்சநல்லூர், பேட்டை, வாகைக்குளம், மன்னார் கோவில், ஏறல் என்ற இடங்களில் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.



மீன்பிடித்தல்

றன. கடற்கரையோரங்களில் மீன் பிடித்தல் நடைபெறுகிறது.



கை ராட்டினம்

நூல் நூற்றல்:— இது வீரவநல்லூர், திசையன்விளை, சிவகிரி, கடையநல்லூர் முதலிய இடங்களில் நடைபெறுகின்றது. இதனால் பல ஏழைகள் பிழைக்கிறார்கள். வீரவநல்லூர், கடையநல்லூர் முதலிய இடங்களில் கதர் வஸ்திரவகைகள் மிக நேர்த்தியாயிருக்கும்.

பிரம்பு நாற்காலிகளும், மூங்கில் கூடைகளும், மலையைச்சார்ந்த அம்பாசமுத்திரம், தென்காசித் தாலுகாக்களில் செய்யப்படுகின்றன.

பாளையங்கோட்டையில் உள்ள சவேரியார் தொழிற்சாலையிலும், நாசரேத் தொழிற்சாலையிலும் நெசவு, தச்சுவேலை, பைண்டுவேலை, தையல் முதலிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

தூத்துக்குடிக்கு மேற்கே 12 மைல் தூரத்தில் உள்ளமங்களகிரியில் ஜே. எல். பி. ரோச் அவர்கள் ஆதரவின் கீழ் ஒவ்வொரு கோடையிலும் கோழி, ஆடு, மாடு, தேனீ இவைகள் வளர்த்துப் பயனடைவது கற்பிக்கப் படுகின்றது.

விவசாயப் பண்ணைகள்:-அம்பாசமுத்திரம், கோவில்பட்டியிலுள்ளன. இப்பண்ணைகளின் மூலம் ஜனங்களுக்குப் பயிரிடும் முறைகளைக் கற்பித்தும், அதிகலாபம் கிடைப்பதற்கு நல்ல வித்துக்களையும், உரங்களையும் விவசாயிகளுக்குக் கொடுத்தும் உதவுகிறார்கள்.

பாளையங்கோட்டையிலுள்ள பள்ளிக்கூடத்தில் செவிடு, குருடு, ஊமைப் பிள்ளைகள், தையல், கூடை பின்னல் முதலிய கைத்தொழில்கள் செய்கின்றார்கள்.

கேள்விகள்.

1. நெசவு முதலிய கைத்தொழில்கள் எங்கெங்கு கற்றுக்கொடுக்கப் பெறுகின்றன?
2. விவசாயப் பண்ணைகள் எங்கெங்கு இருக்கின்றன? அவைகளின் பயனென்ன?

அட்டவணையை நிரப்புக.

கைத்தொழில்.	நடக்குமிடங்கள்.	நடக்கும் தாலுகாக்கள்.
நூல் நூற்றல்.		
நெசவு.		
பாய் முடைதல்.		
செருப்புச் செய்தல்.		
பீடி செய்தல்.		
சீனி செய்தல்.		
பாத்திரம் செய்தல்.		
பிரம்பு, மூங்கில் தொழில்.		

பத்தாம் பாடம்.

வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி.

நமது வயல்களில் நெல் விளைகிறது. நாம் நமக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு, மீதமான வற்றை விலைக்கு விற்று விடுகிறோம். ஆனால் நமது வயலில் விளையாத தானியத்தை விலை கொடுத்து வாங்குகிறோம். இப்படிப்பொருள்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் வியாபார மென்று பெயர்.

மேற்சொல்லியபடி நம் ஊரில் கிடைக்காத பொருளை கிடைக்குமிடங்களிலிருந்து தருவித்துக் கொள்கிறோம். அதற்குத்தான் இறக்குமதி என்று பெயர். நமக்குத் தேவையானது போக நம் ஊரில் கிடைக்கும் பொருள்களின் மீதத்தைத் தேவையான இடங்களுக்கு அனுப்புகிறோம். அதற்கு ஏற்றுமதி என்று பெயர்.

நம் ஜில்லாவில் நெல், பருத்தி இவைகள் அதிகமெனப் படித்திருக்கி


திருநெல்வேலி ஜில்லா
வியாபாரம்.
இராமநாதபுரம் ஜில்லா
வ
வெளிஜில்லாக்களில் இருந்து உள்ளேவரும் சரக்குகள்
தேங்காய், தேங்காய்எண்ணெய், மரக்கட்டை, கயிறு, பிரப்பம்பாய், இஞ்சி. மிளகு, பாக்கு, சுக்கு, வாசனைச்சாமான்கள்.
நமதுஜில்லாவிலிருந்து வெளியேபோகும் சரக்குகள்
பஞ்சு, நூல், துணி, வெல்லம், பாய், பனைநார், நெல், அரிசி, நல்லெண்ணெய், நெய், எள்ளு, மிளகாய், வெங்காயம், அவுரி, பீடி, தோல்.
தூத்துக்குடி
அயல்நாட்டிலிருந்து உள்ளேவரும் சரக்குகள்.
துணி, இரும்பு, மண்எண்ணெய், கண்ணாடிச். சாமான்கள்.
உள்ளேவரும் சரக்குகள்
பழங்கள், சரிகைத்துணி, கதர்துணி, பட்டுநூல்.
காயல்பட்டணம்
திருச்செந்தூர்
குலசேகரபட்டணம்
மணப்பாடு
திருவாங்கூர் ராஜ்யம்
மன்னார் வளைகுடா
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

நீர்கள். பதநீரிலிருந்து பனைவெல்லமும், ஓலையினால் பாய்களும், நாரினால் கயிறுகளும் செய்யப் படுகின்றன வென்றும் தெரியும். நமது ஜில்லாவின் துறைமுகம் தூத்துக்குடி. அதன் வழியாய் வெளிநாடுகளுக்குப் பஞ்சு, நூல், பனை வெல்லம், ஓலைப்பாய்கள், ஈர்க்கு, பனந்தும்பு, அவுரி, ஆடுகள், எள், பிண்ணாக்கு, மிளகாய் வற்றல், வெங்காயம், தோல் முதலியவைகள் ஏற்றுமதியாகின்றன. இங்குக் கப்பல் மார்க்கமாய்ச் சிமிண்டு, இரும்பு, அரிசி, பித்தளைத்தகடு முதலியவைகள் இறக்குமதியாகின்றன.

ஆனால் திருவாங்கூரிலிருந்து ரயில் மார்க்கமாகத் தேங்காய், தேங்காய் எண்ணெய், மரக்கட்டைகள், கயிறுகள், பிரப்பம் பாய்கள், மிளகு, பாக்கு, இஞ்சி, சுக்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, ஓடுகள், மருந்துச் சாமான்கள் முதலியவைகள் வந்து இறங்குகின்றன.

வடக்கிலிருந்து ரயில் மார்க்கமாய் அரிசி, கதர்த்துணிகள், பழங்கள், அயல் நாட்டுத்துணி, வாசனைத் தைலங்கள், தின்பண்டங்கள், இன்னும் பல உள்நாட்டு, அயல் நாட்டுப் பொருள்களும் வந்து இறங்குகின்றன. வடக்கே கோந்து, வெங்காயம், மிளகாய் வற்றல், எலுமிச்சம் பழம், சில தானியங்கள், தோல் முதலியனவும், திருவாங்கூருக்கு வெங்காயம், மிளகாய் வற்றல், எலுமிச்சம் பழம், சில காய்கறிகள், துணிகள், நல்லெண்ணெய் முதலியவைகளும் அனுப்பப் படுகின்றன.

கேள்விகள்.

1. நமது ஜில்லாவில் உள்ள முக்கிய துறைமுகம் எது? அதன் வழியாய் ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்கள் எவை?
2. பஞ்சு, நூல் இவைகள் ஏற்றுமதியாவதற்கும், துணி இறக்குமதியாவதற்கும் காரணம் என்ன?
3. திருவாங்கூரிலிருந்து நமது ஜில்லாவிற்கு வரும் பொருள்கள் எவை? எவ்வழியாக வருகின்றன?

பதினோராம் பாடம்.

மக்கள், சமயம், மொழி, கல்வி.

மக்கள்:—பிள்ளைகளே! நம் ஜில்லாவில் உள்ள திருநெல்வேலித்தாலூகாவில் மக்கள் அதிகமாகவும், நாங்குநேரித் தாலூகாவில் மிகக் குறைவாகவுமிருக்கக் காரணமென்ன?

திருநெல்வேலித் தாலூகாவில் தாம்பிரவர்ணி பாயும் நீர் வசதியும், நல்லவிளைவும் இருப்பதாலும், நாங்குநேரித் தாலூகாவில் அவ்வித வசதிகளில்லாததினாலு மல்லவா?

ஆகவே ஓரிடத்திலுள்ள ஜனத்தொகை அங்குள்ள நீர்வசதி, விளைவு முதலியவற்றைப் பொறுத்திருக்கிறது. நதிப் பிரதேசத்திலுள்ள தாலூகாக்களிலெல்லாம் ஜனநெருக்கம் அதிகம்.

மதம்:—1931ம் வருடக்கணக்குப்படி இந்த ஜில்லாவில் ஹிந்துக்கள் 100க்கு 83 பேர்களும், கிறிஸ்தவர்கள் 11 பேர்களும், மகமதியர்கள் 6 பேர்களும் இருக்கிறார்கள். திருச்செந்தூர் தாலூகாவில் கிறிஸ்தவர்கள் அதிகம். திருநெல்வேலி, தென்காசித் தாலூகாக்களில் மகமதியர்கள் அதிகம். ஹிந்து, கிறிஸ்தவம், மகமதியம் ஆகிய மூன்று மதங்கள், மக்களால் அநுசரிக்கப் பட்டு வருகின்றன. இவைகளில் பெரும்பாலோர் ஹிந்துக்களே.

ஹிந்துக்களில் வைணவர், சைவர் முதலிய பல பிரிவினர்கள் உண்டு. கிறிஸ்து மதத்தைப் போதித்தவர் இயேசுநாதர். அவர் மதத்தைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள். அவர்களில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று ரோமன் கத்தோலிக்க மார்க்கம். இவர்கள் மததரு போப்பரசர். அவர் ரோமாபுரியில் இருக்கிறார். இவர்கள் எல்லோருக்கும் ஒரே சத்தியம், ஒரே கொள்கை உண்டு. இவர்களுடைய கோவில்களில் நடக்கும் ஆராதனைகள் தெய்வத்தினிடம் மனதைத் திருப்பக்கூடியது. 1900 ஆண்டுகளுக்கு முன் புனிதர் தோமையார், இந்தியாவுக்கு வந்தார். புனிதர் சவேரியார் கடற்கரை யோரமாய் வந்து சத்திய வேதத்தை 300 ஆண்டுகளுக்கு முன் பரவச் செய்தார். தேம்பாவணி முதலியவைகளை எழுதிய வீரமா முனிவர் பேர்போன மகான்.

மற்றொன்று புராட்டஸ்டன்டு மார்க்கம். இதில் பல பிரிவுகள் இருக்கின்றன. கால்டுவெல், போப், மர்க்காஷிஸ் முதலிய பாதிரிமார்கள் புகழ் பெற்றவர்கள்.

மகமதியமதம்:— இம்மதத்தைப் போதித்தவர் முகமது நபி. இவர்களின் மசூதியின் உச்சியில் பிறைச் சந்திரன் உருவத்தைக் காணலாம்.

மொழி:--இங்குப் பெரும்பாலோர் பேசுவது தூய்மையான தமிழ்மொழி. பிராமணரில் சிறுபான்மையோரும், நாயக்கர்களும், ரெட்டிமார்களும் தெலுங்கு மொழி பேசுகிறார்கள். சௌராஷ்டிரர் என்ற வகுப்பினர் சௌராஷ்டிர பாஷையும் பேசுகின்றனர். மகமதியர்களில் சிலர் இந்துஸ்தானி பேசுகிறார்கள்.

கல்வி:—கிறிஸ்தவர்களில் அநேகர் கல்வியில் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்கள் அதிகம். அவைகளின் மூலமாய் மற்றவர்களும் கல்வியில் முன்னேறி வருகின்றனர்.

கேள்விகள்.

1. மக்கள் நெருக்கம் எங்கு அதிகம்? எங்குக் குறைவு? ஏன்?
2. நமது ஜில்லாவில் என்னென்ன சமயத்தினர் வாழ்கின்றனர்?
3. அவர்களில் யார் அதிகம்?
4. கிறிஸ்தவர் அதிகம் வாழும் தாலூகாக்கள் எவை? ஏன்?
5. நமது ஜில்லாவில் வழங்கும் முக்கிய மொழிகள் எவை?
6. கல்வியில் எச்சமயத்தினர் மேம்பட்டவர்? காரணம் சொல்லு.

பயிற்சி.

வகுப்பில் உள்ள பல மதத்தினர்களின் பிள்ளைகளைப் பல பாஷைகளில் உரையாடும்படி செய்யவும்.

பனிரண்டாம் பாடம்.

அரசாட்சி.

பிள்ளைகளே! நாம் வசிக்கும் தேசம் இந்தியா. இது ஆதிகாலத்திலிருந்தே நாகரிகம் பெற்ற நாடு. அகத்தியர், திருவள்ளுவர் முதலிய பெரியவர்கள் பிறந்த இடம். சுமார் 200 வருஷகாலமாக இந்நாடு ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கிறது. இது உங்களுக்குத் தெரியும் அல்லவா?

(1) அரசாட்சி முறை.

இங்கிலாந்தின் அரசர் ஆரும் ஜார்ஜ் என்பவர் இப்பொழுது நமக்குச் சக்கரவர்த்தி. அவர் தமக்குப் பிரதிநிதியாக இந்தியாவை ஆள, வைசிராய் என்ற ஒருவரை நியமித்திருக்கிருர். அவர் டில்லியில் இருக்கிருர். அவருக்குக் கீழ் ஒவ்வொரு மாகாணத்தையும் ஆளும் அதிகாரி கவர்னர் எனப்படுவர். அவருக்கு உதவிபுரிய இரு சட்டசபைகளும்,ஒரு நிர்வாக மந்திரிசபையும் இருக்கின்றன. நிர்வாகசபையிலிருக்கும் மந்திரிகள்சட்டசபை அங்கத்தினர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாகாணமும் பல ஜில்லாக்களாகப்பிரிக்கப்பட்டுள்ளது. ஜில்லாவின் அதிகாரிக்குக் கலெக்டர் என்று பெயர். வரி வசூல் இலாகாவுக்குத் தலைவர் ஜில்லா கலெக்டர் தான். அவருக்குக் கீழ் டெபுடி கலெக்டரும், தாசில்தாரும், ரேவினியூ இன்ஸ்பெக்டரும், கிராம முனிசீப்பும், கர்ணமும் உளர். இவர்கள் இராஜாங்கத்தாருக்குச் செலுத்த வேண்டிய நில வரி முதலிய மற்ற வரிகளை வசூல் செய்து செலுத்தி, அதன் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்வார்கள்.

நியாய விசாரணை இலாகா:—இதற்குத் தலைவர் ஜில்லா ஜட்ஜ். இவருக்குக் கீழ் ஸிவில் வழக்குகளை விசாரிக்க சப்ஜட்ஜும், கிரிமினல் வழக்குகளை விசாரிக்கப் பல மாஜிஸ்டிரேட்டுகளும் இருக்கிருர்கள். பொதுவாக ஜனங்களின் வியவகாரங்களைத் தீர்த்துவைப்பதுதான் இவர்கள் வேலை.

போலீஸ் இலாகா:— ஜில்லா போலீஸ் சூப்பிரன்டேன்டேன்ட் இதற்குத் தலைவர். இவருக்குக் கீழ்ப் பட்டவர்கள் டெபுடி சூப்பிரன் டேன்டேன்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்கள். நாட்டில் திருட்டு, சச்சரவு இவைகள் இல்லாமல் சமாதானமும், அமைதியும் இருக்கும்படி பார்த்துக் கொள்வது இவர்கள் வேலை.

கல்வி இலாகா:— ஜில்லாக் கல்வி அதிகாரி இதன் தலைவர். உதவிக்கல்வி அதிகாரிகள் இவருக்குக் கீழ் உண்டு. பள்ளிக் கூடங்கள் நன்ருக நடைபெற்று வருகின்றனவா என்பதைப் பார்ப்பது இவர்கள் வேலை.

தபால், தந்தி இலாகா, காட்டு இலாகா, உப்பு, கள்,சாராய இலாகா, சுகாதார இலாகா, வைத்திய இலாகா, பத்திரப் பதிவு இலாகா, மராமத்து இலாகா முதலிய இன்னும் அநேக இலாகாக்களும் உள்ளன.

ஜில்லா போர்டு:— இந்த ஜில்லாவில் ரோடு வசதி, சுகாதாரம், கல்வி முதலிய பொதுஜன காரியங்களைப் பரிபாலிக்க, திருநெல்வேலி ஜில்லா போர்டு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

முனிசிபாலிடி:— பெரிய நகரங்களில் நகரபரிபாலன சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஜன நன்மைக்குரிய கல்விவிருத்தி, சுகாதாரம், தண்ணீர், ரோடு, விளக்குப் போடுதல் முதலிய காரியங்களைச் செய்தல் இச்சபையின் வேலை. நமது ஜில்லாவில் உள்ள பெரிய நகரங்களாகிய, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி இவ்விடங்களில் முனிசிபாலிடிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

கேள்விகள்.

1. நமது சக்கரவர்த்தியின் பெயர் என்ன?
2. ஜில்லா கலெக்டரின் வேலை என்ன?
3. கல்வி இலாகாத்தலைவரின் வேலைஎன்ன?
4. போலீஸ் இலாகாவின் தலைவர் யார்?
5. நியாய விசாரணை இலாகாவின் வேலை என்ன?
6. நமது ஜில்லாவில் முனிசிபாலிடிகள் உள்ள இடங்கள் எவை?

---

(2) அரசாட்சிப் பிரிவு.

ஒரு ஜில்லாவின் அதிகாரிக்குக் கலெக்டர் என்று பெயர். கலெக்டர் மட்டும் நேராக ஜில்லா முழுவதையும் கவனிப்பது கஷ்டம் அல்லவா? ஆகவே நமது ஜில்லா பற்பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் தாலுகா என்று பெயர். நமது ஜில்லாவில் 8 தாலுகாக்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு தாலுகாவின் அதிகாரிக்கும் தாசில்தார் என்று பெயர். இவர்களின் வேலையை மேற்பார்வையிடச் சில தாலுகாக்களைச் சேர்த்து, ஒரு ரேவினியூ டிவிஷனல் ஆபீஸர், அல்லது சப்கலெக்டர் இருக்கிறார்.

அம்பாசமுத்திரம், நாங்குநேரி ஆகிய இவைசேர்ந்தது சேர்மாதேவி (சப்கலெக்டர்)டிவிஷன், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய இவைகள் சேர்ந்தது தூத்துக்குடி (சப்கலெக்டர்) டிவிஷன்.

கோவில்பட்டி, சங்கரநயினூர் கோவில் ஆகிய இவைகள் சேர்ந்தது கோவில்பட்டி (டெபுடி கலெக்டர்) டிவிஷன். திருநெல்வேலி, தென்காசி ஆகிய இவைகள் சேர்ந்தது திருநெல்வேலி (டெபுடி கலெக்டர்) டிவிஷன்.

நமது ஜில்லாவில் உள்ள தாலுகாக்கள்:-1. திருநெல்வேலி, 2. தென்காசி, 3. சங்கரநயினூர் கோவில், 4. கோவில் பட்டி, 5. ஸ்ரீவைகுண்டம், 6. திருச்செந்தூர், 7. நாங்குநேரி, 8. அம்பாசமுத்திரம் என்பன.

இனி ஒவ்வொரு தாலுகாக்களைப்பற்றியும் விபரமாகப்படிப்போம்.

கேள்விகள்.

1. நமது ஜில்லாவை எத்தனை டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள்? அவை எவையெவை?
2. ஒவ்வொரு டிவிஷனிலும் அடங்கிய தாலுகாக்கள் எவை?
3. நமது ஜில்லாவில் மிகப் பெரியதும், மிகச் சிறியதுமாகிய தாலுகாக்கள் எவை?
4. உன்னுடைய ஊர், எந்தத் தாலுகாவில் எந்த டிவிஷனைச் சேர்ந்தது? படத்திலும் காட்டுக.

பயிற்சி.

1. திருநெல்வேலி ஜில்லாப்படம் வரைந்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் வெவ்வேறு வர்ணம் பூசுக.
2. நமது ஜில்லாவைத் தனித்தனித் தாலுகாக்களாக வர்ணம் பூசிக் காட்டுக.
3. உனது ஊரைப் படத்தில் குறிப்பிடுக.
4. படத்தில் குறித்துள்ள அளவின் உதவியால் நமது ஜில்லாவின் கீழ், மேல், தென், வட நீளங்களை அளந்து பெருக்கிக் கண்டு பிடிக்க.
5. படத்தை அங்குலச் சதுரங்களாகப் பிரித்துப் பரப்புக் கண்டு பிடிக்க.

பதின்மூன்றும் பாடம்.

தாலுகாக்களும் முக்கிய ஊர்களும்.

1. திருநெல்வேலித் தாலுகா.

இது ஜில்லாவின் மத்தியில் இருக்கிறது. இதன் எல்லைகளைப் படத்தில் பார். இது நமது ஜில்லாவில் உள்ள மற்ற தாலுகாக்களைப் பார்க்கிலும் சிறியது. இதில் தாம்பிரவர்ணி நதி செல்லும் திசையைப் பார். இது மேற்கிலிருந்து கிழக்கு முகமாகச் செல்லுகிறது. அதனால் இந்தத்தாலுகாவின் மேல்புறம் மேடாகவும், கிழக்கே போகப்போகப் பள்ளமாகவும் இருக்கிறது என்று தெரிகின்றது அல்லவா? இங்கே ஜன நெருக்கம் மிகவும் அதிகம். தாம்பிரவர்ணி நீர்ப்பாய்ச்சலின் சிறப்பாலேயே இத்தாலுகா செழிப்பாகவுள்ளது. இங்கே நெல் விளைவும், மகமதியர்களின் வியாபாரமும் அதிகம்.

1. திருநெல்வேலி:—இது இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இது தாம்பிரவர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள ஒரு ரயில்வே ஜங்ஷன். இதை வீரராகவபுரம் என்றும் கூறுவார்கள். இங்கிருந்து மூன்று பக்கங்களில் இருப்புப் பாதைகளும், ரஸ்தாக்களும் செல்லுகின்றன. இவ்வூர் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற ஸ்தலம். இங்குள்ள சிவன் கோவிலில் ஆனிமாதத்தில் பெரிய திருவிழா நடைபெறும். பெரும் புலவர்களான மயிலேறும் பெருமாள் பிள்ளை, சாமிநாத தேசிகர், சங்கரநமச்சிவாயப் புலவர் முதலியவர்கள் பிறந்த ஊர் இது தான். இந்நகரத்தின் விசேஷங்களைப் பற்றி நாம் முன்பே படித்திருக்கிறோம். தாம்பிரவர்ணி நதியில் உள்ள குறுக்குத்துறையில் சுப்பிரமணிய சுவாமி கோவில் பிரசித்தி பெற்ற ஸ்தலம்.

2. பேட்டை:—இது திருநெல்வேலி முனிசிபாலிடியைச் சேர்ந்தது. இங்கு மகமதியர்கள் அதிகம். வியாபாரம் மிகுதி. முனிசிபல் மகமதிய உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்று உண்டு.

3. பாளையங்கோட்டை:—பாளையக்காரர்கள் கோட்டை இருந்த ஊராதலால் இதற்குப் பாளையங்கோட்டை என்னும் பெயர் வந்தது போலும். இது ஒரு முனிசிபல் டவுன். ஜில்லா



சென்டினெரி ஹால், பாளையங்கோட்டை

ஜட்ஜ், சப்ஜட்ஜ்,பெரிய இஞ்சினீயர், ஜில்லாக் கல்வி அதிகாரி, போலீஸ் ஜில்லா சூப்பிரன்டென்டெண்ட், ஜில்லா டாக்டர் இன்னும் அநேக ஜமீன் குடும்பத்தினர் இங்கு வாழ்கின்றனர். இங்குக் கிறிஸ்தவர் மிகுதி. செண்ட் சேவியர்ஸ் காலேஜும், செண்ட் ஜான்ஸ் காலேஜும், பெண்களுக்கான ஸாராடக்கர் காலேஜும் இருக்கின்றன. செண்ட் இக்நேஷியஸ் ஹைஸ்கூலில் கத்தோலிக்கப் பெண்

திருநெல்வேலி ஜில்லா
தாலுகாக்களும், முக்கியபட்டணங்களும்.
இராமநாதபுரம் ஜில்லா
வ
சிவகிரி
வாசுதேவநல்லூர்
கரிவலம்வந்தநல்லூர்
நெற்கட்டும்சேவல்
தலைவன்கோட்டை
அழகாபுரி
புளியன்குடி
சங்கர நயினர்கோவில்
குருவிகுளம்
கழுகுமலை
கோவில்பட்டி
நாகலாபுரம்
சொக்கம் பட்டி
சங்கரநயினர் கோவில் தாலுகா
வீரசிகாமணி
நாலாட்டின்புத்தூர்
எட்டையாபுரம்
விளாத்திகுளம்
கடையநல்லூர்
கோவில்பட்டி தாலுகா
எப்போதுவென்றான்
பசுவந்தனை
குளத்தூர்
பண்புலிப்பட்டணம்
சுந்தர பாண்டியபுரம்
சுரண்டை
இலஞ்சி
தென்காசி
மேலகரம்
வீரகேரளம்புதூர்
கடம்பூர்
கயத்தாறு
குருக்குச்சாலை
ஓட்டப்பிடாரம்
குற்றாலம்
பாவூர்
தென்காசி தாலுகா
ஆலங்குளம்
கங்கைகொண்டான்
மணியாச்சி
திருநெல்வேலி தாலுகா
மானூர்
சீவலப்பேரி
தட்டப்பாறை
தூத்துக்குடி
கடையம்
பொட்டல்புதூர்
திருப்புடைமருதூர்
பிரம்மதேசம்
ஊர்க்காடு
திருநெல்வேலி
மணப்படை
பாளையங்கோட்டை
ஸ்ரீவைகுண்டம் தாலுகா
வல்லநாடு
பாபநாசம்
அம்பாசமுத்திரம்
கோக்கிரகுளம்
மேலப்பாளையம்
முயல்தீவு
செய்துங்கநல்லூர்
சாயர்புரம்
கல்லிடைக்குறிச்சி
வீரவநல்லூர்
சேரன்மாதேவி
கிருஷ்ணபுரம்
பேட்மாநகரம்
பழயகாயல்
சிங்கம்பட்டி
பத்தமடை
கோபால சமுத்திரம்
ஸ்ரீவைகுண்டம்
பெருங்குளம்
கொற்கை
அம்பாசமுத்திரம் தாலுகா
ஆதிச்ச நல்லூர்
ஏரல்
ஆழ்வார்திருநகரி
ஆறுமுகநேரி
காயல்பட்டினம்
முலைக்கரைப்பட்டி
களக்காடு
நாசரத்
நாங்குநேரி தாலுகா
திருச்செந்தூர் தாலுகா
திருச்செந்தூர்
நாங்குநேரி
மெய்ஞ்ஞானபுரம்
திருக்குறுங்குடி
விஜயநாராயணம்
சாத்தான்குளம்
ஏர்வாடி
இட்டமொழி
உடன்குடி
குலசேகரபட்டினம்
மணப்பாடு
வள்ளியூர்
சமுகரங்கபுரம்
திருவாங்கூர் ராஜ்யம்
பணகுடி
திசையன்விளை
வடக்கன்குளம்
இராதாபுரம்
இடையன்குடி
மன்னார் வளைகுடா
ஸ்கேல் 1 அங்குலம்—12 மைல்

கள் அதிகமாகக்கற்று வருகிறார்கள். குருடர், செவிடர், ஊமையர்களுக்குப் பள்ளிக்கூடமும், சிறைக் கைதிப் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடமும், (பார்ஸ்டல் ஸ்கூல்) பிஷப்சார்ஜன்ட் டிரெயினிங் ஸ்கூலும் இருக்கின்றன.

4. கொக்கிரகுளம்:— இது தாம்பிரவர்ணியின் கீழ்க் கரையில் உள்ளது. இங்கே ஜில்லா நீதிமன்றங்கள் எல்லாம் இருக்கின்றன.

5. வண்ணார் பேட்டை:— இங்கே அநேக அதிகாரிகளும், வக்கீல்களும் வசிக்கின்றனர். மருத்துவ ஆஸ்பத்திரியும், மாணவர்களுக்கு வேளாளர் கார்காத்தார் ஹாஸ்டலும், கண் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

6. மேலப்பாளையம்:— இங்கு மகமதியர்கள் அதிகம். பாய், சமுக்காளம், துணி நெசவு இவைகள் மிகுதி; பள்ளி வாசல்கள் இருக்கின்றன. மாட்டுச் சந்தையும், மீன் சந்தையும் கூடுகின்றன. தோலும் பதம் இடப் பெறுகின்றது. வியாபாரமும் உண்டு. இது ஒரு யூனியன்.

7. கிருஷ்ணபுரம்:—இது பாளையங் கோட்டையிலிருந்து திருச்செந்தூருக்குப் போகும் சாலையில் ஆறுவது மைலில் இருக்கிறது. கிருஷ்ணப்ப நாயக்கரால் கட்டப்பெற்ற இங்குள்ள விஷ்ணு கோவில் வெகு அழகாக உள்ளது. கல்வெட்டுகளும், சிற்பவேலைப் பாடுகளும் நிறைந்துள்ளன. பழைய கட்டிடங்கள், தெப்பக்குளம், கிணறுகள் முதலியவைகள் சிதைந்து கிடப்பதிலிருந்து, இது பண்டையில் பெரிய ஊராக இருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கலாம்.

8. மணப்படை வீடு:—பாண்டியர்களின் படை இங்கு இருந்தனவாம். இப்பொழுது சிறிதாக இருந்தாலும், பழைய காலத்தில் இவ்வூர் பெரிதாகவே இருந்திருக்கும். இங்குள்ள கோவில்களில் கல் வெட்டுகளும் அழகான சிற்பவேலைகளும் காணப்படுகின்றன.

9. சீவலப்பேரி:— சித்திரா நதி தாம்பிரவர்ணியுடன் கலக்கும் இடம். இதன் இடையில் கான்ஸாபுரம் என்னும் ஊர் இருந்து, வெள்ளத்தால் அழிந்து போயிற்று. இதில் உள்ள மகமதியர், பர்கிட்மா நகரத்தில் வந்து குடியேறியிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷன், தளவாய் முதலியார் சத்திரம் முதலியவைகள் இங்கே இருக்கின்றன. இங்குள்ள அழகர் கோவிலில் சோழ, பாண்டியர் கல்வெட்டுகள் உள்ளன. இங்குப் பெரிய மாட்டுச்சந்தை கூடும். முக்கூடல் பள்ளுப்பாடிய என்னயினுப் புலவர் இங்கிருந்தார்.

10 பாலாமடை:--தாம்பிரவர்ணியின் வடகரையில் செப்பறைப்பக்கம் உள்ளது. இது திருமலைநாயக்கரின் மந்திரி நீலகண்ட தீட்சதருக்கு அளிக்கப்பெற்றது.

11. செப்பறை:— தாழையூற்று ஸ்டேஷனில் இறங்கினால் தாம்பிரவர்ணிப் பக்கம் உள்ள இராசவல்லிபுரம் வந்து சேரலாம். இங்குக் கார்காத்தார் அதிகம். நிலவளம், நீர் வளம் மிகுதி. இதன் பக்கம் செப்பறை இருக்கிறது. திருவாதிரைத் திருவிழா இங்குச் சிறப்பாய் நடைபெறும். இங்குதான் வடமொழி வித்துவான் கனகசபாபதி சிவாச்சாரியார் இருந்தார்.

12. கங்கைகோண்டான்:-முழுப் பெயர் கங்கைகொண்ட சோழ சதுர் வேதமங்கலம் என்று சாசனங்களால் தெரிகிறது. திருநெல்வேலியில் இருந்து மதுரைக்குப் போகும் சாலையில் உள்ளது. பக்கத்துப் பள்ளிவாசலில் ஒரு காலம் ஒரு பார்ப்பனப்பெண் கள்ளர்க்குப் பயந்து 'அல்லாவே காக்க' என்று அண்டியதாகவும், கள்ளரின் கண்ணைக் கெடுத்து அப் பெண்ணைக்காப்பாற்றியதாகவும், அதனால் யாவரும் அப் பள்ளியைத் தொழுவதாகவும் தெரிகிறது. ராஜாக்கள் அல்லது க்ஷத்திரியர் என்னும் குலத்தினர், தாங்கள் பாண்டியரின் பின்னோர் என்றுசொல்லி இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஏழு கண் பாலம் ஒன்று எட்டையபுரம் ஜமீனால் இங்கே கட்டப்பட்டிருக்கிறது.

13. மானூர்:—திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவிலுக்குப் போகும் வழியில் ஒன்பதாவது மைலில் இருக்கிறது. கருவூர், அருள் சித்தர் பாடிய அறத்தால் இவ்வூர் க்ஷீண திசையை யடைந்ததாம். இங்குள்ள அம்பலவாண தேசிகர் கோவிலுக்கு முன் அடிகல் தூண் ஒன்று உண்டு. இதில் பாண்டியன், மெக்காவிலுள்ள முகமதைப் பிரதிஷ்டை செய்ததாய்ச் சொல்லுவார்கள். சுவாமி கோவிலில் மாறன், சடையன், கோனேறி, மெய் கொண்டான் என்ற பாண்டியர்களின் கல் வெட்டுகள் இருக்கின்றன.

14. உக்கரன் கோட்டை:—இது கிறிஸ்தவர் நிறைந்த இடம். இங்கு ஒரு சர்க்கிள்சேர்மன் இருக்கிறார். இங்குள்ளவர்க்குத் தொழில் விவசாயம்.

15. தச்ச நல்லூர்:—இது ஒரு யூனியன் டவுன். சீனி ஆலை உண்டு. பயிர்த் தொழில் மிகுதி. இங்குப் பாத்திர வேலை அதிகம்.

---

2. தென்காசித் தாலூகா.

இது திருநெல்வேலித் தாலூகாவுக்கு வடமேற்காகவும், அம்பாசமுத்திரம் தாலூகாவுக்கு வடக்காகவும், சங்கரன் கோவில் தாலூகாவுக்குத் தெற்காகவும் அமைந்துள்ளது. இங்கே நிலவளமும், நீர்வளமும் அதிகம். இதற்கு மேற்கு எல்லை மேற்குத் தொடர்ச்சி மலையே. இங்குத் திருவாங்கூருக்குச் சொந்தமான இடங்களும் சில உண்டு. இங்குச் சித்திராநதி பாய்கின்றது. பல கால்வாய்களும், குளங்களும் உண்டு. நெல், சோளம் முதலிய விவசாயம் இங்குள்ள பொதுத் தொழிலாகும். பனை மரங்கள் இத்தாலூகாவில் மிகுதி யாதலால் இங்குப் பனைவெல்லம் செய்யப்படுகின்றது.

1. தென்காசி:—காசிக்கு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இது தெற்கிலுள்ள காசி போன்று இருக்கின்றது. இதைக் காஞ்சிக்கு ஒப்பிட்டுத் தென்காஞ்சி என்றும் சொல்வர். இது ஒரு ரயில்வே ஜங்ஷன். ஆஸ்பத்திரி, போலீஸ் ஸ்டேஷன், தாசில்தார், சப்மாஜிஸ்டிரேட் கச்சேரி, சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், தந்தி, தபாலாபீஸ்கள், போர்டு ஹைஸ்கூல் இவைகள் இங்கே இருக்கின்றன. இங்கு ஒரு பெரிய சிவன்கோவிலும், இடிந்த கோபுரமும் இருக்கின்றன. கோவில் அரிகேசரி அல்லது காசியை ஆண்ட பராக்கிரம பாண்டியனிடம் காசி விசுவநாதர் கனவில் தோன்றிக் கூறியபடி கட்டப்பெற்றது. இவனுக்குப்பின் இவன் தம்பியால் கோபுரம் முடிவுபெற்றது. பல சிற்பவேலை நிறைந்தது. கல் வெட்

டுகள் உண்டு. கோபுரம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் இடியினுல் ஏற்பட்ட மின்னலினுல், அழிவுறும் நிலையில் இருக்கிறது. இவ்வூரில் கால் பங்கு மக்கள் மகமதியரே. அவர்களுக்கு நெசவுத்தொழில் உண்டு. செங்குந்தர் அல்லது, கைக்கோளர்கள் சேலை நெய்கிருர்கள். புதன்கிழமை ஒரு பெரிய வாரச்சந்தை கூடும். மகமதியப் பள்ளியொன்றிருக்கிறது. இங்குள்ள கத்தோலிக்கரின் புனித மிக்கேல் தூதர் ஆலயத்தில் ஆண்டுத் திருவிழா வெகு சிறப்பாய் நடக்கும்.

2. மேலகரம்:—திருக்குற்ருலத் தலபுராணம், குற்ருலக் குறவஞ்சி முதலிய நூல்களைப் பாடிய திரிகூடராசப் பக்கவிராயர் பிறந்த இடம். அவர் மரபினர் இன்னும் இருக்கின்றனர்.

திருக்குற்ருலம்

3. குற்றலம்:-இது போலீஸ் உதவிச் சூப்பிரன்டென்டென்ட் வாழும் இடம். தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் சம தூரத்தில் உள்ளது. சிற்ருறு அருவியாய் வந்து விழும் இடம். இதன் முதன்மைக்குக் காரணங்கள் அருவியின் சிறப்பு, காட்சியின் மாண்பு, கோவில் பெருமை, குளிர்ச்சியின்தன்மை முதலியன. இந்தியர்களுக்கும், வெள்ளைக்காரர்களுக்கும் வசந்தகால இருப்பிடமிதுவே. குற்ருலநாதர் கோவிலுக்கு அடுத்து, மேலிருக்கும் திரிகூடமலையின் இடையில் ஐந்தருவி, தேன் அருவி, செண்பகாதேவி அருவி முதலியன இருக்கின்றன. இங்குள்ள மலையில் சாதிக்காய், கிராம்பு, பலா, மா, தென்னை, மங்குஸ்தான், ஆரஞ்சு முதலியனவும், பல வகைப் பூக்களும் செழித்து வளருகின்றன. காட்டு ஆடு, மான், கழுதைப்புலி, மந்திகள் இங்கு அதிகம். இது திருஞான சம்பந்தர் முதலியோரால் பாடப்பெற்ற இடம்.

4. இலஞ்சி:—இது பெரும் தனவந்தர்கள் வாழும் இடம். மிடில் ஸ்கூல் ஒன்று உண்டு. இவ்வூர்க் கோவிலி லுள்ள சுப்பிரமணியரின் வேண்டுகோளுக் கிணங்கி, அகத்தியர் தனது கல்வியின் உயர்வால் குற்ருலத்தில் உள்ள பெருமாள் கோவிலைச் சிவன்கோவிலாக்கினுர் என்பாரும் உளர்.

5. பண்புளிப்பட்டணம்:—இவ்வூர் செழிப்பானது. பக்கத்தில் திருமலைக்கோயில் இருக்கிறது. முருகன் கோவில், குன்றின்மேல் அழகுற விளங்குகிறது. இங்கு ஓர் உயர்தர எலிமெண்டரி ஸ்கூல் இருக்கிறது.

6. கடையநல்லூர்:-இங்கு நெசவுத் தொழில் செய்யும் மகமதியர் பலர் உண்டு. ஜில்லாபோர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இது ஒரு யூனியன்

டவுன். இங்கே வியாழக் கிழமை தோறும் சந்தை கூடுகிறது. போலீஸ் ஸ்டேஷனும், சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸும் உண்டு.

7. சொக்கம் பட்டி:— பழைய ஜமீன்களில் ஒன்று. ஜமீன்தார் ஒருவர் குற்ருலத்தில் முன் மண்டபம், சத்திரம் இவைகளைக் கட்டியுள்ளார். கோவிலுக்குப் பல தருமங்களும் செய்திருக்கிருர்.

8. நயினுரகரம்:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு ஒரு வாரச் சந்தை கூடுகிறது.

9. பாவூர்:— பாவூர் சத்திரம், கீழப்பாவூர், மேலப்பாவூர் என்ற இரு பிரிவுகள் உண்டு. இவைகள் செழிப்பான இடங்கள். இங்கே, பயிர்த் தொழில், நெசவு, வாணிபம் இவைகள் அதிகம்.

10. சுந்தரபாண்டியபுரம்:—சுந்தர பாண்டியனுல் ஏற்பட்டது போலும். இது ஒரு செழிப்பான இடம். இங்கே பெரிய குளம் ஒன்று இருக்கிறது. பிராமணத் தனவந்தர்கள் அதிகம்.

11. சுரண்டை:—இங்கு வாரத்திற்கு இரண்டு தடவைகள் சந்தை கூடும். இங்கு மகமதியர்கள் பாய் நெசவையும், கன்னர்கள் வெங்கலப் பாத்திரங்கள் செய்தலையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். ஸி. எம்.எஸ். உயர்தர ஆரம்பப் பாடசாலையும், ஆபிரகாம் பண்டிதர் பங்களாவும், சத்திரமும் இங்கே இருக்கின்றன. இங்குச் சர்க்கிள் சேர்மனும் இருக்கின்றுர்.

12. வீரகேரளம் புதூர்:—இவ்வூர் ஊற்றுமலை ஜமீனின் தலைமைப் பட்டணம். இது செழிப்பான ஊர். இங்குள்ள அரண்மனைக்கு இடையே கால்வாய் ஓடுவது அழகாக இருக்கும். இங்கே மரங்கள் நிறைந்த தோப்பு ஒன்று இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனும், ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

13. நல்லூர்:— இங்கு ஆண், பெண் கிறிஸ்தவர் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒரு பாதிரியார் இருக்கின்றுர். ஓர் சர்ச்சும் உள்ளது. இங்கே வாரச்சந்தை கூடுகின்றது. பக்கத்தில் உள்ள ஆலப்பட்டியில் நாடார்களின் வைத்தியலிங்கசுவாமி கோவில் இருக்கின்றது.

14. ஆலங்குளம்:— இங்கே வாணிபமும், விவசாயமும் அதிகம். போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இங்குக் காய்கறிகள் அதிகம். இங்கிருந்து விறகு ஏராளமாகத் திருநெல்வேலிக்கு வருகிறது. இது சொக்கம் பட்டி, ஊற்றுமலை ஜமீன்களைச் சேர்ந்த இடம்.

---

3. சங்கரநயினர் கோவில் தாலுகா.

இத்தாலுகா உள்நாட்டில் ஜில்லாவின் வடமேற்கிலுள்ளது. மூன்றிலொரு பாகம் ஜமீனைச் சேர்ந்தது. மேற்குமலைத் தொடர்ச்சியிலிருந்து ஓடும் சிற்ருறுகளாலும், ஓடைகளாலும் வளம்பெற்றது. இங்கு மறவர்கள் அதிகம். பல்வேறு இடங்களில் பழைய நாணயங்கள் கிடைக்கின்றன. அதனுல் இது முற்காலத்தில் முன்னேற்றமடைந்திருந்தது என்று கருத இடமிருக்கிறது.

1. சங்கரநயினர்கோவில்:—இது இத்தாலுகாவின் தலைநகர். இங்குச் சிறப்பான கோவில் ஒன்று இருக்

கிறது. சுவாமியின் பெயர் சங்கரநாராயணர். ஒரே சிலையில் பாதி சிவனும்



சங்கரநயினர் கோவில்

பாதி விஷ்ணுவுமாகக் காணப்படுகிறது. அம்பாளின் பெயர் கோமதி அம்மன். இங்கு ஆடித்தவசு உற்சவம் வெகு சிறப்பாய் நடைபெறும். இங்கே போர்டு ஹைஸ்கூல் ஒன்று உண்டு. இவ்வூர் தென்காசி, விருதுநகர் இருப்புப் பாதையில் உள்ள ஸ்டேஷன்களில் முக்கியமானது. இதைப்பற்றிய புராணக்கதை ஒன்றுண்டு. பாளையக் கலகங்கள் நடக்கும்பொழுது இங்கு ஆங்கிலேயர் படை தங்கியது. சர்க்கிள் சேர்மன் இங்கே இருக்கிறார். இங்கே தாலுகா ஆபீசும், சப்மாஜிஸ்ட்ரேட் ஆபீசும், போலீஸ் ஸ்டேஷனும், ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

2. கரிவலம்வந்தநல்லூர்:— (கருவநல்லூர்) யானை ஒன்று இங்குள்ள கோயிலை வலம் வந்து வணங்கும் வழக்கம் உள்ளதால் இது இப்பெயர் பெற்றது. வரதுங்கராம பாண்டியர் இதை ஆண்டுவந்தார். அதி வீரராமபாண்டியன் இதைப்பற்றிக் "கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி" பாடியுள்ளார்.

3. புளியங்குடி:— இங்கிருந்து தென்காசி, சிவகிரி, சங்கரநயினர் கோவில் முதலிய இடங்களுக்குச் சாலைகள் பிரிகின்றன. இங்கு நெசவு, பயிர்த்தொழில் இவை அதிகம். இங்கே பழைய கோவில் ஒன்று உண்டு. போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை இங்கு இருக்கிறது.

4. வாசுதேவ நல்லூர்— இது வைப்பாற்றங் கரையில் மலையடியில் உள்ளது. முன் நாளில் இங்கே இரும்பு வெட்டியெடுத்ததாகக் கூறுவர். நெல் விளைவு அதிகம். போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. இவ்வூர் அர்த்தநாரீசுவரர் கோவிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இங்கே ஆடுமாடுகள் அதிகம்.

5. சிவகிரி:—இது இந்த ஜமீனின் தலைநகர். சிவன் கோவில் ஒன்று உண்டு. போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலையும், வி. வி. உயர்தர ஆரம்பப் பாடசாலையும், ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. இங்கு விளையும் புகையிலை மிகச் சிறந்தது. இங்கு ஆடுமாடுகள் ஏராளம்.

6. சேந்தமரம்:—இங்கு ஆண், பெண் இருபாலர்க்கும் உயர்தர ஆரம்பப்பாடசாலைகளும், மாதாகோவிலும் இருக்கின்றன. அக்கோவிலில் நடக்கும் உற்சவத்திற்கு ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள். இங்கு ஒரு பங்குக் குருவுமிருக்கிறார். கன்னியர் மடமும் உண்டு.

———

4. கோவில்பட்டித் தாலுகா.

இது விஸ்தீரணத்தில் பெரிதாயிருந்தாலும், ஜனத்தொகையில் குறைந்ததே. கரிசல் நிலம் அதிகம். பருத்தியும் மிகுதி. தெலுங்கு பேசும் நாயக்கர்களும், ரெட்டியார்களும் அதிகமாக வசிக்கிறார்கள். வடபாகத்தில் வைப்பாறு பாய்கிறது. மழைகாலத்தில் நிரம்பியோடும் உப்போடைகள் அதிகம். இங்குள்ள பஞ்சாலைகளில் பலர் பிழைக்கிறார்கள். நெல் சொற்பமாய்ப் பயிராகும்.

1. கோவில்பட்டி:—இது இத்தாலுகாவின் முதன்மைப் பட்டணம். இங்கிருந்து நாற்புறமும் சாலைகள் பிரிகின்றன. போர்டு ஹைஸ்கூலும், கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூலும், ஆயிரவைசிய தர்ம உயர்தர ஆரம்பப்பாடசாலையும் இருக்கின்றன. டிவிஷன் கலெக்டர், தாசில்தார், சப்மாஜிஸ்ட்ரேட் முதலிய அதிகாரிகள் இருக்கிறார்கள். பஞ்சாலை ஒன்று இருக்கிறது. நூலும் நூற்கப்படுகிறது. சமக்காளம் முதலிய நெசவு உண்டு. வாணிபம் அதிகம். பயிர்த்தொழில் பண்ணை ஒன்றிருக்கிறது.



கழுகுமலை

2. கழுகுமலை:—இது எட்டையபுரம் ஜமீனைச் சேர்ந்தது. 300 அடி உயரமுள்ள மலைமேல் முருகன் கோவில் சிறந்து விளங்குகிறது. இம்முருகன்மீதுதான் அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து பாடினார். இங்குக் கத்தோலிக்க கோவிலும், போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன. பங்குக்குரு ஒருவரும் இங்கே இருக்கிறார். இங்கே வாரச் சந்தையும், ஆண்டிற்கு இருமுறை மாட்டுச் சந்தைகளும் கூடுகின்றன.

3. நாகலாபுரம்:— பாஞ்சாலங்குறிச்சிக் கலகத்தில் கலந்துகொண்ட சுப்பிரமணிய பிள்ளையைத் தூக்கிலிட்ட இடம் இதுவே. இங்கே வியாழக்கிழமை தோறும் சந்தைகூடும். மிஷன் பள்ளிக்கூடமும், மிஷன் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

4. புதூர்:—இது ஒரு ஜமீன். இங்கே நாடார் உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்றிருக்கிறது. மிஷன் ஆஸ்பத்திரியு மிருக்கிறது. இங்கே நெசவுத் தொழில் அதிகம்.



எட்டையபுரம் அரண்மனை

5. எட்டையபுரம்.— இது ஒரு ஜமீன் கிராமம். பஞ்சாலையும், எலும்புப்பொடி செய்யும் இயந்திரமும் இருக்கின்றன. இங்கிருந்து பருத்தி தூத்துக்குடிக்கு ஏற்றுமதி ஆகிறது.

எட்டையப்பன் ஆண்ட ஊராதலால், எட்டையபுரம் என்றாயிற்றும். இந்த ஜமீன்தார் பாஞ்சாலங்குறிச்சியை அடக்க ஆங்கிலேயருக்கு உதவி செய்தார். இங்குக் கடிகை முத்துப் புலவர், தேசியகவி சுப்பிரமணிய பாரதி முதலியோர் பிறந்தனர். இங்கே ஜமீன்தாரால் ஒருதர்ம உயர்தர ஆரம்பப் பாடசாலையும், ஆஸ்பத்திரியும் நடத்தப்படுகின்றன.

6. விளாத்திகுளம்:— இங்கே ஒரு பஞ்சாலையும், போலீஸ் ஸ்டேஷனும், சப் மாஜிஸ்ட்ரேட் ஆபீசும், போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன. இவ்வூரில் செங்குந்தர்கள் அதிகம். இவர்கள் சேலை, ரெட்டு நெய்வதிலும், நூலுக்குச் சாயம் ஏற்றுவதிலும் தேர்ந்தவர்கள்.

7. கடம்பூர்:—இது ஒரு ஜமீன். இங்கு நாடாரால் நடத்தப்பட்ட ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. எலும்புடைக்கும் இயந்திரமும், பஞ்சாலையும் இங்கிருக்கின்றன.

8. கயத்தாறு:—வியாழக்கிழமை தோறும் இங்குக் கூடும் சந்தையில் ஆடு, தானியங்கள் முதலியன விலையாகின்றன. இங்கே மகமதியர்கள் அதிகம். இவர்கள் துணி, பாய் இவைகளை நெய்கிறார்கள். இந்த ஊரில் தான் கட்டப்பொம்மன் தூக்கிலிடப் பெற்றான். போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. இங்கே இருக்கின்ற கோவிலிலுள்ள பெருமாள் மீது காளமேகப் புலவர் பாடியிருக்கிறார். இங்குள்ள ஊற்றை இராமர் உண்டாக்கினதாகக் கூறுவர். இதனால் இவ்வூருக்கு இப்பெயர் வந்தது என்பார்கள்.

9. பண்ணிகுளம்:—இது கயத்தாற்றிலிருந்து கடம்பூருக்குப் போகும் பாதையிலுள்ளது. இங்கு மிஷன் சர்க்கிள் சேர்மனும், ரோமன் பங்குக் குருவுமிருக்கிறார்கள். இங்கே கிறிஸ்தவர்கள் அதிகம்.

10. நாரைக்கிணறு:— இங்கு மிஷன் பெண்பாடசாலை யொன்றிருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கே தோட்டப்பயிர் அதிகம்.

11. ஒட்டப்பிடாரம்:—கோவில்பட்டித்தாலூகா தலைமைஊராவதற்கு முன்பு இது தாலூகாவாகவும், தலைமை நகராகவும் இருந்தது. இங்கு ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையும், புதூர் ஜமீன்தார் சத்திர மொன்றுமிருக்கின்றன. தென் கிழக்கில் இரண்டு மைல் தூரத்தில் பாஞ்சாலங்குறிச்சி பாழடைந்து கிடக்கிறது. பாஞ்சாலங்குறிச்சிக்கலகத்தில்மடிந்த ஐந்து ஐரோப்பியருடைய கல்லறைகள் இதன் அருகில் இருக்கின்றன.

12. குறுக்குச்சாலை:—இது எட்டையபுரத்திலிருந்து தூத்துக்குடிக்குப் போகும் வழியில் உள்ள முக்கிய ஊர். இங்கு ரெட்டியார் சத்திரமும், பஞ்சாலையும் இருக்கின்றன.

13. எப்போதுவென்றான்:—இது தூத்துக்குடியிலிருந்து எட்டையபுரம் போகும் சாலையில் உள்ள முக்கிய ஊர். இங்கே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது.

14. குளத்தூர்:— இது ஒரு ஜமீன். இங்கு நாடார் உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்றிருக்கிறது. இவ்வூரில் சர்க்கிள் சேர்மன் இருக்கிறார்.

எட்டையபுரம், மணியாச்சி, குளத்தூர்,கடம்பூர் இவைகள் இத்தாலூகாவின் முக்கிய ஜமீன்களாகும்.

5. ஸ்ரீவைகுண்டம் தாலூகா.

இது புதிதாக ஏற்படுத்தப் பெற்றது. திருநெல்வேலி தாலூகாவின் கிழக்கே கடலோரமாய் உள்ளது. பெரும்பாலும் பனேயும், உடையும் நிறைந்த மணற்பாங்காய் இருந்தாலும் சிறுபாகம், இருபோகம் விளேயக்கூடிய நன்செயாகவும் இருக்கிறது. தாம்பிரவர்ணி இதன் நடுவில் ஓடுகின்றது. இத்தாலூகா சமவெளிப்பிரதேசம். வல்ல நாடு, மணக்கரை முதலிய குன்றுகளுண்டு. இது ஜன நெருக்கம் உள்ள தாலூகா. இங்கே இந்துக்கள் அதிகம். மகமதியரும், கிறிஸ்தவரும் இருக்கின்றனர். ஆதிச்சநல்லூர், கொற்கை, பழைய காயல் முதலிய பழைய வரலாறு கொண்ட ஊர்கள் இத்தாலூகாவில் இருக்கின்றன.

1. ஸ்ரீவைகுண்டம்:— இது தாம்பிரவர்ணி நதிக்கரையில் அமைந்திருக்கிறது. வைகுண்டபதி என்பது ஸ்வாமியின்பெயர். கோவிலில் உள்ள மண்டபத்தில் அருமையான சிற்பவேலேகளுண்டு. கட்டப்பொம்மநாயக்கர் ஆங்கிலேயருடன் போர் செய்யுங்காலத்தில் இக்கோவில் ஒரு அரணுக்க் கம்பெனியாருக்கு உதவிற்று. இவ்வூரில் கோட்டைப் பிள்ளேமார் என்ற ஒரு வகுப்பார் மண்கோட்டைக்குள் வாழ்கின்றனர். அப்பெண்கள் வெளியேறமாட்டார்கள். இந்தஜாதியார் மற்ற வகுப்போடு சம்பந்தங் கொள்வதில்லே.

இங்குள்ளதனவந்தர்களால் காரநேஷன் ஹைஸ்கூல் ஒன்று நடத்தப்படுகிறது. இங்குள்ள அணேக்கட்டும், பாலமும் மிகப் பெரியவை. கந்தர் கலிவெண்பா, மீனுட்சியம்மன் பிள்ளேத் தமிழ் முதலிய நூல்களே இயற்றிய குமரகுருபரர் இங்குதான் பிறந்தார்.



ஆதிச்சநல்லூர் பறம்பு

2. ஆதிச்சநல்லூர்:—இது திருச்செந்தூர்ச் சாலேயில் இருக்கும் பறம்பில் உள்ளது. முன்னுளில் ஆண்ட மன்னர் இங்கு வாழ்ந்து வந்ததாய் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். பூமிக்குள்ளிருந்து எடுபடும், முதுமக்கள் தாழிகளும், மண் பாண்டங்களும், மற்றும் பொருள்களும் சென்னபட்டணம் பொருட்காட்சிச் சாலேயில் போற்றி வைக்கப் பெற்றுள்ளன. இது ஒரு காலம் பெரிய ஊராக இருந்தது என்பதற்கு அடையாளங்களும் கிடைக்கின்றன.

3. ஏரல்:— சுமார் நூறு வருஷங்களுக்கு முன் வெள்ளத்திற்கு அஞ்சியவர்கள் ஒதுங்கிக் குடியேறிய இடம் என்று இதைக் கூறுகிருர்கள். இங்கே வெண்கலப்பாத்திரம் செய்கிருர்கள். இதற்கு மேற்கில் இரட்டைத் திருப்பதிகள் என்ற கோவில்கள் உள்ளன. இங்கு மகமதியர், இந்துக்கள், கிறிஸ்தவர் முத

லிய சமயத்தினர் வாழ்கின்றனர். ஆற்றங்கரை யோரத்தில் சேர்மன் அருணசல நாடார்கோவில் ஒன்று உண்டு. இங்கு வி. எம். எஸ். உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம் இருக்கிறது.

4. கொற்கை:— இது தாம்பிரவர்ணி நதி கடலோடு கலக்கும் இடத்திற்கு நான்கு மைலுக்கு வடக்கில் உள்ளது. முற்காலத்தில் பாண்டியரின் தலைநகராக விளங்கிற்று. அப்பொழுது பெரியதுறைமுகமாக இருந்தது. முத்துக் குளித்தல், நாணயங்கள் அச்சடித்தல், உப்பு விளைவித்தல், சங்கு அறுத்தல் முதலிய தொழில்கள் நடந்துவந்தன. இந்நகரின் அருகில் இன்றும் நாணயங்கள் பல அகப்படுகின்றன. பொருநை நீராலும், கடல் நீராலும் பொங்கப்பட்டு இவ்வூர் அழிந்தது. இவ்வூரில் வெற்றிவேல் பாண்டியன் கட்டிய கண்ணகி கோவில் இருக்கிறது.

5. வல்லநாடு:— இது வல்லநாட்டுப் பறம்புக்குப் பக்கத்தில் உள்ளது. அருகில் உள்ள பொருநையாற்றில் இருந்து இயந்திரங்கள் மூலம், பொற்றையின் உச்சியில் கட்டிய பெருந் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பித் தூத்துக்குடிக்குக் குடிதண்ணீர், குழாய் மூலம் கொண்டு போகின்றார்கள். இங்கே ஒரு சிவன் கோவிலும், போர்டு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடமு முண்டு.

6. கருங்குளம்:—இது ஸ்ரீவைகுண்டத்தின் மேற்கே உள்ளது. மலைமேல் பெருமாள் கோயிலும், கீழே சத்திரமும் இருக்கின்றன. இங்கு உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்று இருக்கிறது.

7. பழையகாயல்:— இது கடற்கரையில் இருந்து இரண்டு மைல் தூரத்தி லுள்ளது. முன்னொரு காலத்தில் புகழ்பெற்ற துறைமுகமாக இருந்தது. இங்கே பழைய நாணயங்கள் கிடைக்கின்றன. சங்கமுகேசர் கோயிலிருக்கிறது. பரதக்கிறிஸ்தவர்களும், சிலமகமதியர்களும் இருக்கின்றனர். இங்கு ஒரு கத்தோலிக்க உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம் இருக்கிறது. பங்குக்குருவும் இருக்கிறார்.

8. சாயர்புரம்:— இது சாமுவேல் சாயர் என்பவரால் ஏற்பட்டது. இங்கு முன்னாளில் கால்டுவெல் காலேஜ் ஒன்று இருந்தது. இப்பொழுது இங்கே போப்ஸ் மெமோரியல் ஹைஸ்கூல் இருக்கிறது. சர்க்கிள் சேர்மன் இருக்கிறார். பெண்களுக்கு மிடில் ஸ்கூல் ஒன்று இருக்கிறது.

9. பண்ணை விளை:— இது சர்க்கிள் சேர்மன் இருக்குமிடம். கிறிஸ்தவர்கள் அதிகம். இங்கு ஒரு மிடில் ஸ்கூல் இருக்கிறது. இதற்குப் பக்கத்தில் பெருங்குளமிருக்கிறது.

10. புதுக்கோட்டை:— இது ஒரு மிட்டா. இங்கு மிட்டாதார் தரும சத்திரமும், உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன. இது ஒரு மிஷன் சர்க்கிள். இதன் தென் மேற்கேயுள்ள முடிவைத்தானேந்தலில் இரண்டு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன.

11. தூத்துக்குடி:— இது தென் இந்திய இருப்புப்பாதை முடியும் இடம். ஜன நெருக்கம் அதிகம். இது ஒரு முனிசிபல் டவுன். இங்கு எடுக்கும் மின்சாரம் திருநெல்வேலி,

பாளையங்கோட்டை முதலிய இடங்களுக்குப் போகின்றது. இதன் சிறப்பைப்பற்றி முன்பு படித்திருக்கிறீர்கள் அல்லவா?

---

6. திருச்செந்தூர் தாலூகா.

இது நமது ஜில்லாவில் கிழக்கில் சமுத்திரக்கரையை அடுத்துள்ளது. இதன் பெரும் பாகம் மணலாயும், தேரி என்னும் செம்மண் பிரதேசமாயுமுள்ளது. இதன்வட எல்லையாகத் தாம்பிரவர்ணி அமைந்திருக்கிறது. தாம்பிரவர்ணியின் உதவியால் சுமார் 1000 ஏக்கர் வரை நன்செய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. பனைமரங்கள் ஏராளமாக உள்ளன. இங்குள்ள ஜனத்தொகையில் 5ல் ஒரு பாகம் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

1. திருச்செந்தூர்:—இத்தாலூகாவின் தலைநகர் கடற்கரையை அடுத்துள்ளது. இங்குத் தாலூகாபீஸும், சப்மாஜிஸ்ட்ரேட் ஆபீஸும், போர்டு ஆஸ்பத்திரியும், போர்டு ஹைஸ்கூலும் உள்ளன. ஸம்ஸ்கிருத பாடசாலை ஒன்று இருக்கின்றது. ஆங்காங்கு மடங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள சுப்பிரமணிய சுவாமி கோவில் மிகப் பிரசித்தி பெற்றது. வைகாசி விசாகமும், மாசித் திருநாளும் விசேடம். இங்கு ஏராளமான ஜனங்கள் வந்துபோவார்கள். இங்குத் தென்னிந்திய ரயில் பாதை முடிகிறது. இங்கிருந்து உடங்குடிக்கும், திசையன் விளைக்கும் சிறிய மோட்டார் ரயில்வண்டியில் போகலாம்.

வீரபாண்டியன்பட்டினம், ஆலந்தலை, குலசேகரப்பட்டினம், மணப்பாடு முதலியவைகள் இத் தாலூகாவின் கடற்கரை ஊர்கள்.

2. ஆழ்வார்திருநகரி:— (தென் கரை) இது ஒரு வைஷ்ணவஸ்தலம். இங்கு நம்மாழ்வார் அவதரித்தார். மிஷன் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலும், ஹிந்து மிடில் ஸ்கூலும், ஜில்லா போர்டு சத்திரம் ஒன்றும் இங்கு இருக்கின்றன. இதன் மூன்று வது மைலில் உள்ள தென் திருப்பேரையில் எஸ். பி. ஜி. உயர்தர ஆரம்பப்பாடசாலை ஒன்று இருக்கின்றது.



காயல்பட்டினம் பள்ளிவாசல்.

3. காயல் பட்டினம்:— இது சமுத்திரக்கரை ஓரத்தில் இருக்கிறது. இங்கு மகமதியர்கள் அதிகம். அநேக பள்ளிவாசல்கள் இருக்கின்றன. இங்கே உப்பு விளைகின்றது.

4. ஆறுமுகநேரி:— உப்புவிளைகின்றது. நாடார்கள் நிறைந்த இடம். இங்குள்ளவர்கள் வாணிபம் செய்கி

முர்கள். ஹிந்து உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்று இருக்கின்றது.

5. குறும்பூர்:— இங்கு R. C. பள்ளிக்கூடம் இருக்கிறது. பங்குக் குரு சேதுக்குவாய்த்தானில் இருக்கிமுர். பக்கத்தில் உள்ள நாலுமாவடியில் இரண்டு உயர்தர ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன. அங்கு மிஷன் சர்க்கிள் சேர்மன் ஒருவர் இருக்கிமுர்.

6. ஆத்தூர்:— இது தாம்பிரவர்ணிக் கரையிலுள்ளது. இதைச் சோமநாத க்ஷேத்திரமெனச் சொல்லுவார்கள். இங்கே ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது.

7. நாசரேத்:— இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். மெஞ்ஞானபுரம், சாத்தான்குளம் போகிறவர்கள் இங்கு இறங்கித்தான் போகவேண்டும். இங்குக் கிறிஸ்தவர்கள் மிகுதி. இது நாடார்கள் நிறைந்த இடம். ஆண், பெண் உயர்தரக் கலாசாலைகளும், மிஷன் ஆஸ்பத்திரியும், பெண்கள் ஆசிரியைப் பாடசாலையும், கைத்தொழிற்சாலையும் உண்டு. இங்கு எஸ். பி. ஜி. சர்க்கிள் சேர்மனு மிருக்கிமுர். இவ்வூரில் உள்ள மிஷன் கோவிலின் கோபுரம் மிகப் பெரிதாகவும், உயரமாகவும் இருக்கிறது. நாசரேத்தையடுத்துள்ள பிரகாசபுரம், மூக்குப்பேரியில் மூன்று ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளும், செவந்த் டே அட்வண்டிஸ் காலேஜும் உள்ளன. மூக்குப்பேரி ஒரு மிஷன் சர்க்கிள்.

8. மெஞ்ஞானபுரம்:— இங்குக் கிறிஸ்தவர்கள் அதிகம். பெண்கள் படிக்கும் எலியட் டக்ஸ் போர்ட் மிடில் ஸ்கூல் உண்டு. தச்சுவேலை, சித்திரவேலை முதலியவைகள் கற்பிக்கப்படுகின்றன. இங்கே வி. எம். எஸ். பாய்ஸ் ஹைஸ்கூலும் இருக்கிறது. இங்கு ஒரு சர்க்கிள் சேர்மன் இருக்கிமுர். இங்குள்ள பவுல் ஆலயம் மிகவும் சிறப்புற்றது.

9. காயாமொழி:—இங்கு ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையும், பெண் பள்ளிக்கூடமும் இருக்கின்றன. இங்குச் சில மகம்மதியர்களும் வசிக்கிமுர்கள். இவ்வூருக்கு 2½ மைலுக்குத் தெற்கேயுள்ள பரமங்குறிச்சியில் ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது.

10. சாத்தான்குளம்:— இங்குக் கிறிஸ்தவர்கள் அதிகம். மகம்மதியர்களும் இருக்கிமுர்கள். வியாபாரம் அதிகமாய் நடைபெறுகிறது. இங்கு இரண்டுமிஷன்உயர்தரஆரம்பப்பாடசாலைகளும், மகம்மதியர் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலும் இருக்கின்றன. இங்கு ரோமன் பங்குக்குரு இருக்கிமுர். கன்னியர் மடமும், பெண் பள்ளிக்கூடமும் உள்ளன. மிஷன் சர்க்கிள் சேர்மனும் இருக்கிமுர். இங்குச் சிவன் கோவிலும், அழகிய தெப்பக்குளமும், கோபாலகிருஷ்ண இலவச வாசகசாலையும் இருக்கின்றன. வாரச்சந்தையும் கூடுகின்றது. இதற்குக் கிழக்கே உள்ள முதலூரில் கிறிஸ்தவக் கோவிலும், உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன. இது ஒரு மிஷன் சர்க்கிள்.

11. உடங்குடி:- இங்கு ரோமன் பங்குக் குரு இருக்கிமுர். கன்னியர் மடமும், பெண் பள்ளிக்கூடமும் உள்ளன. இங்குச் சைவப் பிரகாச வித்தியாசாலா என்ற ஒருஹையர் எலிமெண்டரி ஸ்கூலுண்டு. இங்கு ஒரு வாரச் சந்தை கூடுகிறது. இதற்குப் பக்கத்தில் உள்ள கிறிஸ்திய நகரத்தில்

மிஷன் ஆஸ்பத்திரியும், உயர்தர ஆரம்பப் பாடசாலையும் உண்டு. இது ஒரு மிஷன் சர்க்கிள்.

7. நாங்குநேரித் தாலுகா.

இத்தாலுகா நமது ஜில்லாவின் தென்பாகத்தில் உள்ளது. இதன் கீழ்ப்பாகம் பெரும்பாலும் மணற்காடாக இருக்கும். இது அநேகமாய் வறண்ட செம்மண் பிரதேசம். இங்குப் புன்செய்ப் பயிர்த் தொழில் நடைபெறுகின்றது. பனங்காடுகளும் அதிகம். மேற்குப் பாகம் நன்செய்ச் சாகுபடிக்குத் தகுந்த இடம்.

1. நாங்குநேரி:— இது இத்தாலுகாவின் தலைநகர். இங்கிருந்து நாலாபக்கங்களுக்கும் சாலைகள் செல்லுகின்றன. இங்குத் தாலுகா ஆபீசும், சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், கலால் இலாகா சர்க்கிள் ஆபீசும், போர்டு ஹைஸ்கூலும், வானுவாமலை மடமும் இருக்கின்றன. ஜீயர் என்னும் குரு ஒருவர் இருக்கிறார். இங்குள்ள கோவிலில் தங்கத்தேரும், எண்ணெய்க் கிணறும் இருக்கின்றன. இங்கு நடக்கும் பங்குனி உத்தரத் திருநாள் மிகவும் விசேஷமானது. இங்கே திங்கள்தோறும் சந்தை கூடுகிறது.

2. டோனவூர்:— இங்கு ஒரு ஸி. எம். எஸ். உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. இது சர்க்கிள் சேர்மன் உள்ள இடம். இங்கு மிஷன் ஆஸ்பத்திரியும், பெல்லோஷிப் போர்டிங் பள்ளிக்கூடமும் இருக்கின்றன. அதில் கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

3. களக்காடு:— இது சேர்மாதேவிக்குத் தெற்கே பத்தாவது மைலில் இருக்கின்றது. இங்குள்ள கோவில் திருவாங்கூர் வீரமார்த்தபாண்டியனால் கட்டப்பட்டது. முற்காலத்துக்கோட்டையின் அம்சங்களை இங்கே காணலாம். இங்கு ஏழாவது எட்வர்ட் காரநேஷன் உயர்தர ஆரம்பப் பாடசாலையும், மகமதியர் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடமும் இருக்கின்றன.

4. திருக்குறுங்குடி:-இது மகேந்திரகிரியின் அடிவாரத்திலுள்ள ஒரு



திருக்குறுங்குடி

விஷ்ணு ஸ்தலம். அதனுள் சிவன் கோவிலும் இருக்கிறது. இது திருமங்கை ஆழ்வார் முத்தி பெற்ற இடம். இங்கு ஏழைகளுக்கான போர்டு அன்னதான சத்திரமும், ஹையர் எலிமெண்டரி ஸ்கூலும் இருக்கின்றன.

5. ஏர்வாடி:—இங்கு மகமதியர் அதிகம். இங்கே போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்று உண்டு. இங்குள்ளவர்கள் நெசவுத் தொழில் செய்கிறார்கள்.

6. வடக்கன்குளம்:— இது நாகர்கோவிலுக்குப் போகும் பாதையின் விலக்கிலிருந்து மூன்றாவது மைலிலுள்ளது. இங்கு லூதர் மிஷன் பாதிரியாரும், ரோமன் பாதிரியாரும் இருக்கின்றனர். இங்கு லூதர் மிஷன் ஹைஸ்கூலும், ரோமன் கத்தோலிக்க ஹைஸ்கூலும், கன்னியர்

மடமும், பெண் பள்ளிக்கூடமும் உள்ளன. இங்குள்ள ரோமன் கோவில் பெரியது. இங்கு மாதுளம் பழம் அதிகம். பட்டும் உற்பத்தியாகிறது.

7. பணகுடி:—இங்குப் போர்டு மகமதியர் ஸ்கூலும், ஹாஸ்டேல உயர்தர ஆரம்பபப் பாடசாலையும் இருக்கின்றன. பனை நார், பனை வெல்லம், நெல், பருத்தி, விறகு முதலியன வெளி யிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

8. வள்ளியூர்:—இது சுப்பிரமணிய ஸ்தலம். இங்கு ரட்சண்ய சேனைப் (Salvation Army) பாதிரியார் இருக்கின்ருர். லூதர் மிஷன் மிடில் ஸ்கூலும், போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன.

9. ராதாபுரம்:— இங்குள்ள சிவன் கோவில் புகழ் பெற்றது. இங்கு ஒரு சப் மாஜிஸ்ட்ரேட் ஆபீஸும் உண்டு.

10. கூடன்குளம்:— இங்கு மிஷன் சர்க்கிள் சேர்மன் இருக்கிருர். உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது.

11. கள்ளிகுளம்:— இங்கு ரோமன் பங்குக்குரு இருக்கிருர். கன்னியர் மடமும், உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன.

12. சமூகரெங்கபுரம்:— இது செல்வ மிகுந்த ரெட்டியார்கள் நிறைந்த இடம். உயர்தர ஆரம்பப் பாடசாலை இங்கு இருக்கிறது.

13. இட்டமொழி:-இங்கு ஹைஸ்கூல் ஒன்றுண்டு. இது கிறிஸ்தவர்கள் நிறைந்த இடம்.

14. திசையன்விளை:- இவ்வூரில் வெள்ளிக்கிழமை அன்று ஓர் பெரிய சந்தை கூடும். இங்குக் கதர் நெசவு அதிகம். இங்கு ஒரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் இருக்கின்றது.

15. இடையன்குடி:— இங்குக் கால்டுவெல் சாமியார் இருந்தார். S. P. G. மிஷன் சர்க்கிள் சேர்மன் இருக்கிருர். இங்கு ஒரு மிடில் ஸ்கூல் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பெண்களுக்காக உயர்தர ஆரம்பப் பெண் பாடசாலையும் உண்டு. இங்கு கிறிஸ்தவர்கள் அதிகம். இதனருகேயுள்ள ஆனைகுடியில் ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம் இருக்கின்றது.

16. விஜயநாராயணம்:- இங்கே பெரியகுளமுண்டு. செவ்வாய்க் கிழமையன்று சந்தைகூடும்.

8. அம்பாசமுத்திரம் தாலுகா.

இது மலையடர்ந்த தாலுகா. மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் தாம்பிரவர்ணி, கருணையாறு, மணிமுத்தாறு முதலிய நதிகளால் இங்குள்ள இடங்கள் செழிப்புற்று இருக்கின்றன. இத்தாலூகாவில் பாயும் கால்வாய்கள் பல. அவற்றுள் கன்னடியன் கால் பாசனம் முக்கியமானது. நெல் விளைவு மிகுதி. நல்ல ரஸ்தாக்களும் இருக்கின்றன. திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்துக்குப் போகும் ரயில்பாதை இதன் வழியாகச் செல்லுகிறது. இங்குள்ள வானதீர்த்தம், கலியாணி தீர்த்தம் முதலியவைகள் தீர்த்த கட்டங்களில் முக்கியமானவை. இங்குப் பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து போவார்கள்.

1. அம்பாசமுத்திரம்:— இது தாலூகாவின் தலைநகர். இங்குச் சிங்கம்பட்டி ஜமீன்தாரால் கட்டப்பட்

டுள்ள தீர்த்தபதி ஹைஸ்கூலும், ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. இங்குள்ள ஹைஸ்கூலின் ஹாஸ்டல் அதிக வசதியுள்ளதாகக் கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இங்குத் தாலூகாபீஸ், மாஜிஸ்ட்ரேட் கோர்ட், முனிசிப்கோர்ட், மலேரேஞ்சு ஆபீஸ் முதலியவைகள் அமைந்துள்ளன. இங்கு விவசாயப் பண்ணை ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. அதில் நெற்பயிர் சாகுபடி செய்யும் விதத்தைக் கற்பித்தும், தகுந்த இலாபம் அடைவதற்கான நல்ல வித்துக்களைத் தயார் செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தும் உதவுகிருர்கள். இங்கு ஒரு மிஷன் உயர்தர ஆரம்பப் பெண் பாடசாலையும், போர்டு உயர்தர ஆரம்பப் பெண் பாடசாலையும் இருக்கின்றன. சனிக்கிழமை தோறும் சந்தை கூடுவது வழக்கம்.

2. கல்லிடைக்குறிச்சி:—இங்குப் பிராமணர்கள் வாழும் 18 தெருக்களும் பார்க்க வெகு அழகாக இருக்கும். இங்குச் செல்வம் மிகுந்த அநேக பாங்கர்களும் இருக்கின்றனர். இங்குக் கச்சை, துண்டுமடி, மரம் முதலிய வியாபாரங்கள் நடைபெறுகின்றன. இங்குள்ளவர்கள் திருவாங்கூர், கொச்சி முதலிய இடங்களில் உள்ளவர்களோடு வாணிபம் நடத்துகிருர்கள். இங்கு ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலையும், ஜார்ஜ் மிடில் ஸ்கூலும் இருக்கின்றன.

3. வீரவநல்லூர்:—இங்கு நெல் விளைவு அதிகம். இங்குள்ள அடவியார், கைக்கோளர், இல்லத்துப் பிள்ளைமார், சௌராஷ்டிரர் முதலியவர்களால் பட்டுப் புடவைகளும், துண்டு மடிகளும், சரிகை வேஷ்டிகளும் நெய்யப்பட்டு வருகின்றன. கதர்த் துணிகளும் நேர்த்தியாய் நெய்யப் படுகின்றன. இங்கு ஒரு மிடில் ஸ்கூலும், ஒரு அனுதைப் பிள்ளைகள் உயர்தர ஆரம்பப் பாடசாலையும் இருக்கின்றன.

4. கார்குறிச்சி:—இங்கே ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. இதன்பக்கத்திலுள்ள கூனியூரில் ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையும், ஒரு பெண்பாடசாலையு மிருக்கின்றன.

5. சேர்மாதேவி:— இது ஒரு டிவிஷன். இங்கு சப்கலெக்டர் ஆபீஸ், லோக்கல் பண்டு இஞ்சினீயர் ஆபீஸ், கவர்ன்மென்ட் இஞ்சினீயர் ஆபீஸ், ஆஸ்பத்திரி, கமிட்டி உயர்தர ஆரம்பப் பாடசாலை, அப்பன்கோவில் முதலியவைகள் இருக்கின்றன.

6. பத்தமடை:— இது கன்னடியன் கால் ஓரத்தில் இருக்கிறது. மகமதியர்கள் அதிகம். பாய் நெசவுக்குப் பேர்போனது. இங்குள்ள ஹைஸ்கூலில் மாணவர்களுக்குத் தறி நெசவு கற்பிக்கப் படுகிறது.

7. கோபாலசமுத்திரம்:— இது தாம்பிரவர்ணிக்கரையில் இருக்கிறது. இங்கே ஹைஸ்கூல் ஒன்று இருக்கின்றது. இதற்குப்பக்கத்தில்தான் மேலச்சேவல், கீழச்சேவல், பிரான்சேரி என்ற ஊர்கள் இருக்கின்றன.

8. திருப்புடைமருதூர்:— இது தாம்பிரவர்ணிக்கரையில் உள்ள பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்று. இங்குதான் தாம்பிரவர்ணியில் கருணையாறு சங்கமமாகிறது. இவ்வூர்ச் சுவாமியின் பெயர் நாரம்புநாதர். அம்மன் பெயர் கோமதி அம்பாள். இங்குள்ள கோவிலில் சடையன்மாறன் என்ற பாண்டியன், ராஜராஜசோழன் இவர்

களுடைய கல் வெட்டுகள் காணப்படு கின்றன. இங்குத் தைப் பூசத்திரு நாள் நடைபெறும். இதற்குச் சமீ பத்தில் தான் அத்தாளநல்லூர் இருக் கிறது. அது ஒரு விஷ்ணுஸ்தலம்.

9. முக்கூடல்:— இங்குள்ள நாடார்களில் அநேகர் செல்வந்தர். பீடித்தொழில் வெகு மும்முரமாக நடை பெறுகின்றது. தீப்பெட்டியும், பெருங்காயமும் செய்யப்படுகின்றன. இங்கு ஒரு ஹையர் எலிமெண்டரிப் பாடசாலை இருக்கிறது. இங்கு ஒரு வாரச் சந்தை கூடுகிறது. இதை அடுத்துள்ள சிங்கம்பாறையில் ரோ மன் பங்குக்குரு ஒருவர் இருக்கிறார். அங்கு ஒரு பெண் பள்ளிக்கூடமும், கன்னியர் மடமும் உள்ளன.

10. அரியநாயகிபுரம்:— இது தாம்பிரவர்ணி ஆற்றங்கரையில் இருக் கிறது. இங்கே ஒரு உயர்தர ஆரம் பப்பாடசாலையும், ஆஸ்பத்திரியும், ஒரு சிவன்கோவிலும் இருக்கின்றன.

11. பிரம்மதேசம்:— இங்கே யுள்ள சிவன் கோவிலின் சிற்பவேலை விசேஷமானது. இரண்டு யாளிக ளின் வாயிலும், இரு கல்லுருண்டை கள் வெளியே எடுக்கமுடியாதபடி அமைந்துள்ளன. ஒரே கல்லில் செய் யப்பட்ட மணியும், சங்கிலியும் தொங் கிக்கொண்டு இருக்கின்றன.

12. **கடையம்**:- எலுமிச்சம் பழம், ரோஜாப் புஷ்பம், தாழம்பூ முதலி யன இங்கு அதிகம். இங்குள்ள கமிட்டி உயர்தர ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் நெசவுத் தொழில் கற்பிக் கப்பட்டு வருகிறது. திங்கட்கிழமை தோறும் சந்தை கூடுகிறது. பக்கத் திலுள்ள வெங்காடம்பட்டியிலும், வைக்கால்பட்டியிலும் உயர்தர ஆரம் பப் பள்ளிக்கூடங்க ளிருக்கின்றன.

13. பொட்டல்புதூர்:— இங்கு மகமதியர்கள் அதிகம். பள்ளிவாசல் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இங்கு நடைபெறும் கந்திரிக்கு ஏராள மான ஜனங்கள் வருகிறார்கள். இங் கே நெசவுத்தொழில் நடைபெறு கிறது. இவ்வூர் துண்டுகளுக்குப் பேர்போன இடம்.

14. ஆழ்வார்குறிச்சி:—இங்கு ஒரு உயர்தர ஆரம்பப்பாடசாலை இருக்கி றது. இதன் அருகே சிவசைலம் இருக் கிறது. இது பாடல்பெற்ற சிவஸ்த லம். கோவில் மேற்குமுகமாக இருக் கிறது. இங்குள்ள நந்தி அழகானது.

15. ஆம்பூர்:—இங்கு ஒரு உயர் தர ஆரம்பப் பாடசாலை ஒன்று உண்டு. இதற்கு மேற்கே உள்ள கலி யாணிபுரத்தில் ரோமன் பங்குக்குரு இருக்கிறார். கன்னியர் மடமும், உயர் தர ஆரம்பப் பெண் பள்ளிக்கூடமும் இருக்கின்றன.

16. பாப்பான்குளம்:—பிராமணர் களும், பிள்ளைமார்களும், மற்ற ஜாதி யார்களும் இங்கு வசிக்கின்றனர். இங்கு உயர்தர ஆரம்பப் பாடசாலை யும், சிவன்கோவிலும் இருக்கின்றன.

17. பாபநாசம்:— இது ஒரு புண்ணியஸ்தலம். இங்கு அநேக மடங்கள் உள்ளன. படித்துறையில் விநோதமான மச்சங்களையும், மரக் கிளைகளில் குரங்குகளையும் பார்க்கலாம். இது பாடல்பெற்ற ஸ்தலங்களில் ஒன்று. மலைமேல் அகத்தியர் கோவி லும், கலியாணி தீர்த்தமும் உள்ளன. இதற்குச் சமீபத்தில் இருக்கிற விக் கிரமசிங்கபுரத்தில் சிவஞானசுவாமிகள் அவதரித்தார்.

18. சிங்கம்பட்டி, ஊர்க்காடு:— இவை தாலுகாவின் ஜமீன்களாகும். அங்குள்ள மாளிகைகள் வெகு அழகானவை. சிங்கம்பட்டி ஜமீன்தாருக்குத் தீர்த்தபதி என்ற பெயரும் உண்டு.

19. இடையன்குளம்:— இங்கு ஒரு சர்க்கிள் சேர்மன் இருக்கிறார். உயர்தர ஆரம்பப் பாடசாலை இருக்கிறது.

கேள்விகள்.

1. நமது ஜில்லாவில் மிகவும் வறட்சியான தாலுகாக்கள் எவை? அவற்றில் உள்ள முக்கிய பட்டணங்களில் வகைக்கிரண்டு கூறுக.

2. நமது ஜில்லாவில் உள்ள முக்கிய ஜமீன்களைச் சொல்லு.

3. சரித்திர சம்பந்தமான நான்கு இடங்களைச் சொல்லு.

4. நமது ஜில்லாவில் உள்ள இந்து, மகமதிய, கத்தோலிக்க, புராட்டஸ்டண்டு சமயத்தவருக்கு முக்கிய யாத்திரை இடங்கள் எவையெவை?

5. நமது ஜில்லாவில் உள்ள, கோடை காலத்தில் சுகத்திற்காகப் போகக் கூடிய இடம் எது?

திருநெல்வேலி ஜில்லா சரித்திரச் சுருக்கம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது இந்திய நாடு பற்பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்று இருந்தது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசரால் ஆளப்பட்டது. இச்சிற்றரசர்கள் எல்லோருக்கும் தலைமையாகப் பேரரசர் ஒருவர் இருந்தார். அவருக்குச் சிற்றரசர்கள் வரி செலுத்துவது வழக்கம்.

பெருமை வாய்ந்த பாண்டியநாடு பாண்டியரால் ஆளப்பட்டது. இப்பொழுதுள்ள திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்கள் சேர்ந்ததே பாண்டிய நாடாகும்.

இந்நாட்டிற்கு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தலைமைப் பட்டணங்கள் இருந்தன. ஒரு காலத்தில் கடல் கொண்டு ஒழிந்த தென்மதுரை இருந்தது. பின் நமது ஜில்லாவில் உள்ள கபாடபுரம் தலைநகர் ஆயிற்று. இதைப் பாண்டியரே ஆண்டு வந்தனர்.

பின்னர் சோழநாட்டை ஆண்ட சோழர், பாண்டிய நாட்டைக் கைப்பற்றிச் சோழபாண்டியர் என்னும் பெயருடன் முன்னூறு ஆண்டுகள் வரை ஆண்டனர். என்றாலும், பாண்டிய மரபிலுதித்த மன்னர் ஒருவர் மறுபடியும் பாண்டிய நாட்டைச் சோழர் கையிலிருந்து பிடுங்கிப் பாண்டிய நாட்டின் பெயரை நிலை நிறுத்தினர்.

பிறகு பதினான்காம் நூற்றாண்டின் முதலில் இந்நாட்டிற்கு மகமதியர்கள் தலைவராகி, ஐம்பது ஆண்டளவு அரசாண்டனர்.

அப்பொழுது ஹோயஸ்ல குலத்தினரைச் சேர்ந்த ஓர் அரசர் துங்கபத்திரை யாற்றங்கரையில் விஜய நகரத்தை நிலைநாட்டி, தென்னிந்தியாவில் உள்ள எல்லா நாடுகளையும் கைப்பற்றிக் கப்பம் வாங்கினர். அவ்வரசர் மதுரையில் உள்ள மகமதியரைத் துரத்த எண்ணினர். தன் சேனைத்

தலைவரான கம்பன்ன உடையாரை அனுப்பினர். அவர் மதுரையிலிருந்த மகமதியரைத் துரத்திவிட்டார். அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், நாயக்கத் தலைவர்களும் விஜய நகர ராஜனுக்கு உட்பட்டு இந் நாட்டை மேல் பார்த்து வந்தார்கள். எனினும், இடையே அவர்களுக் குட்பட்டுப் பாண்டியர்கள் 1559 வரை ஆட்சி செய்து வந்தார்கள். அவ்வாண்டில் வீரசேகர சோழன் பாண்டியரைத் தோற்கடித்து இந்நாட்டைக் கைப்பற்றினன். பாண்டியனும், அவன் மகனும் சென்று விஜயநகர மன்னரிடம் முறையிட்டுக்கொண்டார்கள்.

அவர் தமது சேனைத்தலைவராகிய நாகம நாயக்கரை அனுப்பித் தனக்குச் சிற்றரசனாக இருந்தும், தனக்கு அறிக்கை இடாமல் மதுரையைக் கைப்பற்றிய சோழனை விரட்டும்படி கூறினர். அப்படியே நாகம நாயக்கர் நாட்டைக் கைப்பற்றிப் பாண்டியனிடம் கொடாமல் தானே ஆள ஆரம்பித்தார். இதைக்கேட்ட கிருஷ்ணதேவராயர் அடங்காக் கோபங் கொண்டு "யார் அவன் தலையைக் கொண்டுவருவார்" என்று கேட்டார். ஒருவரும் அதற்குத் துணிய வில்லை. நாகம நாயக்கரின் மகன் விசுவநாத நாயக்கர் "நான்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டார்.

மதுரைக்குச் சென்றார்; தந்தையைத் தோற்கடித்தார். சிறை பிடித்து, விசயநகர மன்னர் முன்பு கொணர்ந்தார். மன்னர் மகிழ்ந்தார். "உனக்கு என்ன பரிசுகள் வேண்டும்" என்று கேட்டார். விசுவநாத நாயக்கர் தமது தந்தையைக் கொல்லாது விட்டுவிடும்படி மன்னனிடம் கேட்டுக்கொண்டார். அப்படியே அரசர் நாகமநாயக்கரை விடுதலை செய்துவிட்டு விசுவநாதரை மதுரைக்குச் சாசுவத கவர்னராகவும் நியமித்தனுப்பினர்.

இந்த நாயக்கருடைய ஆட்சி 180 ஆண்டுகள் வரை நிலைத்திருந்தது. அவர்களில் கட்டிடங்கள் பல கட்டிய திருமலை நாயக்கரும், சாலை, சத்திரங்களை ஏற்படுத்தித் தானதர்மங்களைச் செய்த இராணி மங்கம்மாளும் பேர்பெற்றவர்கள். பின்னால் இக் குலத்தவர்களுள் முறிவு ஏற்பட நாடு மகமதியர் வசம் ஆயிற்று.

அம் மகமதியரில் இறுதியான நவாப் மகமதலி. அவர் ஆங்கிலேயர் உதவியால் கர்நாடக நவாப் ஆனர். இவரைச் சில காலத்திற்குள் மைசூர் ஐதர் ஆலி எதிர்த்தார். ஆங்கிலேயர் மகமதலிக்குத் துணையாயினர்.

அதற்குச் சன்மானமாகச் சேலம், மதுரை முதலிய ஊர்களின் வருமானம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. அதுமுதல் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்டு வந்தனர்.

பல காரணங்களால் நவாப் நாடுகள் எல்லாம் ஆங்கிலேயர்வசமாயின. அப்பொழுது திருநெல்வேலியும் அவர்கள் கைவசமாயிற்று. பாஞ்சாலங்குறிச்சியார் முதலிய பாளையக்காரரும் தோல்வியுற்றனர். நாடு முழுவதும் விக்டோரியா மஹாராணியார் காலத்தில் ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது.

கேள்விகள்.

1. பாண்டிய நாட்டை ஆதியில் ஆண்டது யார்? விஜயநகர ராஜாக்கள் ஆட்சியின் கீழ் நமது ஜில்லா எப்படி இருந்தது?
2. நாயக்கர்கள் எங்ஙனம் மதுரையைக் கைப்பற்றினர்கள்? நமது ஜில்லா எவ்வாறு ஆங்கிலேயர் வசம் ஆயிற்று?

உலக விஷயங்கள்



சிறுவர்களே ! நாம் வசிக்கும் ஜில்லாவானது பூகோளத்தின் ஒரு சிறு பகுதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். பூமியானது ஒரு உருண்டை வடிவமாக இருக்கிறது. அதனுடைய மத்தியபாகத்தின் சுற்றளவு சுமார் 25,000 மைல் ஆகும். இப்பெரிய உருண்டையின் பெரும்பாலான பாகங்கள் தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குரிய பூ பாகமாக இருக்கின்றன. பூமியை இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். கிழக்குப் பாகத்தில் மேற்குப் பாகத்தைவிடப் பூபாகம் அதிகமாயிருக்கிறது.

பூமியின் பெரிய பாகங்கள் கண்டங்களென்று சொல்லப்படுகின்றன. அக் கண்டங்களாவன.

(1) ஆசியா (2) ஐரோப்பா (3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா (5) அமெரிக்கா என்பனவாம்.

இவற்றுள் முதல் நான்கு கண்டங்கள் கிழக்குப் பாகத்திலும், ஐந்தாவதான அமெரிக்கா என்னும் பெரிய கண்டம் மேற்குப் பாகத்திலும் அமைந்துள்ளன. அமெரிக்கா பெரிய பூ பாகமாயிருப்பதால் அது வட அமெரிக்கா என்றும், தென் அமெரிக்கா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பூமியைச் சுற்றியுள்ள சமுத்திரங்கள் ஐந்து:—அவைகள் முறையே பசிபிக் மகா சமுத்திரம், அட்லாண்டிக் மகா சமுத்திரம், இந்து மகா சமுத்திரம், உத்தர மகா சமுத்திரம், தக்ஷணமகா சமுத்திரம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு கண்டத்திலும் தேசமென்று வழங்கும் சிறு பூபாகங்கள் அநேகம் இருக்கின்றன. நாம் வசிக்கும் இடமானது பூமியின் கிழக்குப்பாகத்தில் உள்ள ஆசியாக் கண்டத்தில் இந்தியா என்னும் தேசமாகும்.

நமது தேசத்திற்குத் தெற்கே யுள்ளது இந்து மகா சமுத்திரம் எனப்படும்

சிறுவர்களே! நாம் ஆகாய விமான மொன்றில் ஏறிக்கொண்டு



ஆகாய விமானம்

பூமியைச் சுற்றி வருவோமானுல், அநேக ஆயிரம் அடிகள் உயரே சென்றவுடன், நம் கண்களினுல் பல விதமான காட்சிகளைக் காணலாம். முதன் முதலாகப் பூமியின் மட்டமானது மிகவும் மேடுபள்ளமாயிருப்பது தெரியும். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வடக்குமுகமாகச் சென்ருல், நமது தேசத்தின் வடக்கு எல்லை



இமயமலைச் சிகரம்

யான இமயமலைக்கு வருவோம். வழியில் அநேக ஆறுகளும், பட்டணங்களும், காடுகளும், மலைகளும் காணப்படுகின்றன. வடக்கே செல்லச் செல்ல உஷ்ணம் குறைவாகவும், குளிர்ச்சி அதிகமாகவும் இருப்பதை உணரலாம். அங்கிருந்து இன்னும் வடக்கே சென்ருல் மத்திய ஆசியாவில் பலமலைகளும், பல ஆறுகளும், பல பீட பூமிகளும் காணப்படும்.



புல்வெளி மைதானம்

இன்னும் வடக்கே சென்ருல் புல் நிறைந்த மிகவும் விசாலமான மைதானங்கள் கண்களுக்குப் புலப்படுகின்றன. அவ்விடத்தில் பெரும்பாலும் ஜனங்கள் ஆடு மாடுகளை மந்தை மந்தையாய் வளர்த்து ஜீவனம் செய்கிருர்கள்.

மேலும் சிறிது வடக்கே சென்ருல் பூமியானது அதிக சீதளமாகவும், பனியினுல் மூடப்பட்டும் காணப்படு

எஸ்கிமோ வீடு

கிறது. இவ்விடத்தில் எஸ்கிமோ என்னும்ஜாதியார் பனிக்கட்டிகளால் வீடு கட்டிக்கொண்டு, பிராணிகளின் தோலை உடையாக அணிந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

இவைகளை யெல்லாம் பார்த்து விட்டு, இன்னும் சிறிது வடக்கே சென்றால் வட துருவத்துக்கு வரலாம். வடதுருவமானது எப்பொழுதும் பனிக் கட்டிகளினால் மூடப்பட்டிருக்கிறது. இங்கு வருஷத்தில் ஆறு மாதம் வெளிச்ச மாகவும், ஆறு மாதம் இருட்டாகவும் இருக்கிறது. இருட்டுக் காலங்களில் இங்கிருக்கும் ஜனங்கள் தெற்கே சென்று விடுகிறார்கள்.

இதனைக் கடந்து அப்புறம் சென்றால் மறுபடியும் ஆசியாவின் பின்புறத்திலுள்ள வடக்கு மகா சமுத்திரத்திற்கு வரலாம். அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கு முகமாகத் திரும்பினால் மறுபடியும் ஆச்சரியத்தை அனுபவிக்கலாம். திரும்பவும் நேராகச் சென்றால் வட அமெரிக்காவுக்கு வந்து சேருகிறோம். வட ஆசியாவைப்போல இவ்விடத்திலும் பனிக்கட்டிகள் திரள் திரளாகப் பூமியின்மேல் படிந்திருக்கின்றன. இங்கிருந்து தெற்கே சென்றால் கானடா என்னும் தேசத்திலுள்ள அநேக ஆறுகளையும், ஏரிகளையும் காணலாம்.

இன்னும் அதற்குத் தெற்கே சென்றால் ஐக்கியமாகாணங்களுக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்தில் பெரிய ஆறுகளும், மலைகளும், காடுகளும் இருக்கின்றன. இவ்விடத்தில் குடியிருப்பவர்கள் ஐரோப்பியர்கள். சில விடங்களில் அமெரிக்காவின் ஆதிக் குடிகளான செவ்விந்தியர்களைக் காணலாம். ஐக்கியமாகாணங்களில் பல விடங்களில் ஆப்பிரிக்காவிலிருந்து பல நூற்றாண்டுகளுக்குமுன் கொண்டு வரப்பட்ட நீகிரோ ஜாதியினர் வசித்து வருவதைப் பார்க்கலாம்.

திரும்பவும் தெற்குநோக்கிப் பிரயாணம் செய்தால் பூமியானது வர வரக்குறுகி இரண்டு பக்கங்களிலும் சமுத்திரங்களால் உட்செல்லப்பட்டு, அமெரிக்காக் கண்டமானது இரண்டாகப் பிரிக்கப்படுவது நன்கு விளங்கும். தெற்கே மெக்ஸிகோ என்னும் தேசம் காணப்படுகிறது.

இன்னும் தெற்கு நோக்கிச் சென்றால் தென்னமெரிக்கா வந்து சேரலாம். அவ்விடத்தில் அடர்ந்த பல பெரிய காடுகள் இருக்கின்றன. உலகத்தில் மிகவும் பெரிதான அமேஜான் என்னும் நதி ஓடுகிறது. கடைசியாகக் கேப் ஹார்ன் என்னும் தென் அமெரிக்காவின் தெற்குக் கோடி முனைக்கு வருகிறோம்.

இங்கிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் வழியாக மத்திய ஆப்பிரிக்காவுக்குச் செல்லுவோம். நடு வழியில் நூற்றுக்கணக்கான தீவுகளைக் காணலாம். மத்திய ஆப்பிரிக்காவில் மலைகள், பீடபூமிகள், ஆறுகள், ஏரிகள், ஏராளமாய் இருக்கின்றன. அவ் விடத்திலுள்ள பலவகைக் காட்டு மிருகங்களைக் கவனியுங்கள். (1) காண்டாமிருகம் (2) யானை (3) சிங்கம் முதலியவைகள் மிகுதியாய் இருப்பதைக் காணலாம். இந் நாட்டு ஜனங்கள் கரிய நிறமுள்ள நீகிரோவர்கள். இப்பிரதேசத்திலும் அநேக இடங்களில் ஐரோப்பியர்கள் குடியேறியிருப்பதைப் பார்க்கலாம்.

இதற்குச் சிறிது வடக்கே சென்றால், உலகத்திலுள்ள பெரிய நதிகளில் ஒன்றான நைல் நதியைக் காணலாம். இதற்கு மேற்காக ஸஹாரா என்னும் பெரும்பாலைவனம் தோன்றுகிறது. இங்கிருந்து கிழக்கு முக

மாகப் பிரயாணம் செய்தால் இந்து மகா சமுத்திரத்தையும், அதன் மத்தியிலுள்ள பல தீவுகளையும் கடந்து ஆஸ்திரேலியா என்னும் கண்டத்



ஆஸ்திரேலியா தங்கச் சுரங்கம்

துக்கு வரலாம். இதன் மேற்குப் பாகங்களில் அனேக தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. இதில் ஆங்கிலேயர்கள் குடியேறி வசிக்கின்றனர். இங்குச் சில விசித்திரமான மரங்களும், பிராணிகளும் இருப்பதைப் பாருங்கள். ஆஸ்திரேலியாவின் மத்திய பாகத்திலும் ஒரு பெரிய பாலை வனம் இருக்கிறது.

இதுவரையில் நாம் செய்துவந்த சுற்றுப் பிரயாணத்தில் மிகவும்முக்கியமாகக் கவனிக்கவேண்டிய கண்டம் ஒன்றைஇன்னும்பார்க்கவில்லை. அது தான் ஐரோப்பாக் கண்டமாகும். மறுபடியும் ஆகாயவிமானத்திற் கிளம்பி அரபிக்கடலைக் கடந்து, ஆப்பிரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள மத்தியதரைக் கடலுக்குவந்து சேருவோம். இங்கிருந்து கவனித்தால் ஐரோப்பாக் கண்டத்தைக்காணலாம். இதில் மிக்க நாகரிகம் பெற்ற பல தேசங்க ளிருக்கின்றன. இதன் மத்தியில் ஆல்ப்ஸ் என்னும் உயர்ந்த மலை இருப்பதைப் பாருங்கள். அதனுடைய சிகரங்கள் எப்பொழுதும் பனியினால் மூடப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாக் கண்டத்தில், பாரிஸ், லண்டன், ம்யூனிக், ரோம், பர்லின், பிட்ரோகிராட் முதலிய உலகப் பிரசித்திபெற்ற பெரிய நகரங்களைக் காணலாம். இக்கண்டத்தில் பல இடங்களில் பெரிய கைத்தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பல உலகக் காட்சிகளைப் பார்த்துவிட்டு மறுபடியும் நமது தேசத்திற்குத் திரும்புவோம்.

பயிற்சிக் கேள்விகள்.

1. கண்டங்கள் என்றால் என்ன? பூமியில் எத்தனை கண்டங்கள் இருக்கின்றன? அவற்றின் பெயர்கள் என்ன? நமது தேசம் எந்தக் கண்டத்தில் இருக்கின்றது?
2. நமது தேசத்தை யடுத்திருப்பது எந்த மஹா சமுத்திரம்?
3. எஸ்கிமோ ஜாதியாரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. ஆஸ்திரேலியாவில் எந்த உலோகம் விசேஷமாகக் கிடைக்கிறது?
5. ஐரோப்பாவில் உலகப் பிரசித்தி பெற்ற சில பட்டணங்களின் பெயரைக் கூறுக.

முற்றிற்று.

Printed at the Excelsior Power Press, Madura:-38.